ாடோடி

NADODI

7

வி லை
ரூபாய
ஒன்

"அட்கோ" ப்ராடக்ட்ஸ்





மச்சு வீடு வேண்டுமா?
குச்சு வீடு வேண்டுமா?

மச்சுவீடு வேண்டுமா அல்லது குச்சுவீடு வேண்டுமா என்று கேட்டால் எல்லோரும் மச்சு வீடுதான் வேண்டும் என்பார்கள். ஆனால் அதே கேள்வியைச் சற்று மாற்றி "வாடகைக்குக் கிடைக்கும் மச்சுவீடு வேண்டுமா அல்லது சொந்தமாக உள்ள ஒரு குச்சுவீடு வேண்டுமா" என்று கேட்டால் எல்லோரும் குச்சு வீடுதான் வேண்டும் என்பார்கள். குச்சுவீடாக இருந்தாலும் சொந்தமாக ஒரு வீடு வைத்துக்கொள்வதில் அவ்வளவு ஆனந்தம் இருக்கிறது.

ஆகவே சொந்தமாக ஒடு வீடு கட்டிக்கொள்ள உடனேயே ஆரம்பியுங்கள்.

வீடு கட்டுவதற்கு வேண்டிய எல்லாத் தளவாட சாமான்களும் எங்களிடம் விலை சரசமாய்க் கிடைக்கும்.

HONE: 8226. TEL

SSOCIATED TRADING CORPOR

33. WALLERS ROAD, MOUNTRO

.... MADRAS ....

நாடோடி

புத்தகம் ஏழு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JAN 1947
MADRAS

2337
ACC-TNA
033

பிரசுரம்
நாடோடி
தியாகராயநகர் ★ சென்னை, 17.

பொருளடக்கம்

	பக்கம்
கதைகள் :	
எங்கள் உபாத்தியாயர்	17
விபரீதம்	25
தாமா	58
வீடு திரும்பிய வீரன்	72
தீபாவளிப் புடவை	97
கட்டுரைகள் :	
உலகம் பலவிதம்	7
சிமையில்	10
மான்யம்	27
தசை	38
எம். பி.	91
நாடகங்கள் :	
வேஷ்டியும் புடவையும்	33
விறகு வெட்டி	41
புதிய சட்டப்படி	64
வேறு விஷயங்கள் :	
ஹே, அனுராதா !	14
சிங்கும் மார்வாடியும்	53
ஸ்திரீகளுக்கு மட்டும்	81
குடும்பவாழ்க்கை	89
துக்கடா :	
ஸ்திரீகள் தவறு பண்ணினுல்	26
மணி என்ன ?	98
ஒரு சீனக்கதை	71
டன்னலில் நடந்தது	80
படங்கள் :	
இடைக்கால சர்க்கார்	15
லண்டன் பாதாள ரயில்வண்டி	11
எல்லைப் புறத்தில் ஜவாஹர்	13
ஆங்கில அழகி	47
பீங்கான் தட்டுகள்	83
ஆர்ட் அனுபந்தம் :	
எல்லைப் புறத்தில் ஜவாஹர்	49
ஜப்பான் ஆர்ட் படங்கள்	85

MINERVA GUIDES

MINERVA

THERE IS A MINERVA GUIDE TO EVERY TEXT

INTER 1947.

	Rs.	A.	P.
Richard II (Minerva Text) ...	1	0	0
Do. (Guide) ...	1	9	0
Minor Poems (Text with Notes) ...	1	9	0
Goldsmith's Essays (Minerva Text)...	1	4	0
Do. (Guide)	2	8	0
Models of Comparative Prose ...	2	8	0
Quentin Durward (Guide) ...	1	9	0
Sykes: Tagore (Guide) ...	0	12	6
Story of the Aeneid (Guide) ...	0	12	6

B.A. 1947.

	Rs.	A.	P.
Henry IV Pt. I (Guide) ...	2	0	6
Othello (Guide) ...	2	0	6
Modern Poetry (Text with Notes) ...	3	12	0
Preface to Shakespeare (Text)	0	10	0
Do. (Guide)...	1	14	0
Idea of a University (Guide) ...	2	0	6
Modern English Prose I Series (Guide)	3	7	0
The Woodlanders, Queen Elizabeth and Tagore: Reminiscences (Guides in one volume) ...	3	12	0

There is a Minerva Answer for every Question

COPIES CAN BE HAD OF YOUR LOCAL DEALER OR

The Minerva Publishing House, Halls Road, Egmore, Madras 8

ஒரு பக்கம் நேதாஜியும் மற்றொரு பக்கம் பண்டிட் ஜியும் சூழ காந்திஜி நமக்கெதிரே காட்சியளிக்கிறார். எதிரே துவஜஸ்தம்பம் ஒன்று இருக்கிறது. காந்தி மகான் தடக்கென வழக்கமாக உள்ள பொக்கை வாய் புன் முறுவலுடன் தமது திருக்கரங்களால் கொடி யேற்று விழாவை நடத்துகிறார். மூவர்ணக் கொடி வானத்தில் கிளம்பி அசைந்தாடுகிறது. நேதாஜி தமது ராணுவ முறையில் 'சல்யூட்' செய்வதுதான் தாமதம், சபையோர்களின் குதூகல ஆரவாரம் வான ளாவுகிறது.—இவ்விதமான மறக்க முடியாத காட்சி யுடன் ஆரம்பமாகும்.

குடும்ப வாழ்க்கை

என்னும் இந்த நாடகத்தை

சென்னை மவுண்ட் ரோட்

நியூ தியேட்டரில்

ஸ்ரீ ராமபாலகான விநோத சபையார்

விமரிசையுடன் நடத்துகிறார்கள்

தினசரி மாலை 6-15 மணிக்கு

வியாழன், இரவு 9-15 மணிக்கு

ஞாயிறு இரண்டு ஆட்டங்கள் பகல் 3 மணி,

மாலை 6-30 மணி.

பிரதி திங்கள் விடுமுறை.

அட்வான்ஸ் புக்கிங் உண்டு.

சைபால்

CIBOL

முகப்பரு, சேத்துப் புண், சொறி, சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

டின் 1 க்கு விலை 0—6—0

அயோடிஸால்

IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக் கூடிய வெட்டை கிரந்தி மொழி முடக்கு, கண்ட சூலைகள் வாதம், வாய்வு மேக ரோகங்களையும், தோலைப் பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு திரேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தை சுத்தி செய்து மலப் பிரவர்த்தியை ஒழுங்காக்கி, ரத்த விருத்தியை உண்டாக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2.

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

நியூ ஏஷியாடிக்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், நியூ டில்லி.

பி. எம். பிர்லா, சேர்மன்

இன்ஷ்யூர் செய்து கொள்ளவோ ஏஜன்டாகச் சோந்து நல்ல சம்பாத்தியம் செய்யவோ ஏற்ற கமபெனி இதுவே.

ஆயுள், தீ, மோட்டார், கப்பல் விபத்து முதலான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் இருக்கின்றன.

எல்லா இடங்களிலும் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ் சேர்க்க ஏஜெண்டுகள் தேவை.

கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும் :—

A. சுப்பையா

மானேஜர்,

289, லிங்க செட்டி தெரு, ஜி.டி., மதராஸ்.

குழந்தை என்ருல் யாருக்குத்தான் ஆசை இல்லை?

ஆனுல் குழந்தை வளர்ப்பில் நாம் சரியான கவனம் செலுத்துகிருேமா என்பது சந்தேகந்தான். குழந்தைக்கு அத்யாவசியமான தாய்ப்பாலை எப்படி விருத்திசெய்யலாம் என்று கவனிக்காமல், கண்ட கண்ட புட்டிப் பால்களைக் கொடுத்துக் கடைசியில் கட்டி. வைத்தியர்களைத் தேடிப் போகிருேம். இதை விட மதியீனம் வேறு உண்டா?

ஸ்திரீகளுக்குப்
பால் பெருகுவதற்கும்,
கர்ப்பத்தில் உள்ள
சிசு நன்கு வளர்வதற்கும்,
பிரசவத்திற்குப் பிறகு பழைய
தேகபலத்தை ஸ்திரீகள்
திரும்பி அடைவதற்கும்,
வெகு உத்தமமான ஔஷதம்

பயஸ்யா

விலை ரூ 3.

ஆத்ரேய ஆயுர்வேதிக்ஓர்க்ஸ்
தென்னூர் ரோட், திருச்சி

தூய்மையான

ஜோதி காபி

நறுமணம், நற்சுவை
-இவ்விரண்டு பிரதான
அம்சங்களிலும் சிறந்தது

இந்திய தயாரிப்பில்
இணையற்றது

JOTHI'S MFG. CO.. TIRUPUR

நாடோடி

உலகம் பலவிதம்

நம் நாட்டில் ஒரு குழந்தைக்கு மேல் இரண்டு குழந்தையாகி விட்டால் புருஷர்கள் பாடு திண்டாட்டம தான். புருஷனும் மனைவியும எங்கேயாவது சேர்ந்து போகவேண்டும் என்றால் குழந்தைகளை விட்டுப் போக முடியாது. அப்பொழுது இரண்டாவதாகப் பிறந்த கைக் குழந்தையை மனைவி லகுவாக இடுப்பில் தூக்கிவைத்துக் கொள்ள, பெரிய குழந்தையை தோளில் தூக்கமாட்டா மல் தூக்கிக்கொண்டு வருவது புருஷனின் பொறுப்பாகும். சில புருஷர்கள் இந்த தொந்திரவுக்குப் பயந்து கொண்டே தங்கள் மனைவியை அழைத்துக்கொண்டு எங்கும் வெளி யில் செல்வதில்லை.

போர்ச்சுகல் தேசத்திலுள்ள புருஷர்கள் இம்மாதிரி யெல்லாம் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் அங்குள்ள ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளை தூக்கிக்கொண்டு போவதே ஒரு அலாதி விதம். அங்குள்ள ஸ்திரீகள் எந்த சாமானையும் தலையில் தான் தூக்கிச் செல்வார்கள். குழந்தைகளைக்கூட, எத்தனை குழந்தைகள் இருந்தாலும் சரி, அவற்றை ஒரு கூடையில் வைத்து கூடையைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு விடுவார்கள்.

அடுத்த பக்கத்தில் உள்ள படத்தில் ஒரு தாயார் தன் குழந்தைகள் இரண்டையும் ஒரு கூடையில் வைத்துக் கொண்டு செல்வதைப் பாருங்கள் இம்மாதிரி தூக்கிச் செல் வதற்கு அவர்களுக்கு நிறைய பலம் இருப்பதோடு குழந்தை களுக்கும் லாவகமாக உட்காரத் தெரியவேண்டும். சரியான படி உட்காராவிட்டால், தலையில் உள்ள கூடை தலை குப்புற விழுந்துவிடும் அல்லவா?

இம்மாதிரி சிறு வயதிலிருந்தே கூடையில் உட்காரவும் நிற்கவும் பழகிய ஒரு சிறுவன் தன் அக்காவின் தலையில் நின்றுகொண்டு ஆரஞ்சு பழம பறிப்பதைப் பாருங்கள்.

இம்மாதிரி சாமான்களையும், குழந்தைகளையும் தலையில் தூக்கித் தூக்கித் தான் போர்ச் சுகீசிய ஸ்திரீகள் செங்குத்தாக நடக்க கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நியிர்ந்து நின்று கை வீசிக்கொண்டு நடந்து செல்வதே பார்ப்பதற்கு ஒரு ஆனந்தக் காட்சியாக இருக்குமாம். ஒரு மூட்டை புஸ்தகத்தை இரு கைகளிலும் ஏந்தி ஏந்தி ஆங்கிலஎழுத்து எஸ்ஸை போல் வளைந்துகாணப்படும் நம் நாட்டு படித்த பெண்களும் தங்

கள் உடம்பு நேராவதற்கு இந்த போர்ச்சுக்கீசிய வழியைக் கையாளலாம். வெளியில் இல்லாவிட்டாலும் வீட்டிலாவது ஏதாவது சாமானைத் தலையில் தூக்கி பழக்கப்படுத்திக் கொள்ளலாம். இல்லை, பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரும் பார்க்கவில்லை என்றால் ஒரு குடம் ஜலத்தையாவது கிணற்றிலிருந்து இழுத்து அதைத் தலையில் வைத்துக் கொண்டு சமையலறை திரும்பலாம்.

இந்தியாவுக்கு வந்த வாஸ்கோடிகாமா பிறந்த நாடு தான் போர்சுகல். ஒரு காலத்தில் மேகோன்னதமாக

இருந்த இந்த தேசம் இப்பொழுது இருக்குமிடம் தெரியாமல் போய்விட்டது?

கோடை காலத்தில் இத்தேசத்தில் வெயில் மிகவும் கடுமையாக இருக்கும். மழையும் அதிகம் இருக்காது. ஜனங்களெல்லாம் ஜலத்திற்காகக் கஷ்டப்படுவார்கள். அப்பொழுது சிலர் இரட்டை மாடு பூட்டிய பீப்பாய் வண்டியில் தண்ணீர் விற்றுக்கொண்டு போகும் காட்சியைக் காணலாம்.

போர்சுகல் ஸ்பெயின் தேசத்தை அடுத்திருந்தாலும், ஸ்பெயின் வாசிகளுக்கும் போர்சுகல் வாசிகளுக்கும் ஒற்றுமையே கிடையாது. அங்குள்ளது போலவே இங்கும் மாட்டுச் சண்டை உண்டு என்றாலும் இங்கு மாட்டைக் கொல்வதில்லை.

போர்சுகல் வாசிகள் கதை சொல்வதில் மிகவும் கெட்டிக்காரர்களாம். ஆனால் அந்தக் கெட்டிக்காரத்தனத்தை அவர்கள் அதிகம் எழுத்தில் காண்பிக்காதது ஒரு பெரிய நஷ்டமென்றே கூறவேண்டும்.

சீமையில்

யுத்தத்திற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது சீமை வாசிகளிடம் நிறைய பணம் இருக்கிறதாம். முன்பு 5 பேர் பாங்கியில் பணம் போட்டிருந்தார்கள் என்றால் இப்பொழுது 7 பேர் பணம் போட்டிருக்கிறார்கள். முன்பு பதினேறு பெரிய பாங்கிகளில் மொத்த டிபாஸிட்டு 200 கோடி பவுனாக இருந்தது இப்பொழுது 400 கோடியாக இருக்கிறது.

★

புதையல் எடுத்த தனம்போல என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் புதையல் கண்டெடுத்தால் சீமையில் அப்படி சந்தோஷப்பட முடியாது. உடனேயே பக்கத்தில் உள்ள கரோனரிடம் சொல்லிவிட வேண்டும். அசம்பாவிதமாக யாராவது இறந்துபோனால் எப்படி பிரேதப் பரீட்சை நடத்துவார்களோ அதே மாதிரி இதற்கும் ஒரு பரீட்சை அவர்கள் நடத்துவார்கள். புதையல் தானாக அகப்பட்டது தானா? இல்லை யாராவது ஒளித்துவைத்துவிட்டுப் போன சொத்தா? அதைக் கண்டு பிடித்தது யார்? முதலிய பல விபரங்கள் அவர் சேகரிப்பார்.

★

லண்டனில் ஒரு கம்பெனியார் 58 நிமிஷம் 30 ஸெகண்டிற்குள் புதிதாக ஒரு வீட்டைக் கட்டிக் காண்பித்தார்களாம்.

★

லண்டனில் உள்ள திலக் ராஜ் ஒபிராய் என்னும் இந்தியர் அங்குள்ள பதிமூன்று பெரிய இந்திய ஓட்டல்களுக்குச் சொந்தக்காரராம். காலணா அகலத்திற்கு வைரத்தாலேயே பித்தான்களைப் பண்ணி சட்டையில் போட்டுக்கொண்டிருக்கிறாராம். இருபத்தி மூன்று வயதுள்ள இவர் ஒரு தடவை அமெரிக்காவுக்குச் சென்றபொழுது அங்குள்ளவர்கள் இவருக்கு பித்தான் என்றே பெயர் வைத்து விட்டார்களாம்.



லண்டன் பாதாள ரயில் வண்டி



பிரிட்டனில் தயாராகியுள்ள ஒரு புதுவித மோட்டார் வண்டி.

பழையகாலத்தில் சிறையில் கஜக்கோல் ஒரு சமயம் இருந்ததுபோல் இன்னொரு சமயம் இருக்காதாம். ஒரு சமயம் நீளம் அதிகமாகவும் இன்னொரு சமயம் நீளம் குறைந்தும் காணப்படுமாம். அந்தச் சமயத்தில் யார் ராஜாவோ அந்த ராஜாவின் முழுக்கை நீளம் ஒரு கஜமாகக் கருதப்பட்டதுதான் இதற்குக் காரணம்.

★

விக்டோரியா பதக்கத்தின் உலோக மதிப்பு ஆறு பென்ஸ், அதாவது ஆறு அணு தான்.

★

பிரிட்டனில் 250 பேர் சொந்த ஆகாய விமானங்கள் வைத்திருக்கிறார்கள்.

★

இங்கிலாந்தில் குறைந்த காலத்தில் வீடுகட்டுவதற்காக செங்கல்களை உபயோகப்படுத்துவதில்லை. சிமண்ட் தகடுகள் தயாராகப் பண்ணி வைத்துக்கொண்டு அவற்றை ஒன்றோடு ஒன்று பொருத்தி விடுகிறார்கள்.



எல்லைப்புறத்தில் வாஞ பிரதேசத்தில் பண்டித நேருவைப் பார்ப்பதற்காக மலையடிவாரத்தில் கூடிய கூட்டம்.

ஹே, அனுராதா!

(திருச்சி ரேடியோ விமர்சனம்)

'தமிழ் நாட்டின் தலை சிறந்த ஹாஸ்ய எழுத்தாளர் 'நாடோடி' என்று அட்டைத்தாள் விளம்பரம் செய்கிறது.

நகைச் சுவைக்குக் காரணம் காட்ட முயன்ற பழைய இலக்கணம் எள்ளல், இளமை, பேதமை, மடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்று சொல்லுகிறது. நாடோடியின் நகை எந்த வகையைச் சேரும்? எள்ளல் என்போமா? ஆனால் அவர் எள்ளுவதில் பயன் உண்டு, காரம் இல்லை. அவர் கேலி சிரிப்பு மூட்டுமே, ஒழிய சீறச் செய்யாது.

பெண்களைப் படுகேலி செய்கிறார். ஆனால் பெண்களு மல்லவா அந்தக் கேலிகளைப் படித்து அனுபவிக்கிறார்கள்? கேலிக்குப் பாத்ரமானவர்களும்கூடச் சேர்ந்து சிரிக்கும் படி செய்வதுதானே உண்மையான நகைச்சுவை,

'சமையல் அறையில் விடாதே' என்பது பெண்ணுலக வெற்றிக்கென்றே அவ்வுலகத்தில் போற்றப்படும் மந்திரமாம். பெண்களுக்கு இடங்கொடுத்தல் என்ற வழக்கம் ஆண்களிடத்தில் இருக்கிறதல்லவா, அதுதான் டிராம் முதலிய வண்டிகளில்? எப்படியெல்லாம் இடங்கொடுத்து விடுகிறோம் என்று அறிய அவாவுகிறவர்கள் நாடோடின் கட்டுரையைப் படிக்க வேண்டும். படித்தால் பஸ்களிலும், டிராம்களிலும் புருஷர்களுக்கு என்று சில இடங்கள் ஒதுக்கி வைக்க வேண்டும் என்ற நாடோடியின் விண்ணப்பத்துக்கு ஒப்பம் போட்டு விடுவார்கள்.

வெல்வது வேல் என்பார்கள் ; வேலும் வெல்லாத இடம் உண்டு. பணியா என வள்ளி பதம் பணிந்தவர் வேலாயுதத்தையே உடைய கடவுள் அல்லவா? தோல்வியே அறியாத படைக்கலம் பெண்களுக்கே உரியது. அதைப் பற்றி ஆராய்கிறார் நாடோடி.

சினிமா பார்க்கப் போனால் ஒரு சொட்டு, ஜாக்கட் வேண்டுமானால் இரண்டு, புடவை வேண்டுமானால் மூன்று, நகை வேண்டுமானால் நான்கு, பிறந்தகம் போக வேண்டுமானால் பத்து. அநுபவமுள்ள யார்தாம் இந்தத் தீர்மானத்தை மறுப்பார்கள்.

இடைக்கால சர்க்கார்



முதல் வரிசை (இடமிருந்து வலம்) சர்தார் பல்தேவ் சிங், டாக்டர் ஜான் மத்தாய், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், பண்டிட் ஜவாஹர்லால் நேரு, மிஸ்டர் லியாகத் அலிகான், சர்தார் வல்லபாய் படேல், மிஸ்டர் சுந்தரிகர், ஸ்ரீ ஆசப் ஆலி, ஸ்ரீ பாபா.

பின் வரிசை (இடமிருந்து வலம்) ஸ்ரீ ஜக்ஜீவன்ராம், மிஸ்டர் கஸ்னபர் அலிகான், டாக்டர் ராஜேந்திர பிரசாத், மிஸ்டர் அப்துர் ரப் நிஷ்டார்.

தனது அருமையான அனுவும் பெண் பிறவி என்பது ஞாபகம் வந்து விடுகிறது. அழுகிருர். "இவளுக்கென்றே பிறந்து வளர்ந்து வரும் என் மாப்பிள்ளை இவள் கையில் என்ன பாடுபடப் போகிருனே என்று நினைத்து நடுங்கு கிறேன். அவனிடம் எனக்குள்ள அநுதாபத்தைக் காட்டு வதற்காக நான் இப்பொழுதே ஒரு சொட்டுக் கண்ணீர்விடத் தயார். ஆனல் அது வந்தால்தானே?" அது எப்படி வரும்? இவர் பெண்ணு என்ன, நினைத்த மாத்திரத்தில் நினைத்த அளவுக்கு வர?

தமக்கென்று ஒரு தனிப் போக்கை வகுத்துக் கொண்ட நாடோடி இந்த அனுராதா வரிசையிலும் தம் கைவரிசையை யெல்லாம் காட்டுகிருர். குழந்தையை முன்னிட்டுக் கொண்டு எங்கெல்லாமோ போய் உலாவி வருகிருர். 'முன்னெரு காலத்தில்' என்ற பழங்காலத்துக்குச் சென்று 'மாமியா சுரன் மருமகாசுரன்' இருவரிடையே தொடர்ந்து இன்னும் நடைபெற்று வரும் போரைக் காண்கிருர். 'பின்னெரு காலத்தில்' என்று எதிரேறிப்போய் உலகமெல்லாம் திருந்தி விட்டால் நகைச்சுவைக்கு இடம் இராதே என்று ஏங்குகிருர். யமலோகம் போகிருர். சமுத்திர லோகம் செல்கிருர். அவர் எங்கே போனுலும் சரி, நமக்கு வயிறு புண்ணுய்ப் போகிறது, சிரித்துச் சிரித்து.

ஏதாவது ஒன்றைப் பற்றி எழுதிக் கொண்டு போகும் போதே, நடுவில் மின்வீச்சுப் போல ஒன்றிரண்டு சொல்லி விடுகிருர். குறைகளைத்தான் எடுத்துக் காட்டுகின்ருர் என்ரு லும், நாம் வாய்விட்டுச் சிரிக்கத்தான் செய்கிருேம். சிரித் தாலும் பயன் பதிந்து போகிறது.

நாடோடியின் புத்தகத்தைப் பற்றி மதிப்புரை சொல் லிக்கொண்டிருக்கக்கூடாது. படித்துத் தொலைக்க வேண்டிய புத்தகங்கள் அவர் எழுதுபவை எல்லாம். படிக்காவிட்டால் நஷ்டம் அவருக்கல்ல. புத்தகம் விலையாகாதே என்ற கவலை நாடோடிக்கு இல்லை. கட்டாயம் விலையாகிவிடும் என்ற துணிச்சலால்தான் தாமே தம் புத்தகங்களை வெளியிடுகிருர்.

விலை ரூ. 3.

கிடைக்குமிடம் :

நாடோடி,

தியாகராயநகர், சென்னை.

ஸ்ரீ மாஸ்தி வெங்கடேசய்யங்கார், எழுதியது.

ஸ்ரீமதி ராஜலக்ஷ்மியும், குகப்ரியையும், மொழி பெயர்த்தது.

எங்கள் உபாத்தியாயர்

★

கன்னட எழுத்தாளர்களுக்குள் தலை சிறந்தவராகிய ஸ்ரீ மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்களின் கதை ஒன்றை மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறேன். ஏழை எளியவர்களின் வாழ்க்கையை உணர்ச்சி ததும்ப எடுத்துரைப்பதில் ஸ்ரீ மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை என்றே சொல்லலாம். ஏற்கனவேயே அவர் கதைகள் சிலவற்றை கல்கி இதழ்களில் ராஜாஜியும் நானும் மொழி பெயர்த்துக் கொடுத்திருப்பது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். ஒரு பெண் சொல்வதுபோல எழுதியுள்ள இக்கதையை ஸ்ரீமதி ராஜலக்ஷ்மியும் ஸ்ரீமதி குகப்ரியையும் மொழிபெயர்த்து உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றி.

அன்று விழாழக்கிழமை. பள்ளிக்கூடத்திற்கு நேரமாய் விட்டது என்று அவசரம் அவசரமாய் வந்து கொண்டிருந்தேன். லக்ஷ்மி என் பின்னால் வந்து கொண்டிருந்தாள். சின்னஞ் சிறுகால்களை அடுத்தடுத்து வைத்து குடுகுடு வென்று நடந்து கொண்டிருந்தாள். "நேரமாய் விட்டதே, அவளையும் அழைத்துக் கொண்டு வரப்போகலாம்" என்று அவள் வீட்டிற்குச் சென்ற பொழுது அவள் எழுந்திருக்கவேயில்லை. அதனால் இன்னும் கொஞ்சம் நேரமாயிற்று. இப்படி நாங்கள் போய்க்கொண்டிருந்த பொழுது எங்கள் எதிரில் சற்றுத்தொலைவில் உபாதத்தியாயர் வெகு நிதானமாய் நடந்து போய்க்கொண்டிருந்தார்.

"சரிதான், அவரே இப்பொழுதுதான் போகிறார். நமக்கு மட்டும் என்ன அவசரம்" என்று நானும் அடிமேலடி வைத்து அன்ன நடை நடக்கத் தொடங்கினேன்.

இதற்கிடையில் எதிரே வந்து கொண்டிருந்த சாஸ்திரி கள் அவரை நெருங்கி "என்ன வெங்கட்ரமணய்யர்வாள்! பள்ளிக்கூடத்திற்கா?" என்று குசலம் விசாரித்தார்.

"ஆமாம்" என்றார் உபாத்தியாயர்.

'ஒரு சிட்டிகை பொடி இருந்தால் கொடும்" என்றார் சாஸ்திரிகள். "சரி" என்று பொடிடப்பியை நீட்டினார் ஸார்.

"இன்றைக்கு என்ன? கொஞ்சம் நேரமாகி விட்டது போலிருக்கிறதே?"

"வீட்டிலே உப்பில்லை என்றாள். நேரமாயிற்று, பள்ளிக் கூடம் போகவேணும் என்றேன். இந்த 'கலாட்டா'வுக்கு உப்பையே வாங்கி வந்திருக்கலாம்" என்று பெருமூச்சு விட்டார் ஸார்.

"இதற்கென்ன பிரமாதம். நம் பையன்கள் யாராவது இருந்தால் வாங்கி அனுப்புகிறேன். சில்லறை இருந்தால் கொடுங்கள்"

வாத்தியார் இங்கே பேசிக்கொண்டிருக்கும் பொழுது பள்ளிக்கூடத்தில் நமக்கென்ன வேலை என்று ஒரு திண்ணை யில் 'ஏழாங்கல்' ஆட உட்கார்ந்தோம். ஆட்டத்தின் ஸ்வா ரஸ்யத்தில் பொழுது போனதே தெரியவில்லை. சற்று நேரம் கழித்து நிமிர்ந்தேன். வாத்தியார் பள்ளிக்கூடம் போயிருந் தார்.

மிகுந்த பரபரப்புடன் "லக்ஷ்மி! நேரமாயிற்று. போவோம் வா." என்றேன். அவள் அழ உட்கார்ந்தாள். விளையாட்டில் அவள் பலப்பங்களை யெல்லாம் தோற்று விட்டதுதான் அவள் அழுகைக்குக் காரணம். நான் அநியாய மாய் ஜயிக்கவில்லை. அவளுக்கு ஆடத்தெரியா விட்டால் நான் என்ன பண்ணலாம்? "என் பலப்பம்" என்று ராகம் பாட உட்கார்ந்துவிட்டாள். ஆனவரையிலும் நல்லவார்த்தை கள் சொல்லிப் பார்த்தேன். கேட்டால் தானே!

"என் பலப்பம்! என் பலப்பத்தைக் கொண்டாம்மா!" இதே பல்லவிதான். கடைசியில் நான் ஜயித்தவைகளை

யெல்லாம் திருப்பிக் கொடுத்து "நீ சமத்தல்லவா! வாடியம்மா" என்றேன்.

"எல்லாவற்றையும் கொடு"

"எல்லாவற்றையும் கொடுத்து விட்டேனே"

"இன்னும் ஜேபியில் இருக்கும்"

இருந்தது உண்மைதான். ஆனால் அது என் பலப்பம்! என்ன சொல்லியும் அவள் கேட்பதாயில்லை, கடைசியில் அதையும் கொடுத்துப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துப் போனேன்.

"ஏன் இவ்வளவு நேரம்?" என்று கொஞ்சம் கடுமையாகவே கேட்டார் உபாத்தியாயர்.

"லக்ஷ்மியைக் கூப்பிடப் போனேன்" என்று மென்று விழுங்கினேன், என்மனம் சிலேட்டுக் குச்சிக்காக எண்ணத் தொடங்கிற்று. ஆட்டத்தை ஜயித்தது நான், பலப்பத்தை ஜயித்தது அவள். சென்ற முறை இன்ஸ்பெக்டர் வந்த பொழுது கௌரியை விட சரஸு அதிகம் மார்க்கு வாங்கியது எனக்கு அப்பொழுது ஞாபகம் வந்தது. மெதுவாய் ஒரு பக்கமாய் நடந்து பெஞ்சியில் உட்கார்ந்தேன். நன்றாகப் படித்துப் பதில் சொல்லியவளோ கௌரி. ஆனால் மார்க் வாங்கியதோ ஸரஸு! உபாத்தியாயரின் கணீரென்ற குரல் என் சிந்தனையைக் கலைத்தது.

அவர் முதல் வகுப்புப் பாடத்தை முடித்துவிட்டு எங்களைப் பார்த்து "ஏன், இன்னும் கௌரம்மாவும் சீதம்மாளும் வரவில்லையா?" என்றார். நானும் சந்தர்ப்பத்தை விடாமல், "நான் அப்பொழுதே வந்துவிட்டேன் ஸார்"என்று சொல்லி வைத்தேன். "ஓகோ! வந்தாயா? நீ நல்ல பெண். இனிமேல் இன்னும் கொஞ்சம் சீக்கிரம் வரவேணும்" என்பதற்குள் லக்ஷ்மியை அழைத்து வந்ததைச் சொல்வதுபோல் அவளிருந்த பக்கம் திரும்பினேன்.

"உனக்குத் தினமும் அவளை அழைத்து வருவதென்றால் நேரம்தானாகிறது. இனிமேல் இன்ஸ்பெக்டர் வரும் சமயம். இன்றைக்கே வருகிறாரோ நாளைக்கோ தெரியவில்லை. நாளை முதல் சீக்கிரம் வாம்மா"என்று சொல்லிவிட்டு மற்றவர்களைப் பார்த்து,

"அடே எல்லோரும் சமர்த்தாயிருக்கவேணும். பாடங்களை ஒழுங்காய்ப் படிக்கணும். இந்த முறை வருகிறவர் புது இன்ஸ்பெக்டர். நன்ருய்ப் படித்தவர்களுக்கு முத்து மாலை பரிசு கொடுப்பார். சரஸ்வதி! நீ சமர்த்தல்லவா? தைரியமாய் படிக்க வேணும். கௌரி எப்படிப் படிக்கிருளோ அப்படிப் படிக்க வேணும்" என்ருர் ஸரஸ்வதி என்ற பெண்ணைப் பார்த்து.

இதற்குள் சரஸு "அவளே நன்ருய்ப் படிக்கட்டும். எனக்கென்ன அவளைப்போல் ஒன்றரைக் கண்ணு?" என்ருள். உடனே 'கொல்'லென்று எல்லோரும் சிரித்தார்கள். நான் எவ்வளவு அடக்கிப் பார்த்தும் அடக்க முடியவில்லை. லக்ஷ்மியும் கைகளைக் கொட்டிச் சிரித்தாள். ஆனுல் கௌரி முகத்தில் ஈயாடவில்லை. தலைகுனிந்து கம்மென்று உட்கார்ந்திருந்தாள்.

சரஸ்வதிக்கு இதில் ஒரு பெருமை பாருங்கள்! தனக்குத்தான் கண்ணும் மூக்கும் நேராயிருக்கிறதாம். இதில் பெருமையடித்துக் கொள்ள என்ன இருக்கிறது? எனக்கும் லக்ஷ்மிக்கும், அனேகமாக எல்லாப் பெண்களுக்குமே கண்ணும் மூக்கும் ஒழுங்காய்த்தானிருக்கிறது. இதில் சரஸ்வதிக்கு என்ன தனிப்பெருமை?

அவர்கள் கண்ணும் மூக்கும் நன்ருயிருந்து விட்டால் அதுவே போதுமா? பெண்ணுய்ப் பிறந்து விட்டால் கொஞ்ச அழகாயிருந்து புருஷர்களைப் பிரமிக்கச் செய்து விட்டால் அதுவே போது மென்று நினைத்து விடுகிருர்கள். புருஷர்கள் மட்டுமென்ன? பீ. ஏ. படித்து விட்டால் போதும், அவன் ஒண்ணரைக் கண்ணனே கரிச்சான் குஞ்சோ எதுவாயிருந்தாலும் சரி, பெண்கள் மெச்சுவார்கள் என்று நினைத்துக் கொள்ளுகிருன்.

அழகிருந்தால் மட்டும் பரீட்சையில் பாஸ் செய்துவிட முடியாது என்பது இந்த பெண்ணுக்குத் தெரியவில்லை. அழகில்லாத பிள்ளை வித்தையையே அழகென்று நினைத்துக் கொள்ளுகிருன். மக்கு சரஸ்வதி தன் அழகையே வித்தையென்று நினைத்துக்கொள்கிருள். அதற்கேற்ருப் போல போன வருஷம் இன்ஸ்பெக்டா வந்திருந்த பொழுது அவள் படிக்காவிட்டாலும் அவளுக்கு சபாஷ் பட்டம் வந்துவிட்டது. அதனுல் அதுவரை தோழிகளாயிருந்த கௌரிக்கும் ஸரஸுவுக்கும் தினமும் சண்டையும் சச்சரவும் ஆரம்பமாயிற்று.

இன்ஸ்பெக்டர், "நதி என்றால் என்ன?" என்றார். சரஸ்வதிக்கு என்ன வென்று தெரியவில்லை. அவர் கௌரியைக் கேட்டார். பூகோள புஸ்தகத்திலிருப்பதைப் போலவே ஒப்புவித்து விட்டாள் கௌரி. கௌரிக்குத்தான் ஜயம். எங்களுக்குள் யாருக்கும் அவள் மேல் பொறாமையில்லை. எப்பொழுதுமே வகுப்பில் அவள்தான் கெட்டிக்காரி.

பிறகு, "நதி எப்படி உண்டாகிறது?" என்றார் இன்ஸ்பெக்டர். அடுத்தது ஸரஸ்வதியின் முறை. "இங்கும் அங்கும் விழுந்த தண்ணீர் சேர்ந்து நதி உண்டாகிறது" என்றாள். "பேஷ்! சபாஷ்!" என்றார் இன்ஸ்பெக்டர். 'ஸார்' பக்கம் திரும்பி "நன்றாய்த் தயார் செய்து விட்டீரே" என்றார். அவர் தயார் செய்திருப்பது கௌரியை. இன்ஸ்பெக்டர் குறித்தது சரஸ்வதியை. அவர் குறிப்பிடுவது கௌரி யென்று உபாத்தியாயர் நினைத்து "ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். பூகோளத்தில் எந்த அம்சத்தைக் கேட்டாலும் இவள் பளிச்சென்று பதில் சொல்லுவாள்" என்றார். அவர் குறிப்பது கௌரியை என்றுணர்ந்த இன்ஸ்பெக்டர் கௌரியைச் சுட்டிக்காட்டி இந்த குட்டியா என்று கேட்டுவிட்டு, "நான் இவளைச் சொல்லவில்லை. அவளை" என்று ஸரஸ்வதியைச் சுட்டிக்காட்டி "உன் பெயர் என்னம்மா?" என்றார். அவள் மிக ஒய்யாரமாக "சரஸ்வதி பாய்" என்றாள் "நான் சொல்வது ஸரஸ்வதிபாய்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம் மகாசுவாமி! இவளுக்குப் பாடம் சொல்லிச் சொல்லி என் மார்க் கூடு எலும்பே வளைந்து போய் விட்டது" என்றார் உபாத்தியாயர்.

நிஜமான பேச்சு. ஸரஸுவுக்குப் பாடம் சொல்லி அவர் உலர்ந்துதான் போனார். எது எப்படியானால் என்ன? எதையோ உளறி சபாஷ் பட்டம் வாங்கியாயிற்று. இது கௌரிக்கு ஆகவில்லை. அன்று முதல் ஒருத்திக்கு ஒருத்தி காய்ச்சல். சரஸ்வதி அதற்கெல்லாம் ஒரு பிரம்மாஸ்திரம் வைத்துக்கொண்டிருந்தாள். "எனக்கொன்றும் ஒண்ணரைக் கண்ணல்ல" என்பதுதான் அது. ஸாருக்கு இந்த ரகஸ்யமெல்லாம் தெரியாது. எப்பொழுதாவது ஒரு நாள் புத்தி சொல்லி, "அவளைப்போல் படி" என்றால் அவள் கௌரியை இப்படித்தான் அவமானப்படுத்துவாள்.

இது கிடக்கட்டும். அந்த வியாழக்கிழமை சங்கதியைச் சொல்லுகிறேன். இப்படிச் சொல்லக் கூடாது என்று கட்டளையிட்டுவிட்டுப்பாடங்களைக் கொடுத்தார் அவர். பெண்கள் அடிக்கடி சரசுவின் பேச்சை நினைத்து கலகல வென்று சிரிப்பார்கள். கசமுச வென்று பேசுவார்கள். வேறு எந்த விஷயமானாலும் பேசுவார்கள். பாடம் மட்டும் படிக்கமாட்டார்கள். மடியில் கட்டிக்கொண்டிருக்கும் முறுக்கு சீடை இவைகளை ரகசியமாய்த் தின்னும் சப்தம் கேட்கும். இத்யாதி இத்யாதி.

கௌரிக்கு அவமானம் இன்னும் மறக்கவில்லை. மற்றவர்களுக்கோ பாடம் படிக்க இஷ்டமில்லை. படிக்கிற பெண் கௌரி முகத்தை தொங்கவிட்டுக்கொண்டு சிவனே என்று உட்கார்ந்து கொண்டிருந்தாள் "பாடத்தை ஒப்புவியுங்கள்" என்று எப்பொழுது கூப்பிடுவாரோ என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். இதற்கிடையில் லக்ஷ்மியிடமிருந்து மெல்ல மெல்ல என் பலப்பங்களை வாங்க முயற்சித்தேன். அவள் அசைந்தால் தானே? இதற்குள் வேடிக்கைக்கு இன்னொரு சம்பவம் நடந்தது.

உபாத்தியாயர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். "வீட்டில் உப்பு இல்லாமல் விட்டுவந்தேனே, அங்கே நிலவரம் எப்படியிருக்கிறதோ? என்தலையில் என்ன எழுதியிருக்கிறதோ?" என்று பிரபஞ்ச வாழ்க்கையைப் பற்றி யோசித்தாரோ அல்லது ஏதாவதொரு வேதாந்த விஷயத்தைப் பற்றி, சம்ஹிதை, சாஸ்திரங்கள் இவைகளை ஆராய்ந்து கொண்டிருந்தாரோ தெரியாது.

இதன் நடுவில் அதற்குத் தடையாய் ஒரு அம்மாள் பள்ளிக்கூடத்தில் நுழைந்தாள். அவளைத் தெருத்தாழ்வாரத்தில் பார்த்தவுடனேயே உபாத்தியாயருக்கு வீட்டில் நடக்க வேண்டியது இங்கேயே வந்துவிட்டதே என்று கதி கலங்கியிருக்க வேண்டும்! ஏனெனில் வந்தவள் அவர் மனைவி! மிகவும் அமைதியாய் உட்கார்ந்திருந்தவர் திடுக்கிட்டு எழுந்தார். அவளைப் பார்த்து ஏதோ பேச ஆரம்பித்தார். வந்தவள் "உப்பில்லை என்று சொன்னால் பேசாமல் வந்து விட்டால் நான் என்ன செய்வதென்ற எண்ணமோ?" என்று அதட்டினாற் போல் கேட்டாள்.

அவர் மிகவும் பவ்யமான குரலில் "அதற்காக நீ பள்ளிக்கூடத்துக்கே வருவதா?" என்றார்.

"நான் ஏதாவது கேட்டால் நீங்கள் ஓடி வந்து பள்ளிக் கூடத்தில் புகுந்து கொள்வது! எது எப்படியானாலும் பள்ளிக்கூடத்திற்கு நான் வரக்கூடாதாம்! நான் என்ன செய்வது? இனிமேல் நீங்கள் எங்கிருந்தாலும் சரி நான் வரத்தான் வருவேன். இல்லாத சாமானைக் கூடக் கேட்கக் கூடாதா? இந்த மாதிரிக் கஷ்டத்தை எத்தனை நாள் சகிப்பது?"

"அடுத்தகத்தில் கேட்டு வாங்கிக் கொள்ளக் கூடாதா? நீ இங்கே இருக்கும் பொழுது யாராவது வந்தால்?" என்று மிகவும நயமாகக் கெஞ்சும் குரலில் சொன்னார் உபாத்தியாயர்.

"யாராவது வந்தால் மானம் போவது ஒருபுறமிருக்கட்டும். ஒருவருமே வராமலே தினமும் என் மானம் போகிறதே. எல்லார் வீட்டிலும நுழைந்து நேற்று அரிசி, இன்று பருப்பு, நாளைக்கு உப்பு என்று கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. இனிமேல் போய் ஒருவரையும் கேட்கப்போகிற தில்லை. சில்லறை இருந்தால் வாங்குங்கள் பள்ளிக்கூடத் திற்கு நாழியாய் விட்டதென்று புறப்பட்டு வந்தால் எப் படி? கையிலே காசில்லை என்றால் கையை விரித்து விடுங் கள். உப்பில்லாமலே சாப்பிடுவோம்" என்றாள்.

இதற்குள் பள்ளிக்கூடத்தில் இந்தப் பெண்களின் அமர்க்களம் வீடே இடிந்துவிடும்போ லிருந்தது. லக்ஷ்மி வீதியில் போய்க் கருடக்குட்டியைப் பார்த்து "கருடக் குட்டி!" என்று கூப்பிட்டாள்.

கருடக்குட்டி என்பது ஒரு சிறு பூனைக்குட்டி. பார்ப்ப தற்கு வெகு அழகாயிருக்கும். பள்ளிக்கூடத்துக் குட்டிகள் ஒரு குச்சியை அதன் முன் காட்டி, எலி பிடிக்கப் பழக்கிக் கொண்டிருந்தார்கள். வாலைப்பிடித்து இழுத்துக் கீச்சென்று கத்தும்படி செய்வார்கள். அடிக்கடி இவர்கள் கையிலிருக்கும் பக்ஷணத்தில் பங்கும் கிடைக்கும். அந்தக் கருடக்குட்டிக்கு எங்களிடம் வெகு பிரியம். எங்களெல்லோரையும் விட லக்ஷ்மியைக் கண்டால் வெகு பிரியம். ஒரு தடவை அவள் தாயாரைக் கேட்டோ கேட்காமலோ நிறைய மாவிளக்குமா கொண்டு வந்திருந்தாள். நான், சரஸு, கௌரி ஆக மூவரும் பங்கிட்டுக் கொண்டோம். ஏதோ போதாத காலம.

கருடக்குட்டியைக் கூப்பிட்டு விளையாட்டாக அதன் முன்னே மாவை வைத்தாள் லக்ஷ்மி. அது வாயில் கௌவிக் கொண்டது. ஒருவரையும் சமீபத்தில் நெருங்க ஒட்டாமல் ஆர்ப்பாட்டம் செய்தது. தினமும் இப்படியே மாவு கிடைக்குமென்றெண்ணி லக்ஷ்மியிடம் உறவு கொண்டாடிற்று.

லக்ஷ்மிக்கோ மாவு போனாலும் போகிறது, பூனை நம்மிடம் உறவு கொண்டாடுகிறதே என்று சந்தோஷம், அதைப் பிடித்துக்கட்டி நசுக்கி முத்தமிட்டுக் கொஞ்சுவாள். அவள் தான அதன் அழகைப் பார்த்து 'கருடக்குட்டி' என்று பெயர் வைத்தாள். குட்டி நல்ல அழகு. உடல் தவிட்டு நிறமும் வெண்மையும திட்டுத் திட்டாய்க் கலந்திருந்தது. கழுத்தில் லேசான வெண்மை. மூச்கும் நெற்றியும் வெண்மைதான். வாய் பழுத்த பப்பாளிப்பழம்போல் சிவப்பு. கண்கள் புஷ்பராகம் போலிருக்கும், நகங்கள் சங்கதி 'பிருண்டி'னவர்களைக் கேட்டால்தான் தெரியும். இதுதான் கருடக்குட்டியின் முழு உருவம்.

இந்தத் தடபுடலில் வீதியில் அதோடு ஓடிப்பிடித்து, அதையும தூக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தாள் லக்ஷ்மி. நானும் அவளும் வேறு சில பெண்களும் அதை நடுவில் வைத்துக்கொண்டு விளையாடத் தொடங்கினோம், ஸாரும் மாமியும் இன்னும் என்னென்ன பேசினார்களோ எனக்குத் தெரியாது. விளையாட்டு வைபவத்தில் நாங்கள் எப்படி கவனிக்க முடியும். சற்று நேரத்திற்குப் பிறகு "எல்லாரும் சரியாக உட்காருங்கள்"என்று திகிலடைந்த குரலில் கூவினார் ஸார்.

எல்லோரும் அவரவர்கள் இடத்திற்குச் சென்று உட்கார்ந்தோம். பூனை லக்ஷ்மியின் மடியில் ஒளிந்து கொண்டது. எல்லோரும் புஸ்தகங்களைக் கையில் பிடித்துக்கொண்டு என்ன விசேஷம் என்று கவனித்தோம்.

வாயிற்படியில் ஒரு கிழவர் நின்றிருந்தார். அவர் சர்வாதிகாரம் படைத்தவர்போல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். மேஜையின் சமீபம் நின்றிருந்த எங்கள் ஸாரைப் பார்த்து, "என்னய்யா! நீங்கள்தான் உபாத்தியாயரோ?"என்றார்.

(தொடரும்)

"ஆதவன்"

◎ விபரீதம் ◎

"உன் பேரு என்னடா அம்பி? வரயா நம்ப ரெண்டு பேரும் விளையாடலாம்?" என்று வினவினான் நாராயணய்யரின் மகன் கிட்டு தன் தகப்பனாரைப் பார்த்து. உடனே நாராயணய்யருக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"டேய் கிட்டு? நான் உன் அப்பாடா. என்னடா என்னிடமே இப்படிப் பேசறே?" என்று கடிந்து கொண்டார். உடனே அவன் "அப்படியானா நம்ப ரெண்டு பேரும் அப்பா, அம்மா வெளையாட்டு வெளையாடலாமாடா" என்று சொல்லிக் கொண்டே அவர் கைகளைப் பிடித்திழுத்தான்.

நாராயணய்யருக்குக் கோபம் வந்துவிட்டது. 'பளார்' என்று அவன் கன்னத்தில் ஓர் அறை அறைந்துவிட்டு ஆவேசமாக உள்ளே ஓடினார்.

கிட்டுவின் அழுகுரல் கேட்டு அவசர அவசரமாக வெளியே வந்துகொண்டிருந்த கமலி (நாராயணய்யரின் மனைவி) அவரை முறைத்துப் பார்த்துக் கொண்டே "ஏண்டா என் குழந்தையை அடித்தாய்? அவன் உன்னை என்னடா செய்தான்?" என்று மிரட்டினாள்.

இதைக் கேட்டதும் நாராயணய்யரின் தலை சுழன்றது. மறுவினாடி அவர் தன்னைச் சமாளித்துக்கொண்டு "அடி கமலி? உனக்கு யாரடி இப்படிப் பேசக் கற்றுக் கொடுத்தது?" என்று இரைந்தார். அடுத்த நிமிஷத்தில் அவர் கன்னத்தில் 'பளார்' என்றொரு அறை விழுந்தது. ஆம், அது அவரது ஆசைநாயகியின் அன்பளிப்பு!

உடனே கமலி எங்கேயோ வெளியே ஓடிவிட்டாள்.

பிறகு நாராயணய்யர் ஆத்திரம் பொங்க அடுக்களையினுள் புகுந்தார். அங்கு அவரது தாயார் சமையல் செய்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடன் "ஏன் அம்மா! உன் மாட்டுப் பெண்ணுக்கு என்ன தைரியம்? என்னைப் பார்த்து 'டே' என்கிறாளே?" என்று இரைந்தார் அவர்.

அவரது தாயார் அவரை ஏற இறங்க ஒரு வினாடி பார்த்துவிட்டு "யாரடா நீ ஆம்பிளை இல்லாத வீட்டிலே வந்து இப்படி இரையறே? இன்னும் கொஞ்ச நேரத்தில் என் பையன் நாராயணன் வந்துடுவான். அவனிடம் உன் புகாரை சொல்லிக்கோ, போ" என்ருள் சாந்தமாக.

"அப்படியானல் நான் யார்?" என்று அவர் வாய் முணு முணுத்தது தன்னைத் தானே ஒரு முறை ஏற இறங்க நோக்கினர். என்ன விபரீதம்? சற்று நேரத்திற்கு முன் முப்பது வயதுடையவராயிருந்த நாராயணய்யர் இப்பொழுது சுமார் பத்து வயது பாலனுகவே தோன்றினர்! கட்டிலில் படுத்திருந்த நாராயணய்யர் "ஐயோ...! அம்மா...! என்று அலறியடித்துக் கொண்டு எழுந்தார். அவர் கண்கள் அவர் உடலை வெறித்து வெறித்து சுமார் பதினைந்து நிமிஷம் வரை நோக்கின. பிறகு நீண்ட பெரு மூச்சு விட்டார். நல்ல வேளையாக அவர் சிறுவனுக மாறிவிடவில்லை. எல்லாம் வெறும் கனவு!

கட்டிலின் ஓர் மூலையில் தினசரி ஒன்று திறந்த வண்ணம் கிடந்தது. அதில் ஓர் விளம்பரம் காணப் பட்டது:—

நீங்கள் எங்களுடைய மருந்தை பத்து நாட்கள் சாப் பிட்டால் உடனே இருபது வருஷத்திற்கு முந்திய இளமையைப் பெறுவீர்கள்! இது பொய்யென்று நிரு பிப்பவர்களுக்கு

ஆயிரம் ரூபாய் இனும்

புருஷர்கள் ஏதாவது தவறு பண்ணினல் தவறு பண்ணின நபரைக் குறிப்பிட்டு இன்னர் இத்தனை அசடாய் இருக்கிருரே என்று சொல்வார்கள். ஆனல் ஸ்திரீகள் ஏதாவது தவறு பண்ணினல் இந்த ஸ்திரீகளே அசடுகள்தான் என்று எல்லா ஸ்திரீகளையுமே பொதுப படையாக தூஷிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

பௌராணிகன்

மான்யம்

ஜமீன் தார்களை ஒழிக்க வேண்டும் என்று எல்லாரும் கதறிக்கொண்டிருக்கும் இந்நாளில் 'ஜமீன் தார்கள் அவசியம்'' என்று ஆராய்ந்து கூறுகிறார் பௌராணிகர். அறிவுசெறிந்த இக் கட்டுரையை எல்லாரும் ஊன்றிப் படித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

பணத்தை வியவகாரத்திற்கு அவசியம் வேண்டிய சாதனம் என்று எப்பொழுது கருதினார்களோ அப்பொழுதே அது ஒருவரிடத்தில் குவிவதைத் தடுக்க முடியாது என்ற விஷயத்தையும் ஒப்புக்கொண்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே ஏழை, பணக்காரர் என்ற செல்வ நிலை பேதத்தைத்தடுக்க முடியாது. கூடுமான வரையில் இந்த பேதம் அதிகரிக்காமல் இருக்கவும், மேலும் இப்பேதத்தின் காரணமாக சமூகத்தில் கொடுமைகள் உண்டாகாமல் இருக்கவும் பாடுபடுவதே அறிவுடைமை ஆகும். அவ்விதம் நம முன்னோர்கள் முயன்று வெற்றி கண்டார்கள். "ஓதி இடல்'' என்கிற ஏற்பாட்டின் மூலம் பணக்காரனுக்கும் ஏழைக்கும் ஒரு அன்புமிக்க கூட்டுறவை உண்டாக்கினார்கள்.

இருந்தாலும் பணத்தையும் ஒரு கட்டுபாட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று யோசித்து அதைத் தொழிலுக்கு ஊதியம் என்ற வகையில் உபயோகிப்பதைத் தடுத்தார்கள். அதாவது எந்த தொழிலாளியும் தொழிலை அதிகம் செய்து அதிகம் ஊதியம் பெற்று விடலாம் என்ற நப்பாசைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

"தொழில் என்பது பகவான் சேவைக்குக் காட்டிய வழி. பணத்தைச் சேகரிப்பதே அதன் லக்ஷ்யம் இல்லை. பணப்பிசாசுக்கு ஆன்மாவை விற்கக் கூடாது. இப்பணமாகிய பூதத்தை அடிமைப்படுத்தி ஈசுவராராதனத்தில் ஈடுபடுத்துவதே உண்மைத் தொழில்'' என்று நம் முன்னோர்கள் வற்புறுத்தினார்கள்.

இந்த ஏற்பாட்டைத்தான் கிராம அமைப்பில் காண்கிறோம். ஒவ்வொரு தொழிலாளியும் பொதுஜன நன்மைக்காக தொழிலைச் செய்கிறான். குயவன் வீடு வீடாக சட்டிப் பானைகள் தருகிறான். வண்ணான் எல்லோருக்கும் சலவை செய்கிறான். வைத்தியன் ஔடதங்கள் கொடுத்து உதவுகிறான். வாத்தியார் கல்வியை அளிக்கிறார். ஆனால் இவர்கள் எல்லாம் இவ்வளவு கொடு என்று கேட்பதில்லை. இவ்வித கிராமங்கள் இன்றைக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால் சமீபகாலம் வரையில் இருந்தன என்பது பலரும் அறிவார்கள்.

அப்பொழுது இத்தொழிலாளிகள் ஜீவனத்திற்கு என்ன செய்தார்கள்? கிராமத்தார்கள் வேண்டியதைக் கொடுத்து ரக்ஷித்தார்கள். அதாவது வருடம் தோறும் அறுவடை ஆனதும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் இவ்வளவு இவ்வளவு என்று தங்கள் தங்கள் மாசூலில் இருந்து விகிதாசாரம் என்று கொடுத்தார்கள். இதைப் பெற்ற தொழிலாளி மேலும் சம்பாதிக்க வேண்டும் என்ற கவலை இல்லாமல் தொழிலை நன்கு பயிலுவதிலும் பொது ஜனங்களுக்காக அத்தொழில் மூலம் சேவை செய்வதிலும் முனைந்தான். அதிகம் சேவை செய்தால் அதிகம் ஜனங்கள் பயன் பெறுவார்கள் என்று எண்ணி மகிழ்ந்தானே ஒழிய தனக்கு இன்னம் கொஞ்சம் ஊதியம் கிடைக்கும் என்று நப்பாசைப்பட்டு உழைக்கவில்லை. தன்னுடைய தொழிலின் தேர்ச்சி ஒரு பொது உடைமை என்று மதித்தான்.

இவ்வாறு முன் கூட்டி ஊதியத்தை கொடுப்பதை "மான்யம் கொடுத்தல்" என்று சொல்லுவார்கள். இந்த ஏற்பாட்டினால் "பணத்தை அதிகம் குவிக்க அதிகம் தொழில் செய்யவேண்டும், மற்றைய தொழிலாளியை அழிக்கும் போட்டா போட்டியில் இறங்கவேண்டும், சமயம் நேரும் பொழுதெல்லாம் சமூகத்தைச் சுரண்டும் பேரத்தில் இறங்கவேண்டும்" என்னும் நவீன தொழிலாளிகளின் தர்மத்தை அவர்கள் பயில வழி இல்லாதுபோயிற்று. சமூகத்தில் சுபிக்ஷம் பெருகி விளைச்சல் அதிகமானால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அதிகம் மான்யம் கிடைக்கும்.

சில சமயங்களில் சிற்சில காரியங்களைச் செய்வதற்காக நிலபுலன்களை மான்யமாக அளித்தார்கள். நாளது வரையில் கோவில், சத்திரம் முதலியவைகளுக்கு இவ்வித மான்யங்கள் இருப்பதைக் கவனிக்கலாம். இவ்வித தர்ம சொத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலை அந்தந்த கைங்கரியங்களை நிறைவேற்ற உதவும் சாமக்ரியைகளைத் தேடவும், சிப்பந்திகளுக்கு மான்யமாக தானியங்களைக் கொடுக்கவும் உபயோகித்தார்கள்.

தொழிலாளிக்கே நிலத்தை மான்யமாகக் கொடுத்தல் மிக்க அபூர்வம். அவர்கள் நேரிட உழவுசெய்ய முற்பட்டுவிட்டால் அவர்கள் சமூகத்திற்கு செய்ய வேண்டிய சேவைக்கு நேரம் கிடைப்பது கஷ்டம். அதனால்தான் தொழிலாளிகளுக்கெல்லாம் விளைச்சலில் இருந்து மான்யம் அளித்தார்கள். பெரிய பெரிய தர்மங்கள் என்ற ஏற்பாட்டுக்கு மட்டும் நிலங்களை நேரிட மான்யமாகக் கொடுத்தார்கள்.

இவ்வித ஏற்பாட்டை சிறிது பெருக்கிக்கொண்டு பார்ப்போம். பல ஊர்களிலும் பல தொழில்களைச் செய்து உழைக்கும் தொழிலாளிகளையும் அவர்களைக் காப்பாற்ற மான்யம் அளிக்க ஒப்புக்கொண்ட பெரும்பான்மையான உழவு தொழிலில் ஈடுபட்ட குடி ஜனங்களையும் பகைவர்களிடமிருந்தும், துஷ்ட ஜந்துக்களிடமிருந்தும் தர்மம் தவறுகிறவர்களிடமிருந்தும் காப்பாற்ற ஒப்புக்கொண்ட ஒரு பெரும் தொழிலாளி அரசன் என்பவன். குடி ஜனங்கள் அவ்வரசனுக்கும் மான்யமே கொடுத்தார்கள். அது தான் நம் முன்னோர்கள் உவகையுடன் அளித்த "ஆறில் ஒரு கடமை" என்கிற வரி.

இவ்விதம் பாரத்தை ஏற்றுக்கொண்ட அரசனும் பல சிப்பந்திகளைத் தன் கீழ் நியமித்துக்கொண்டான். அவர்களுக்கெல்லாம் தான் பெற்ற மான்யத்திலிருந்து பிரித்து ஊதியம் கொடுத்தான். தற்காலம் அதைத்தான் சட்டசபைகளில் வரவு செலவு சமர்ப்பித்து ஒவ்வொரு இலாக்காவிற்கும் மான்யம் என்று கோருகிறார்கள்.

இவ்விதம் நிர்வாகம் செய்கையில் சிப்பந்திகளை நேரிட நியமித்துப் பராமரிக்க முடியாத நிலையில் பெரிய அரசன் பல துணைவர்களைக் கொண்டான். அவர்களுக்கெல்லாம் சில சில ஊர்கள் என்று பிரித்துக்கொடுத்து தன்னைப்போலவே நிர்வாகம் செய்யும்படி உத்தரவு கொடுத்தான். அவனிடத்தில் பட்டயம் பெற்ற இவர்களும் சமூகத்திற்கு சேவை செய்து அரசன் பெறவேண்டிய "ஆறில் ஒரு கடமையை" தாங்களே பெற்றார்கள். இவர்களுக்கு பலவிதத்திலும் உதவி தர்மத்தை நிறுவ பாடுபடும் அரசனுக்கு இந்த வசூலில் ஒரு பாகத்தை அரசிறையாகக்கொடுத்தார்கள். இவ்வாறு துணையாக நியமிக்கப்பட்டவர்கள் தான் ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், இனும்தார்கள் முதலியவர்கள எல்லாம். அரசிறையையும் வேண்டாம் என்று சிலருக்கு தள்ளிக்கொடுத்ததினால் இனும்தார்கள் ஏற்பட்டார்கள் என்று கொள்ளலாம்.

ஆகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் மான்யத்தை பற்றி எழுந்தவை. இந்த மான்யம் தொழிலைப் புனிதமாக்கி பணத்தினின்றும் அவைகளை விடுதலையாக்கி பொது உடைமைகளாக செய்விக்கவே எழுந்தது என்பது விளங்கவில்லையா?

இந்த நிலையில் பணம் அதிகம் ஒரு இடத்தில் குவிகிறது என்றால் அது ஒவ்வொருவர் அதிகம் செலவு செய்யாததினால் மிஞ்சி விடுவது அல்லது ஒருவருக்கொருவர் மனப்பூர்வமாகத்தானம்கொடுக்காததினால்சிலரிடம் அதிகம் சேர்ந்துவிடுகிறது அல்லது பலாத்காரமாகவோ ஏமாற்றியோ ஒரு சிலர் பொருளை அபகரித்துக் கொள்ளுகிறார்கள் என்பதினாலோதான் என்பது கண் கூடு.

ஒருவிதமான விளைச்சல் தொழிலோ கைத்தொழிலோ செய்யாது ஒருவருக்கொருவர் பண்டத்தை மாற்றித்தருவது என்கிற தொழிலையே சிலர் செய்தபொழுது தங்களுக்கு வேண்டிய ஊதியத்தை அந்த வாணிபர்களே நிர்ணயித்துக் கொண்டார்கள். இதை லாபம் என்ற பெயரால் பெற்றார்கள். சமூகம் ஒப்பிக் கொடுத்தது. இதன் மூலம் இச்சாரர்களிடம் தனம் குவிய நேரிட்டது. ஆனால் தர்ம

நியமங்கள் மூலம் இவர்களுக்குள் போட்டி இல்லாமல் கடமை என்றே வியாபாரம நடத்த வேண்டும் என்ற உப தேசத்தை சொல்வதுடன் இவர்களிடம் அதிக லாபம் தங்காமல் இருப்பதற்காக பலவிதங்களில் இவர்களை செல வழிக்கும்படி சமூகம் விதி செய்ததை என்பதை ஆராய்ந்தால் விரியும். இவர்களையும் பொது உடைமைத் தத்துவத்தை ஒட்டி இயங்கும்படி விதித்தார்கள் என்றால் இங்கு போதும்.

இவ்விதம் எல்லாம் எப்பொழுது நடக்கும்? சத்தியம் எல்லோரிடத்திலும் இருந்தால் அல்லவா? ஆம். இந்த கேள்வி ஆதிமுதலே கேட்கப்பட்டு வருகிறது.

கடமையை கைவிட்டு விட்டு மான்யத்தை மட்டும் கோரியவர்களை அசுரர்கள் என்றும், மான்யத்தை இழந் தாலும் சேவையினின்றும் நழுவமாட்டோம் என்று உண் மையுடன் உழைத்தவர்களை தேவர்கள் என்றும் ஒப்பிட் டுப் பாருங்கள். தேவாசுர யுத்தம் எப்பொழுது ஏற் பட்டது? எப்பொழுது முடியும? ஒவ்வொரு தடவையும் அசுரர்களை அழித்து தேவர்களை விடுவிப்பதே தொழி லாகக் கொண்டுவிட்டார் மகா விஷ்ணு என்று புராணங் கள் கூறுகின்றதைக் கவனியுங்கள்.

அதே மாதிரி இப்புவியிலும் இவ்விதம் சோம்பல் வயப்பட்டு கடமைகளை நழுவவிட்டு சுரண்டல் தத்து வத்தைக்கடைப்பிடித்த முதலாளிகளாகிய இராக்ஷதர்களை அழித்து உரிமைகள் பறிக்கப்பட்டாலும் தளராது உழைத்த தொழிலாளிகளாகிய தேவர்களை ஜனநாயகத்தில் துவங்கும் அரசாங்கம் காப்பாற்றும்.

இவ்வித அரசாங்கம்தான் திரும்பத் திரும்ப பொது உடைமைக் கொள்கைகளை நிலை நிறுத்தும். அந்த வழியில் இது ஏற்படுத்திக் கொண்ட சாதனங்களைக் கண்டு நாம் சந்தேகம் கொள்ளக் கூடாது. நமது மயக்கத்தில் இவ் வித சாதனங்களை எல்லாம் இராக்ஷதர்களின் சூழ்ச்சி என்று சந்தேகிக்கிறோம். அது தவறு.

கடமையினின்றும் வழுவியவர்களை மீண்டும் கடமையை செய்யும்படி வற்புறுத்த வேண்டுமே யொழிய அந்த கைங்கரியங்களையே அழிப்பது விவேகம் அற்ற காரியம்.

இவ்விதம் யோசிக்கும் பொழுது ஜமீந்தார்கள் போன்றவர்களுக்குத் திட்டமான கடமைகளை விதித்துச் செய்யும்படி திட்டம் செய்ய வேண்டும். அப்படி செய்யமுடியாதவர்களை பதவியினின்றும் நீக்கி வேறு சிலரிடம் அப்பதவிகளை ஒப்புவிக்க வேண்டுமே ஒழிய அந்த ஸ்தாபனத்தையே அழிப்பது கூடாது. சில சமயம் சில ஜமீன்கள் அனுவசியம் என்று பட்டால் அழித்து விடலாம். அது ஆழ்ந்து யோசித்து அரசாங்கம் செய்ய வேண்டியதே ஒழிய ஜமீனையே அழித்து விடுவோம் என்ற கொள்கைக காரணமாக அழிக்கப்படுவதாகாது.

இதே மாதிரி யோசிக்கும் பொழுது சகலருக்கும் மான்யம் கொடுப்பதாக ஒப்பி பூமியை பெற்று உழ முன் வந்தவர்களில் சிலர் உழ முடியாது தவித்தால் அன்னார்கள் நிலங்களை அரசாங்கத்திடமே கொடுத்துவிட்டு தங்களுக்கு வேண்டிய ஏதாவது தொழில்களை செய்ய முற்பட வேண்டும். அதற்கான மான்யங்களைப் பெறலாம். நிலங்களை விற்பனை செய்ய இவர்களுக்கு அதிகாரம் இல்லை.

இவ்விதம் பொது உடைமையை ஸ்தாபிக்க கையாண்ட வழி தான் "மான்யம்" என்று அறிந்தால் நவீன பொது உடைமை வாதிகள் நம் முன்னோர்களின் ஆழ்ந்த புத்திமதிகளை ஏற்கத் தயங்கலாமோ?

TRADE MARK
GVR
குவாலிடி காப்பி
திருச்சி.

கோமதி ஸ்வாமிநாதன்

வேஷ்டியும் புடவையும்

முத்தண்ணு : கிரஹஸ்தர்
கனகம் : முத்தண்ணுவின் மனைவி
லக்ஷ்மி அம்மாள் : முத்தண்ணுவின் தாயார்
ராஜு :
ஜெயா : } முத்தண்ணுவின் குழந்தைகள்

[தீபாவளி யன்று இரவு. கடிகாரத்தில் மணி மூன்று அடிக்கின்றது. லக்ஷ்மி அம்மாள் விழித்துக் கொள்கிருள்].

லக்ஷ்மி அம்மாள் :—கனகம்! கனகம்! எழுந்திருடியம்மா, நாழிகையாய்விட்டது.

முத்தண்ணு :—அம்மா! இன்னும் நாழிகையாகவில்லே! ராத்திரி பதினேரு மணி வரை அலேந்துவிட்டு இப்போதுதான் படுத்தேன்.

லக்ஷ்மி—நாளும் கிழமையுமாகத் தூங்கிக்கொண்டே இருந்தால் முடியுமா? உன் தூக்கம்தான் இருக்கவே இருக்கிறது. ஆத்திலே தூக்கம், ஆபீசிலே தூக்கம். கனகம்! கனகம்! எழுந்திரம்மா!

ராஜு—(கொஞ்சம் கொஞ்சமாக விழித்துக்கொண்டு) அப்பா! அப்பா! பட்டாசுக் கட்டுகளே எல்லாம் பத்திரமாக வைத்திருக்கிருயா?

முத்—உன் முகரக் கட்டைக்கு பட்டாசுக் கட்டு வேறே. தூங்குடா இன்னும் கொஞ்ச நேரம்.

ஜெயா—(ஸ்வப்பனத்தில்) அப்பா! ராஜு மத்தாப்பை பிடுங்கிண்டுட்டான். தரமாட்டேன் என்கிருன் (தேம்பித் தேம்பி அழுகிருள்)

முத்—அடடா! என்ன தொந்திரவு! (எழுந்து சற்று தள்ளிப்போய்ப் படுத்துக் கொள்கிருர்)

ராஜு—அப்பா ஆனேவெடி வாங்கி யிருக்காயோ?

முத்—(கோபத்துடன்) அமெரிக்காவிலிருந்து அணுகுண்டு கூட வாங்கி வைத்திருக்கிறேன் உன் மண்டையில் போட்டு உடைக்க.

(கொரட்டை விடுகிருர்.)

லக்ஷ்மி—கனகம்! கனகம்! நாளும் கிழமையும் என்னடி தூக்கம்! சுறு சுறுப்பா எழுந்திரு.

கனகம்—(தனக்குள்) தூக்கம் வராத இந்தக்கிழம் படுத் தரபாடு ஜாஸ்தியாப் போயிடுத்து! (இரைந்து) ஆகட்டும் அம்மா.

[எழுந்து பின்கட்டிற்குப் போகிருள்]

லக்ஷ்மி—வெந்நீர்த் தவலையை வைத்துவிட்டு இரண்டு இழை கோலம்போடு. வருஷத்திற்கு ஒரு நாள் குழந்தைகளை அடிக்காமல் மெரட்டாமல் எண்ணெய் தேய்த்துவிடு.

2

[முத்தண்ணு, ராஜு, ஜெயா, மூவரும் ஸ்நானம் செய்துவிட்டு புதிது கட்டிக்கொள்கிருர்கள். திண்ணையில் உட்கார்ந்து முத்தண்ணு குழந்தைகளுக்கு மத்தாப்பு விட்டு வேடிக்கை காண்பித்துக் கொண்டிருக்கிருர்.]

ராஜு—அப்பா! அவ்வளவு வெடியும் களிமண் வெடி.

முத்—களிமண் மண்டைக்கும் களிமண் வெடிக்கும் தானே பொருத்தம்.

ஜெயா—அப்பா! இது மத்தாப்புப் பெட்டியா? தீப் பெட்டியா? கலரே இல்லே.

[திண்ணை ஜன்னலருகில் கனகம் வந்து நிற்கிருள்.]

கனகம்—ஏன்னு! என்னோட புதுப் புடவை எங்கே?

முத்—எல்லாப் புதுத் துணியுடனும் சேர்த்து அந்தத் தட்டிலேதானே வைத்திருந்தேன். எல்லாம் அங்கு தானிருக்கும்.

கனகம்—அங்கே புடவையைக் காணும். சின்னக் குழந்தையாட்டமா இங்கே உட்கார்ந்து மத்தாப்புக் கொளுத்திக்கொண்டு இருக்கேளே. கொஞ்சம் உள்ளே வந்து

அதை எடுத்துக் கொடுங்கோ. புண்ணியமுண்டு. நாழிகை யாகிறது.

முத்—உன் புடவையைத் தேட நான் மாத்திரம் போராது. இரண்டு போலிஸ்காரர்களையும் கூட்டிக்கொண்டு வருகிறேன். சரியாய்த் தேடிப் பார்க்காமல் என் பிராணனை வாங்காதே.

கனகம்—நாளும் கிழமையுமா துர்வார்த்தைகள் எல்லாம் பேசாதிங்கோ. நான் புடவை கட்டிக்காத போனுல் உங்களுக்கு என்ன குறைச்சல். நீங்கள் புது வேஷ்டி கட்டிக் கொண்டாய் விட்டதோல்லியோ?

[உள்ளே போகிருள். முத்தண்ணுவும் உள்ளே போகிருர்.]

லக்ஷ்மி—ஏண்டாப்பா! அவள் புதுப்புடவையைக் காணே மாமே. கொஞ்சம் தேடி எடுத்துக் கொடேன்.

முத்—நான் அதை ஒளித்து வைத்துக் கொண்டு விளையாடு கிறேனு? ஆத்துக் காரியத்தில் அக்கறையுடன் ராத் திரியே எல்லா சாமான்களையும் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டாமா?

[கனகம் விடு பூராவும் தேடுகிருள். புடவை அகப்படவில்லை]

கனகம்—ஞாபகமாக நேற்று அதைக் கடையிலிருந்து கொண்டு வந்தீர்களோ?

முத்—நான் வந்த உடன் நீ அடுத்த வீட்டிற்கு ஓடிப்போய் காண்பித்து விட்டு வந்தாயே. எங்கேயோ வைத்து விட்டு எங்கேயோ தேடுகிருய்.

[அடுத்த வீட்டு அப்பாசாமி அய்யர் வருகிருர்]

அப்பாசாமி—ஹரிஹி! கங்காஸ்னனம் ஆச்சா?

முத்—ஆச்சு! அவ்விடத்திலே கங்காஸ்னனம் ஆச்சா?

அப்—ஆச்சு! ஓய் முத்தண்ணு! ஜோரான வேஷ்டி அடித்து விட்டீரே. ஆந்திரா பாட்டேர்னு! இவ்வளவு அகலக்கரெ போட்டு உமக்கு எங்கே கிடைச்சது?

முத்—சாதாரண வேஷ்டிதான். க்யூவிலே நின்றுதான் வாங்கினேன்.

அப்பா—நீளம் நிறைய இருக்காப்போலே இருக்கு. இடுப் பிலே ஒரே சுருட்டா சுருட்டி வைத்திருக்கிறீரே !

முத்—ஏழு முழ வேஷ்டிதானே! (இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொள்கிறார். ஆச்சர்யத்தால் துள்ளிக் குதிக்கிறார்)
கனகம்! கனகம்! உன் புடவை அகப்பட்டு விட்டதடி!

கனகம்—(ஆவலுடன்) கட்டிலுக்கு அடியிலே இருந்ததா?

முத்—இல்லே! இல்லே! நான் என் வேஷ்டி யாக்கும் என்று அதைக்கட்டிக் கொண்டு விட்டேன்.

லக்ஷ்மி—நான் அப்போதே சொன்னேனே! என்ன நாக ரீகம் வேண்டியிருக்கு! அழுத்தமான கலரிலே, பச்சையோ சிகப்போ, புடவை வாங்குவதை விட்டு விட்டு, பாஷனும், பாஷன், பழுப்புக்கலரில் புடவை எடுத்துக்கொண்டாள். அது இந்தப்பாடு படுத்தி விட்டது.

முத்—அப்பாசாமி அய்யர்வாள்! ரொம்பதாங்ஸ் ஐயா. சரியான சமயத்தில் வந்தீர். இந்தப் புடவையைத் தான் இவ்வளவு நேரம் தேடிக்கொண்டிருந்தோம். நல்லவேளை அகப்பட்டுவிட்டது...அடி கனகம்! தட்டி லே இருக்கிற என் வேஷ்டியை எடுத்துண்டு வா.

கனகம்—(தேடிப்பார்த்து விட்டு) உங்கள் வேஷ்டியைக் காணோம்.

முத்—எங்கேடி போயிருக்கும்! சரியாய்த்தேடிப்பாரு.

கனகம்—நீங்கள் என் புடவையைக் கட்டிக்கொண்ட மாதிரி நான் உங்கள் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு நிற்கவில்லே. உங்கள் வேஷ்டி இங்கு தட்டுப்பட வில்லே.

முத்—அம்மா! நீ எங்காவது எடுத்துப் போட்டாயா?

லக்ஷ்மி—வருஷத்திற்கு ஒரு நாளில் நன்றாய்த்தான் கூத்து அடிக்கிறேள். நான் ஏண்டாப்பா உங்க வழிக்கு வருகிறேன்.

ஜெயா—அப்பா! எனக்கு ரெண்டு மத்தாப்புப் பெட்டி கொடு. உன் வேஷ்டி எங்கே இருக்கு என்று சொல்லு கிறேன்.

முத்—என்னடி! இப்பொழுது முதற் கொண்டே இப்படி பிளாக் மெயில் பண்ணுகிறாய்? நாளைக்கு உனக்குப் புருஷனாக வரப்போகிறவன் என்னபாடு படப் போகிறானோ? வேஷ்டி எங்கே இருக்கு சொல்லு.

ஜெயா—நேற்று அதை மேஜைமீது போட்டு விட்டுப் போனாயல்லவா! அதைப்பழைய துணி என்று நினைத்து பாட்டி அதை எடுத்து சின்னப்பாப்பாவிற்கு தூளி கட்டிப்போட்டு விட்டாள்.

(முத்தண்ணா எழுந்து போய்ப்பார்க்கிறார்)

முத்—பேஷ். அம்மா! நீ பார்க்கவே இல்லை என்றாயே!

லக்ஷ்மி—நான் புதிசுன்னு கண்டேனா? அது என்னவோ, கன்னங்கரேர்னு அழுக்குப்பிடிச்ச துணி மாதிரி இருந்தது. குழந்தைக்குத் தூளி கட்டினேன்.

முத்—உனக்குப் பயந்துதான் சலவைசெய்த வேஷ்டி வாங்காமல் சாஸ்திரோக்தமாய் கோடி வேஷ்டி வாங்கினேன்.

அப்பா—இப்போது இரண்டும் அகப்பட்டு விட்ட தோல்லியோ? நீர் உள்ளேபோய், ஸ்திரீபார்ட்டை களைந்துவிட்டு ராஜபார்ட் போட்டுக்கொண்டுவாரும்.

முத்—நீர் வராதபோனால் இதை நான் கவனித்திருக்கவே மாட்டேன். இந்தப்புடவையுடன் ஊர்முழுதையும் சுற்றிவிட்டு வந்திருப்பேன்.

அப்பா—முத்தண்ணா முத்தம்மாளானார் என்று எல்லோரும் தமாஷ் பண்ணியிருப்பா! உள்ளேபோய், இந்த புடவையைக்கண்டு பிடித்துக் கொடுத்ததற்கு நிறைய பக்ஷணம் கொண்டுவாரும்.

(போகிறார்கள்.)

தசை

யாரை வேண்டுமானாலும் பாருங்கள். ஜோசியரிடம் ஜாதகத்தை நீட்டும் பொழுதே நம்ப "தசை" எப்படி என்றுதான் கேட்கிறார்கள். ஏன் இப்படி "தசை"யைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்? எனக்கு உத்தியோகம் உயருமா? அல்லது பெருத்த தனம் கிடைக்குமா? குழந்தை பிறக்குமா? அல்லது கஷ்டம் நிவாரணம் ஆகுமா? என்றெல்லாம் கேட்கக் கூடாதோ? கேட்கலாம். ஆனால் எல்லாம் "தசை" சரியாக இருந்தால் தானே நடக்கிறது. இவ்வித சித்தாந்தம் ஜோதிஷம் கேட்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் நன்கு ஊறி இருக்கிறது. தன் தசை வராவிட்டால் கிரகங்கள் என்ன செய்யக் கூடும் என்று சுட்டிக்காட்டுகிறார்கள். கிரந்த கர்த்தாக்கள்

किं कुर्वन्ति ग्रहाः सर्वे स्वदशानां अनागमे ॥

என்று கூறி இருப்பதை எடுத்துக் காட்டுகிறார்கள்.

இந்த "தசை" என்பது என்ன? "தசை" என்றால் சமைந்திருக்கும் நிலை என்று கொள்ள வேண்டும். அதாவது அந்தந்த கிரகங்களும் தங்கள் பலனை தோற்றுவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். அந்த காலவரைக்குள் அந்தந்த கிரகங்கள் பலன் கொடுப்பதாகக் கொள்ளுகிறார்கள்.

அப்படி பிரித்த ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஒவ்வொரு தசானாதன் இருக்கிறான். இவ்விதம் வகுக்கப்பட்ட தசா பிரிவினைகள் அனேக விதம். ஒவ்வொரு ஜாதகத்திலும் ஒவ்வொரு விதமான தசா முறை பலன் தருமென்று விசேஷ விதிகள் இருக்கின்றன. அவைகளை விவரித்தால் பெருகும்.

ஆகவே இந்த தென்னாட்டில் பலராலும் கையாளப்படும் உடுதசா ஒன்றையே வெகுவாக பலன் சொல்ல உதவும் என்று கொண்டு சிறிது விவரிப்போம்.

இம்முறையில் தசாநாதன்கள் ஒரே வரிசைக் கிரமத்தைக் கொண்டு இயங்குகிறார்கள். சூரியன் 6 வருடங்கள் அதையடுத்து சந்திரன் 10 வருடங்கள், செவ்வாய் 7 வருடங்கள், இராகு 18 வருடங்கள், குரு 16 வருடங்கள், சனி 19 வருடங்கள், புதன் 17 வருடங்கள், கேது 7 வருடங்கள், சுக்கிரன் 20 வருடங்கள் என்று 120 வருடங்களை வகுத்துக் கொடுத்துள்ளார்கள். ஜன்ம காலத்தில் எந்த நக்ஷத்திரத்தில் சந்திரன் இருக்கிறானோ அந்த நக்ஷத்திரத்து தசை ஆரம்பமாகிறது. நக்ஷத்திரத்தில் மீதியுள்ள பாகம் எவ்வளவோ அவ்வளவு தசையிலும் பாக்கி என்று கணக்கிடுவார்கள். இந்த தசைகள் கிருத்திகைக்கு சூரியன் என்று தொடங்கி முறையே ரோஹிணிக்கு சந்திரன், மிருகசீர்ஷத்திற்கு செவ்வாய் என்று வரிசையாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஞாபகத்திற்காக கீழேயுள்ள தொகுப்பைக் குறித்துக் கொள்ளுங்கள்.

அசுவதி, மகம், மூலம் கேது தசை பரணி பூரம், பூராடம் சுக்கிர தசை. கிருத்திகை, உத்திரம், உத்திராடம் சூரிய தசை. ரோஹிணி, ஹஸ்தம், திருவோணம சந்திர தசை. மிருகசீர்ஷம், சித்திரை, அவிட்டம் செவ்வாய் தசை. திருவாதிரை, சுவாதி சதயம் இராகு தசை. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி குரு தசை. பூசம், அனுஷம், உத்திரட்டாதி சனி தசை. ஆயில்யம், கேட்டை, ரேவதி புதன் தசை.

பிறகு ஒவ்வொரு தசையிலும் 9 பெயர்களுடைய புக்திகளையும் இதே வரிசையில் பகிர்ந்து கொடுப்பார்கள். மொத்த தசா வருடங்களை 120 பாகம செய்து எந்த புக்தியோ அந்த கிரகத்தின் தசையின் வருடத்தின் அளவு பங்குகள் கொண்டது புக்தியாகும். உதாரணமாக சந்திர தசை 10 வரு. அதில் செவ்வாய் புக்தி என்றால் $\frac{10}{120} \times 7 = 7$ மாதங்கள். இந்த புக்திகளிலும் கிரகங்கள் பலனைத்தரும். ஆனால் தசாநாதனுடைய பலனை அழிக்காது அதற்குட்பட்டே புக்திநாதன் என்று கொள்ளவேண்டும்.

இவ்விதமே புக்தியை 9 அந்தரங்களாகவும், அந்தரங்களை சூக்ஷ்மங்களாகவும், சூக்ஷ்மங்களை பிராணன்களாகவும் பிரிப்பதும் உண்டு.

இவ்வித தசாபுக்தி முதலியவைகள் குறிக்கும் கால அளவில்தான் ஜாதகத்தில் கண்ட யோகங்கள் முதலிய பலன்களைக் கூறவேண்டும். அதுகாலே தசாநாதனுடைய இராசி அதாவது கோசாரத்தில் அஷ்டகவர்க்க பலம் முதலியவைகளையும் ஜன்மகாலத்து பலம் முதலியவைகளையும் மனதில் இறுத்தி பலாபலன்களைக் கூறவேண்டும்.

இப்படி எல்லாம் சந்திரன் இருந்த நக்ஷத்திரத்திலிருந்து கணக்கெடுக்கப்பட்ட தசைக்கு உலக வழக்கில் பலன்கள் கூறுகிறோம். முன்பு ராசிக்குக் கொடுத்த வ்யாக்யானத்தை அனுசரித்தால் ஏன் தசைகளுக்கும் ஒரு விளக்கம் அவ்வாறே கொடுக்கக்கூடாது என்று கேட்கலாம். தாராளமாகக் கொடுப்போம்.

இந்த சந்திர நக்ஷத்திர தசை சங்கல்பத்தின் தன்மையைத் தான் ஆயுள் பூராவும் காட்டுகிறது என்று கொள்ளுவோம்.

அப்பொழுது ஆத்மபலத்தை நிர்ணயிக்க சூரிய நக்ஷத்திரத்தில் இருந்து தசைகளைக் கணிக்கவேண்டும்.

இவ்விதமே சௌரியத்தை கவனிக்க செவ்வாய் நக்ஷத்திர வாயிலாகவும், வாக் வன்மையைத் தீர்மானிக்க புதன் நக்ஷத்திர வாயிலாகவும், புத்தியின் போக்கை நிர்ணயிக்க குருவின் நக்ஷத்திர வாயிலாகவும், சுகானுபவங்களை சுக்கிரன் நக்ஷத்திர வாயிலாகவும், சகிப்புத்தன்மையை சனி நக்ஷத்திரம் மூலமாகவும், தேகத்தின் வளர்ச்சியை லக்கின நக்ஷத்திர வாயிலாகவும் கணிக்கும் தசை, புக்திகளைக் கொண்டு ஊகிக்கவேண்டும்.

இது ஒரு யுக்திதான். ஆனால் கவனித்து பயன் உண்டா என்று தீர்மானியுங்கள்.

முன் இதழ் தொடர்ச்சி மாலியேர்



விறகு வெட்டி

பாத்திரங்கள்

முருகன் :—ஒரு விறகு வெட்டி.
வள்ளி :—முருகனின் மனைவி.
மாரிசாமி :—முருகனின் பக்கத்துக் குடிசைக்காரன்.
முருகேச முதலியார் :—ஒரு ஜமீன்தார்.
லக்ஷ்மி :—ஜமீன்தாரின் பெண்.
முனிசாமி :—ஜமீன்தாரின் வேலைக்காரன்.
மாணிக்கம் :—ஜமீன்தாரின் இன்னொரு வேலைக்காரன்.
பொன்னம்மா :—மாணிக்கத்தின் மனைவி, லக்ஷ்மியின் தாதி.
பசுபதி :—லக்ஷ்மி காதலிக்கும் யுவன்.

காட்சி 9.

முருகேச முதலியார் :—எங்கே கொஞ்ச நாழியாக உங்களைக் காணோம்.

முருகன் :—இல்லை. வெளியில் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். ஆமாம் பெண் எப்படியிருக்கிருள்.

முருகேச முதலியார் :—தங்கள் மருந்தைச் சாப்பிட்டதிலிருந்து உடல் நிலை இன்னும் மோசமாக இருக்கிறது.

முருகன் :—பேஷ்! அப்படியா? ரொம்ப சரி. மருந்து தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து இருக்கிறது என்று காட்டுகிறது.

முருகேச முதலியார் :—நிலைமை விபரீதமாகப் போய் விடுமோ என்று பயமாயிருக்கிறதே.

முருகன் :—அதெல்லாம் ஒன்றும் கவலைப்படாதீர்கள். இந்த மாதிரி வியாதிகளை விட்டுப் பிடிக்கவேண்டும்.

முருகேசமுதலியார் :—அது யார் தங்கள் பக்கத்தில் இருப்பது?

முருகன் :—அவர் என்னுடைய சிஷ்யர். இந்தக் கேஸில் எனக்கு உதவியாக வந்திருக்கிருர்.

காட்சி 10.

பொன்னிம்மாள் :—இதோ சின்னம்மா வராங்க. கொஞ்சம் உலாவி விட்டு வரணுமாம்.

முருகன் :—போய் உலாவி விட்டு வரட்டுமே. உடம்புக்கு மிகவும் நல்லது. இந்தாருங்கள் சின்ன டாக்டர்! அவள் நாடியைப் பிடித்துப் பாருங்கள். நான் சற்று ஜமீந்தாரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருகிறேன்.

[முருகன் ஜமீந்தாரை ஒரு பக்கம் இழுத்துக்கொண்டு போகிருன். ஜமீந்தார் தன் பெண் பக்கம் திரும்பும்போதெல்லாம் அவர் முகத்தைப் பிடித்துத் திருப்புகிருன்.]

இதோ பாருங்கள் முதலியார்வாள்! எங்கள் வைத்தியர்களுக்குள்ளேயே ரொம்ப நாளாக ஒரு பிரச்னை. ஸ்திரீகளை சொஸ்தப்படுத்துவது எளிதா அல்லது புருஷர்களை சொஸ்தப் படுத்துவது எளிதா என்பது தான் பிரச்னை. ஸ்திரீகளைச் சொஸ்தப் படுத்துவது தான் எளிது என்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் புருஷர்களைச் சொஸ்தப் படுத்துவதுதான் எளிது என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இங்கே பாருங்கள் முதலியார்வாள்...... கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

லக்ஷ்மி :—நான் ஒரு நாளும் மாறவே மாட்டேன்.

முருகேச முதலியார் :—ஆ......என் பெண் பேச ஆரம்பித்து விட்டாள்! பேச ஆரம்பித்து விட்டாள்! வைத்தியரே உங்களைப் போன்ற கெட்டிக்கார வைத்தியரை நான் பார்த்ததே இல்லை. நான் உங்களுக்கு என்ன தான் கைம்மாறு செய்யப் போகிறேனோ!

முருகன் :—இவ்வளவு கடினமான கேசை நான் பார்த்ததேயில்லை போங்கள்.

லக்ஷ்மி :—இதோ பாருங்கள் அப்பா! நான் பசுபதியைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. இது சத்தியம்.

முருகேச முதலியார் :—என்ன?

லக்ஷ்மி :—ஆம். என் மனதை மாற்ற யாராலும் முடியாது.

முருகேச முதலியார் :—வந்து......

லக்ஷ்மி :—நீங்க என்னதான் சொன்னாலும் அது என் காதில் விழாது.

முருகேச முதலியார் :—ஆனால்......

லக்ஷ்மி :—நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை.

முருகேச முதலியார் :—நான் வந்து......

லக்ஷ்மி :—இதோ பாருங்கள். நீங்கள் என்னுடன் வாதாடிப் பிரயோசனமில்லை. நான் உங்கள் சொல்படி கேட்கப் போவது கிடையாது. நான் பசுபதியைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன். இதைத் தடுக்க யாராலும் முடியாது.

முருகேச முதலியார் :—இது என்ன, வார்த்தைகளை இப்படி கொட்டுகிறுளே? வைத்தியரே நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இவளைத் திரும்பவும் ஊமையாக்கி விடுங்கள்.

முருகன் :—அது முடியாத காரியம். வேண்டுமானுல் உங்களைச் செவிடாக்குகிறேன்.

முருகேச முதலியார் :—ரொம்ப சந்தோஷம். அப்படியானுல வந்து......

லக்ஷ்மி :—இதோ பாருங்கள். வீண் வாதாடிப் பிரயோசனமில்லை. நான் பசுபதியைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்.

முருகன் :—ஆ...எனக்கு இப்பொழுது தான் புரிகிறது. இந்த வியாதிக்கும் என்னிடம ஒரு நல்ல மருந்திருக்கிறது.

முருகேச முதலியார் :—என்ன வைத்தியரே, நிச்சயமாக உங்களிடம் மருந்திருக்கிறதா?

முருகன் :—நீங்கள் சிறிதும் கவலைப்படாதீர்கள். நம்ம சிஷ்யர் இருக்கிறுரே, இந்த மாதிரி வியாதிகளைத் தீர்ப்பதில் பலே கெட்டிக்காரர். (முருகன் பசுபதியின் காதில் ஏதோ ரகசியமாய்ச் சொல்லுகிறுன். பிறகு பசுபதியைப் பார்த்து வெளிப்படையாக) இந்த மருந்தை உடனேயே கொடுத்துவிடு. நாழி பண்ணினுயோ பலனளிக்காது.

காட்சி 11.

முருகேச முதலியார் :—இப்பொழுது என்னமருந்து கொடுக்கச் சொன்னீர்கள்?

முருகன் :—அதெல்லாம் ரொம்ப ஆபத்தான நிலைமையில் கொடுக்க வேண்டிய மருந்துதான் கொடுத்திருக்கிறேன்.

முருகேச முதலியார் :—என்ன இருந்தாலும் அவளுக்கு எத்தனை அகம்பாவம் பார்த்தீர்களா? தகப்பனார் வார்த்தைக்குத் துளியாவது லக்ஷியம் பண்ணுகிறுளா பார்த்தீர்களா?

முருகன் :—இந்தப் பெண்களே பிடிவாதக்காரர்கள் தான்.

முருகேச முதலியார் :—இவளுக்கே அந்த பசுபதியின்பேரில் ஒரே பைத்தியம்.

முருகன் :—வயது வந்தாலே இந்த மாதிரிக் கோளாறுகள் உண்டாகத் தான் செய்யும்.

முருகேச முதலியார் :—இவள் இந்த மாதிரி இருக்கிறுள் என்று தெரிந்துமே அவள் வெளியில் போக முடியாதபடி பூட்டி வைத்துவிட்டேன்.

முருகன் :—ரொம்ப சரியான காரியம்.

முருகேச முதலியார் :—ஆமாம் நாளைக்கு ஏதாவது எக்கச்சக்கமாக நேர்ந்து விட்டால் எனக்கல்லவா அவமானம்.

முருகன் :—சந்தேகமில்லாமல்.

முருகேச முதலியார் :—நான் அப்படிச் செய்யாவிட்டால் அவள் அவனுடன் ஓடியே போயிருப்பாள்.

முருகன் :—நிச்சயமாக.

காட்சி 12.

மாணிக்கம் :—எஜமான்! எஜமான்! சின்னம்மா பசுபதியோடு ஓடிப் போயிட்டாங்க. பசுபதிதான் குட்டி டாக்டராட்டம் வேஷம் போட்டுக்கொண்டு அம்மாளை அழைச்சிண்டு போயிட்டாரு. இதோ இந்த வைத்தியர் தான் இதற்கெல்லாம் உடைந்தையா இருந்தாரு.

முருகேச முதலியார் :—என்னையா ஏமாற்றப் பார்தார்கள்? இருக்கட்டும். நீ உடனேயே போலீஸ்காரர்களை அழைத்துக்கொண்டு வா. இந்த இருவரையும் தண்டித்து விட்டுத்தான் மறுகாரியம்.

காட்சி 13.

வள்ளி :—அப்பாடா! இந்த மனுஷனுக்காகத் தேடி நான் எங்கெல்லாம் அலையறது? (மாணிக்கத்தைப் பார்த்து) ஏன் ஐயா? உன்னைத்தானே! நான் ஒரு வைத்தியர் சிபார்சு பண்ணினேனே, அவர் எங்கே?

மாணிக்கம் :—அவரா? இதோ இருக்காரே. அவரைத் தூக்கிலிடப் போகிறார்கள்.

வள்ளி :—ஐயோ என் புருஷனையா? எதற்காக?

மாணிக்கம் :—எங்க எசமானுடைய பெண் யாருடனோ ஓடுவதற்கு இவர் உடந்தையா இருந்தார். அதற்காக...

வள்ளி :—(முருகனைப்பார்த்து) இது நிஜந்தானா? வீட்டுக்கு வேண்டிய விறகு இன்னும் வந்து சேராமல் இருக்கிறது, அதற்குள் உன்னைக் கொன்னுடுவார்கள் போலிருக்கிறதே.

முருகன் :—இந்தா இந்த சமயத்தில் என்னை ஹிம்சிக்காதே. போ, அந்தண்டே.

வள்ளி :—அதெல்லாம் முடியாது. நீ சாகிறதை வேடிக்கைப் பார்த்துட்டுத்தான் போவேன்.

காட்சி 14.

முருகேச முதலியார் :—இதோ போலீஸ்காரர்கள் வரப் போகிறார்கள். உன்னை எப்படித் தண்டிக்க வேண்டுமோ அப்படி தண்டிப்பார்கள்.

முருகன் :—ஐயோ என்னை விட்டு விடுங்களேன். வேணுமென்றால் கழியினால் நான்கு அடி அடித்து விட்டு விடுங்களேன்.

முருகேச முதலியார் :—அதெல்லாம் முடியாது.

ஒரு ஆங்கில அழகி ஒரு புதுவிதக் கருவியினால் முகத்தில் கிரீம் தடவிக்கொள்கிறாள். "பிரிட்டனால் செய்ய முடியும் என்று பிரிட்டனில் ஒரு கண் காட்சி நடந்தது. அதில் அநேக காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டன, அவற்றில் இதுவும் ஒன்று. இதே மாதிரி நம் நாட்டிலும் "இந்தியாவிலும் செய்ய முடியும்" என்று கண் காட்சி எப்பொழுது வரப்போகிறதோ!

காட்சி 15.

பசுபதி :—முதலியார் அவர்களே! தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். லக்ஷ்மியும் நானும் முதலில் ஓடி விடுவதாகத்தான் தீர்மனித்தோம். ஆனல் இது தவறு என்று பின்னல் படவே தங்கள் சம்மதத்துடன் அவளைக்கல்யாணம் பண்ணிக்கொள்ள முன் வந்திருக்கிறேன். இந்த சமயத்தில் நான் தங்களுக்கொரு நல்ல சமாசாரம் சொல்லவேண்டும். என்னுடைய மாமா இப்பொழுதுதான் இறந்ததாகவும் அவருடைய திரண்ட சொத்தையெல்லாம் என் பெயருக்கு எழுதி வைத்திருப்பதாகவும் இப்பொழுதுதான் செய்தி கிடைத்தது.

முருகேச முதலியார் :—அப்படியா—ரொம்ப சந்தோஷம். என் பெண்ணை உனக்குக் கொடுப்பதில் யாதொரு தடையுமில்லை.

முருகன் :—அப்பாடி நான் பிழைத்தேன்.

வள்ளி :—வைத்தியர் என்று பெயர் வாங்கிக் கொடுத்தது நான் என்பது ஞாபகமிருக்கட்டும்.

முருகன் :—நான் பட்ட அத்தனை அடிகளையும் வாங்கிக் கொடுத்ததும் நீ தான் என்பது எனக்கு ஞபாகம் இருக்கும்.

முற்றிற்று.

மணி என்ன?

கைச்கடிகாரம் கட்டிக் கொண்டிருப்பவர்கள் அடிக்கடி தங்கள் கடிகாரத்தைப் பார்ப்பதைக் கவனித்திருக்கலாம். அடுத்த தடவை உங்கள் நண்பர் யாராவது அப்படி மணி பார்க்கும் பொழுது மணி என்ன? என்று அவர்களைக் கேளுங்கள். அவர்கள் திரு திரு என்று விழிப்பார்கள். திரும்பவும் ஒரு தடவை கடிகாரத்தைப் பார்த்தால் தான் அவர்களால் மணி சொல்ல முடியும். ஏனெனில் முக்கால்வாசி இந்தமாதிரி கடிகாரத்தைப் பார்ப்பவர்கள் மணி என்னவென்று தெரிந்து கொள்வதற்காகப் பார்ப்பதில்லை, ஏதாவது ஒரு காரியத்தை மனதில் வைத்துக் கொண்டு அதற்கு இன்னும் காலம் இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் பார்க்கிறார்கள். கடிகாரத்தைப் பார்த்து இன்னும் கால் மணி நேரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்கிறார்களே ஒழிய மணி என்ன என்பதை தெரிந்து கொள்வதில்லை.

எல்லைப்புறத்தில் ஜவாஹருக்கு மூன்று செம்மறியாடுகள் காணிக்கையாக அளிக்கப்பட்டன. ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக ஜவாஹர் அவற்றைத் தொட்டுவிட்டு அவற்றிற்கு விடுதலை அளித்துவிட்டார்.

தென் வஜீரிஸ்தான் பிரதேசத்தின் தலைநகரான ஜண்டோ
பாடிக்கொண்டும் பண்டிட் ஜவாஹர்

லாவில் அப் பிரதேசத்து வாசிகள் குதித்துக் கொண்டும்
லால் நேருவை வரவேற்ற காட்சி.

198947
சென்னை-600 008



எல்லைப்புற ஜாதியினருடன் பண்டிட்ஜி கை குலுக்கு
கிறார். பின்னால் நிற்பது வடமேற்கு எல்லைப்புற
மாகாண பிரதமரான ஸ்ரீ கான் சாஹிப் அவர்கள்.

சிங்கும் மார்வாடியும்

ஒரு பணக்கார சிங்கிடம் 30,000, ரூபாய் பெறுமான முள்ள நகைகள் இருந்தன. நகைகள் மிகவும் பழைய காலத்து நகைகள் ஆனதாலும் அவனுக்கும் பணம் வேண்டியிருந்ததாலும் சிங் அந்த நகைகளை விற்க முயற்சித்தான். அதற்காக ஒரு மார்வாடியிடம் அந்த நகைகளைக் கொடுத்து அந்த நகைகளை நல்ல விலைக்கு விற்றுக் கொடுக்கும்படி சொன்னான்.

சில நாட்கள் கழித்து மார்வாடியிடமிருந்து ஒரு ரெஜிஸ்டர் கடிதம் வந்தது. அதில் நகைகள் களவு போய் விட்டன என்று கண்டிருந்தது.

இதைக் கண்டதும் சிங் திகிலடைந்து மார்வாடியிடம் "ஓடினான். அவ்வளவு விலையுயர்ந்த நகைகளை நீ எப்படி அஜாக்கிரதையாக வைத்திருக்கலாம்'' என்றுகேட்டான்.

அதற்கு மார்வாடி, "நகைகளா? என்ன நகைகள்? எனக்கொன்றும் தெரியாதே" என்று கைகளை விரித்தான்.

"என்னய்யா! நான் விற்பதற்கு நகைகள் கொடுக்க வில்லையா?"

"விற்பதற்கா? எப்பொழுது கொடுத்தாய்?"

"என்னய்யா இப்படிச் சொல்கிறாய்? நகைகள் களவு போய் விட்டது என்று நீயே ரெஜிஸ்டர் கடிதம் அனுப்பியிருக்கிறாயே!'' என்று கடிதத்தைக் காண்பித்தான் சிங்.

அந்தக் கடிதம் தான் எழுதவில்லை என்றும் நகைகளைப்பற்றி தனக்கொன்றும் தெரியாது என்றும் மார்வாடி சாதித்து விட்டான்.

சிங் ஒன்றும் புரியாமல் கதிகலங்கிப் போய் என்னிடம் வந்தான். கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்யப்பட்டது. நகைகளையோ அல்லது அதற்குப் பெறுமானமாக 30,000 ரூபாயோ கொடுக்கவேண்டுமென்று கேட்டிருந்தோம்.

அந்தக் கேஸில் முதலில் ஸ்ரீ நீயூஜண்ட் கிராண்ட் எங்கள் பக்கம் ஆஜரானார். ஆனால் கொஞ்ச நாளைக்கெல்லாம் அவர் இங்கிலாந்து போக நேர்ந்து விட்டதால் ஸ்ரீவி.வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்களை எங்கள் கட்சி வக்கீலாக நியமித்தோம்.

தான் மார்வாடியிடம் கொடுத்த நகைகள் சிங்கிடம் முன்னமேயே இருந்தது என்று நிரூபித்து விட்டால் எங்களுக்கு கேஸ் ஜெயித்துவிடும் என்று பட்டது.

மார்வாடியிடம் கொடுப்பதற்கு கொஞ்ச நாளைக்கு முன்னர் சிங் அந்த நகைகளை ஒரு முஸ்லீமிடம் அடகு வைத்துப் பணம் வாங்கி இருந்தான். ஆகவே அந்த முஸ்லீமை எங்கள் பக்கம் சாட்சியம் சொல்லச் செய்வது என்று தீர்மானித்து அந்த முஸ்லீமைத் தேடிப்போனோம்.

நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உளவு அறிந்து கொண்டிருந்த மார்வாடி முஸ்லீமை தன்பக்கம் இழுப்பதற்காக ஒரு ஆளை எங்களுக்கு முன்னாலேயே அங்கு அனுப்பிவிட்டான்.

சிங் முஸ்லீம் வீட்டிற்குள் நுழைந்த பொழுது, இவனுக்கு முன்னால் அங்கொரு ஆள் உட்கார்ந்திருந்தான். ஆனால் அவன் மார்வாடியின் ஆள் என்பது சிங்குக்குத் தெரியாது.

தனக்காகச் சாட்சி சொல்ல வரவேண்டுமென்று சிங் முஸ்லீமைக் கேட்டான்.

"சாட்சி சொல்வதற்கு எவ்வளவு கொடுப்பாய்" என்று கேட்டான் அந்த முஸ்லீம்.

"ஆயிரம் ரூபாய்" என்றான் சிங்.

இதற்குள் சிங்கிற்கு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்த மார்வாடியின் ஆள் தான் இரண்டாயிரம் கொடுக்க தயாராக இருப்பதைத் தெரிவிப்பதற்காக இரண்டுவிரலைக் காட்டினான். இதை எதிரே இருந்த கண்ணாடியில் சிங்கும் பார்த்துவிட்டான்.

"எதிர் கட்சிக்காரர்கள் இன்னும் நிறையக் கொடுப்பார்களே" என்றான் முஸ்லீம்.

சிங் :—அப்படியானால் நானும் இரண்டாயிரம் தருகிறேன்.

மார்வாடியின் ஆள் :—(மூன்று விரல்களைக் காட்டினான்.)

சிங் :—சரி, நானும் மூவாயிரம் தருகிறேன்.

மார்வாடியின் ஆள் :—(நான்கு விரல்களைக் காட்டினான்.)

சிங் :—சரி, நானும் நான்காயிரம் தருகிறேன்.

மார்வாடியின் ஆள் :—(ஐந்து விரல்களைக் காட்டினான்.)

இதற்குமேல் தன்னால் கொடுக்க முடியாது என்று தோன்றவே சிங் முஸ்லீமைப் பார்த்து, "இதற்கு மேல் என்னால் தர முடியாது. சாட்சி சொல்ல வராவிட்டால் வேண்டாம்" என்று வெறுப்படைந்து கூறிவிட்டு வீடு திரும்பினான். முஸ்லீம் சாட்சி சொல்ல வரப்போவதில்லை என்று தெரிந்ததும் அவனுக்குப் பணம் கொடுப்பானேன் என்று அவனை ஏமாற்றிவிட்டு சென்னைக்குத் திரும்பி விட்டான் மார்வாடியின் ஆள்.

இது முஸ்லீமுக்குக் கோபம் கோபமாக வந்தது. சிங் பக்கமாகத் தான் சாட்சியம் சொல்ல வரப்போவதாகவும் அதற்காகத் தனக்கொன்றும் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்றும் சொல்லி அனுப்பினான். அப்படியே வந்தும் சேர்ந்தான்.

நான் முஸ்லீமை ஸ்டேஷனில் சந்தித்து ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். ஸ்ரீ அய்யங்கார் அவர்களிடம் முஸ்லீம் உண்மையை ஒப்புக்கொண்டான். சிங் தன்னிடம் நகைகள் அடகு வைத்தது உண்மை என்று கூறி நகை அடையாளங்களையும் சொன்னான்.

ஆனால் சாட்சியம் சொல்வதற்காக கோர்ட்டுக்கு வந்த முஸ்லீமை மார்வாடி பார்த்துவிட்டான். உடனேயே

அவன் கையில் ஒரு பணமூட்டையை வைத்தான். அவ்வளவுதான். முஸ்லீம் அங்கிருந்து மெல்ல நழுவ ஆரம்பித்தான்.

இதைக் கண்டு நான் உடனே ஜட்ஜிடம் தகவல் தெரிவித்தேன். உடனேயே கோர்ட் சார்ஜண்ட் போய் முஸ்லீமைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான். சாட்சிக் கூண்டில் ஏறச் சொல்லி அவனைக் கேள்விகள் கேட்டபொழுது தனக்கு இந்தக் கேஸைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று சாதித்தான்.

ஸ்ரீ. வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் :—என்னடப்பா ஒன்றும் தெரியாது என்று சொல்கிறாயே. இன்று காலை என் வீட்டிற்கு வரவில்லையா? அங்கு நீ நடந்த விஷயங்களையெல்லாம் ஒப்புக் கொள்ள வில்லையா?

முஸ்லீம் :—நீங்கள் யாரென்றே எனக்குத் தெரியாதே! நான் எதற்காக உங்கள் வீட்டிற்கு வருகிறேன்?

இந்த பதிலைக்கேட்டு ஸ்ரீ. வி. வி. ஸ்ரீனிவாசய்யங்கார் திகைத்து நின்றார். பிறகு ஆதியோடு அந்தமாக எல்லா விஷயங்களையும் ஜட்ஜிடம் கூறினார். இதைக் கேட்டதும் ஜட்ஜ் மார்வாடி மீது சந்தேகப்பட ஆரம்பித்து எங்களைப் பார்த்து "நகைகள் குறைந்த பட்சம் 60,000 ரூபாயாவது இருக்க வேண்டும். இல்லாவிடில் மார்வாடி இது விஷயமாய் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்க மாட்டான். ஆகவே உங்களுக்கு 30,000க்குப் பதில் 60,000மே நஷ்ட ஈடு தீர்ப்புக் கொடுக்கிறேன்" என்றுகூறி அப்படியே தீர்ப்பும் அளித்தார்.

பொய் சாட்சி சொன்னதற்காக முஸ்லீம் மீது வழக்கு தொடரும்படி ஜட்ஜ் உத்திரவு கொடுத்தார். அப்படியே வழக்கும் தொடரப்பட்டது. இதற்குள் ஸ்ரீ நியூஜண்ட் கிராண்ட் இங்கிலாந்திலிருந்து திரும்பிவிடவே முஸ்லீம் அவரைத் தன் கட்சியில் ஆஜராகும்படி ஏற்பாடு செய்தான். எங்கள் எல்லாருக்கும் முஸ்லீமுக்கு கட்டாயம்சிறை தண்டனை கிடைக்குமே தவிர, தப்ப வேறு வழி கிடையாது என்பது தெரியும். ஆகவே முஸ்லீமைத் தப்பவைப்பதற்கு

ஸ்ரீ நியூஜண்ட் கிராண்ட் என்னதான் செய்யப்போகிருர் பார்ப்போம் என்று வெகு ஆவலாகக் காத்திருந்தோம்.

கடைசியில் கேஸ் எடுக்கப்பட்டதும் நாங்கள் எல்லாரும் ஸ்ரீ நியூஜண்ட் கிராண்ட் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஸ்ரீ நியூஜண்ட் கிராண்ட் எடுத்த எடுப்பிலேயே தம் கட்சிக்காரன் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டார்.

"மை லார்ட்! என்னுடைய கட்சிக்காரன் மிகவும் அசட்டுத்தனமான குற்றத்தை செய்துவிட்டான் என்று ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் அதற்காக அவனைச் சிறைக்கு அனுப்பவேண்டுமா என்று கேட்கிறேன். என் கட்சிக்காரன் ஒரு குஷ்டரோகி. அதுவும் தொத்தும் தன்மையுள்ள குஷ்டம்" என்று சொல்லிக்கொண்டே ஸ்ரீ நியூஜண்ட்கிராண்ட் ஜட்ஜிடம் ஒரு டாக்டர் சர்டிபிகேட்டை நீட்டினுர்.

குஷ்டம் என்றதுமே ஜட்ஜ் நடுங்க ஆரம்பித்து சர்டிபிகேட்டைத் தூக்கி எறிந்து "கோர்ட்டை விட்டு உடனேயே ஓடு" என்று முஸ்லீமுக்குக் கட்டளையிட்டார். தொத்து வியாதிகளைக் கண்டால் ஜட்ஜுக்கு அதிக பயம் என்பது ஸ்ரீ நியூஜண்ட் கிராண்டுக்குத் தெரியும். இது விஷயத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

நியூஜண்ட் கிராண்ட் மேலும் "என் கட்சிக்காரன் செய்த குற்றத்திற்காக பகவானே இந்த வியாதி மூலம் தண்டித்து விட்டார். நானும் டாக்டரும் அவனிடமிருந்து நிறைய பீஸ் வாங்கி தண்டித்து விட்டேம். இதை விட இன்னும் என்ன தண்டனை வேண்டும்" என்று கேட்டார்.

நியூஜண்ட் கிராண்ட் வாதத்தை ஜட்ஜ் ஒப்புக் கொண்டதோடு முஸ்லீமை சிறைக்கு அனுப்பினுல் மற்றவர்களுக்கும் வியாதி தொத்திவிடும் என்று பயந்து அவனை விடுதலை செய்துவிட்டார்.

நியூஜண்ட் கிராண்ட் சாமர்த்தியத்தைக் குறித்து நாங்கள் எல்லாரும் வியந்தோம்.

ஜப்பானியக் கதை

தாமா

முன்னொரு காலத்தில் ஜப்பானில் ஒரு பெரிய பணக்கார வியாபாரி இருந்தான். அவனுக்கு மனம் ஒத்த மனைவி ஒருவள் இருந்தாள். இரண்டு பேருக்கும் சகல சம்பத்துக்கள் இருந்தும் வீட்டில் ஒரு குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு பெருங்குறையாக இருந்தது. புருஷனும் மனைவியும் எத்தனையோ க்ஷேத்திரங்களுக்கு போய்விட்டுத் திரும்பியதும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு தாமா அதாவது மாணிக்கம் என்று பெயரிட்டு வெகு அன்பாக வளர்த்து வந்தார்கள்.

இவளைப் போன்ற அழகான பெண்ணை பார்த்ததே இல்லை என்று எல்லாரும் சொல்லும்படி தாமா அவ்வளவு அழகில் சிறந்து விளங்கினாள். மாசு மறு இல்லாத அவள் தேகத்தில் கழுத்தில் மாத்திரம் ஒரு சிறு மச்சம் காணப்பட்டது.

அழகில் எவ்வளவு சிறந்து விளங்கினாளோ அதே மாதிரி படிப்பு, சங்கீதம் நாட்டியம் எல்லாவற்றிலும் தாமா சிறந்து விளங்கினாள். யாழ் வாசிப்பதில் மிகவும் கெட்டிக்காரி என்று பெயர் எடுத்தாள். அவளுக்கு வயது பதினாறு ஆனதும் சீக்கிரமே அவளை நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்துப்பார்க்க வேண்டுமென்று அவள் பெற்றோர்கள் விரும்பினர்.

இவர்கள் இருந்த அதே தெருவிலேயே ஹயாஷீ என்ற ஏழை வாலிபன் ஒருவன் இருந்தான். ஹயாஷீயும சங்கீதத்தில் நிபுணன். வெகு நன்கு புல்லாங்குழல் வாசிப்பான். சதுரங்கத்திலும் வல்லவன்.

ஹயாஷீ அடிக்கடி தன் வீட்டுப் பக்கமாகப் போவதை தாமா கவனித்திருக்கிறாள். இவ்வளவு அழகிய வாலிபன் பரம ஏழை என்று தன் தாதிமூலம் தெரிந்த தாமாவுக்கு

அவன் மீது இரக்கம் உண்டாயிற்று. ஆகவே அவனைத் தனக்கு சங்கீத வாத்தியாராக வைக்கும்படி தாயாரைக் கேட்க தாயாரும் அதற்கு இசைந்தாள்.

அன்றிலிருந்து ஹயாஷீ தினம் இவர்கள் வீட்டிற்கு வரத் தலைப்பட்டான். சதுரங்கப் பித்துப் பிடித்த தாமாவின் தகப்பனுருக்கும் ஹயாஷீயின் வரவினால் அனுகூலமே ஏற்பட்டது. தினம் அவனுடன் சதுரங்கம் ஆட முடிந்தது.

ஹயாஷீயும் தாமாவும் தினம் சேர்ந்து ஒருவர் யாழிலும், இன்னொருவர் குழலிலும் வாசிப்பார்கள். நாளாக நாளாக இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்க ஆரம்பித்தார்கள். தங்கள் வாத்ய கருவிகள் மூலமே தங்கள் காதலை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த விஷயம் தாமாவின் பெற்றோர்களுக்குத் தெரியாது. ஆனால் தாமாவின் தாதி அறிந்துகொண்டுவிட்டாள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த தீவிரமான காதலைப் பார்த்துவிட்டு இருவரும் அடிக்கடி ரகஸ்யமாக சந்திப்பதற்கு வேண்டிய வழிகள் ஏற்பாடு பண்ணிக் கொடுத்தாள். ஆனால் வெளிப்படையாக இது விஷயத்தை தாமாவின் தகப்பனுரிடம் சொல்ல ஹயாஷீக்குப் பயம். இவ்வளவு பெரிய பணக்காரர் தன் பெண்ணை இவ்வளவு பரம ஏழைக்கு எங்கே கொடுக்கப் போகிறார் என்று அவனுக்கு.

ஹயாஷீ இப்படி தயங்கிக் கொண்டிருக்கையில் தாமாவின் பெற்றோர்கள் அவளுக்கு ஒரு பணக்கார இடத்தில் கல்யாணம் நிச்சயம் பண்ணிவிட்டார்கள். இதைக் கேட்டதும் காதலர்களிருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர்.

தாதியின் உதவியினால் இருவரும் சந்தித்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். ஒருக்காலும் அவனைவிட்டுத் தன்னால் பிரிந்திருக்க முடியாது என்று தாமா ஹயாஷீயை கட்டிக்

கொண்டு விட்டாள். இந்த சமயத்தில் எதிர்பாராத விதமாக தாமாவின் தாயார் அவள் இருந்த இடத்திற்கு வர நேரவே இக்காட்சியைக் கண்டு விட்டாள்.

இது விஷயம் தகப்பனுருக்குத் தெரிந்தால் தன் உயிருக்கு ஆபத்துவந்தாலும் வந்துவிடும் என்று பயந்து ஹயாஷீ தன் வீட்டை விட்டு வேறு எங்கேயோ குடிபோய் விட்டான். காதலனைப் பிரிந்த ஏக்கத்தினுல் தாமா நாளுக்கு நாள் இளைத்து உருக்குலைந்தாள்.

தங்கள் அருமைப் பெண் இப்படி ஆனதைக்கண்டு பெற்றோர்கள் கவலைப்பட்டு எவ்வளவோ பெரிய பெரிய வைத்தியர்களைக் கூப்பிட்டுக் காண்பித்தார்கள். எல்லா வைத்தியர்களும் ஒரேமுகமாக அது காதல் நோய் என்றும் தாமா தன் காதலனைக் காணுவிடில் சிக்கிரமே மனமுடைந்து இறந்து விடுவாள் என்றும் பயமுறுத்தினர்.

ஹயாஷீக்குப் பெண்ணைக் கொடுக்கும்படி தாயார் தன் புருஷனை எவ்வளவோ மன்றாடிக்கேட்டாள். பெண் உயிர் பிழைக்க வேண்டுமே என்பதற்காக தகப்பனுரும் இசைந்தார். ஆனால் ஹயாஷீ இருக்குமிடம் இவர்களுக்குத் தெரியவில்லை. ஹயாஷீயைத் திரும்பவும் காண்போம் என்ற ஆவலினுல் உடம்பு குணமான தாமா அவனிருக்குமிடம் தெரியவில்லை என்றதுமே அழகிய புஷ்பம் வாடுவதைப் போல் வாடத் தொடங்கினுள். கடைசியில் ஒருநாள், அதாவது தன்னுடைய பதினேழாவது வருடப் பிறப்பன்று அதே ஏக்கத்தினுல் இறந்தாள்.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் வசந்தகாலத்தில் நடந்தது. உயிருக்குப் பயந்து ஓடின ஹயாஷீ தாமாவை மறக்கவே இல்லை. இருந்தும் அவள் வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு சௌக்கியமாகவே இருப்பாள் என்று அந்தப்பக்கமே போகாமல் இருந்துவிட்டான்.

ஒரு நாள் அவன் பக்கத்தில் உள்ள நதிக்குச் சென்று மீன் பிடித்துவிட்டுத் திரும்பும்பொழுது ஒரு அதிசயமான காட்சியைக் கண்டான். பக்கத்தில் இருந்த பூக்கொடிகளிலிருந்து தவழ்ந்து வந்ததைப்போல் தாமா அவன்

முன் காட்சியளித்தாள். இரண்டு பேரும் குசலப்பிரச்னம் செய்துகொண்ட பிறகு இரண்டு பேரும் சந்திக்க அனுகூலமாக இருந்ததற்காக தாதியை வேலையை விட்டுத் தள்ளிவிட்டார்கள் என்றும் தாதியின் உதவி கொண்டு ஹயாஷீயைத் தேடுவதற்காக தாதி வீட்டுக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் தாமா சொன்னாள்.

ஹயாஷீ கொண்ட ஆனந்தம் சொல்லி முடியாது. வீட்டுக்கு வா என்று தாமாவை அழைத்துச் சென்றான். வழியில் இருவரும் குதூகலமாகப் பேசிக்கொண்டு ஹயாஷீ வீட்டை யடைந்தார்கள். வீட்டை யடைந்ததும் கீழே குனிந்து விளக்கேற்றிவிட்டுத் திரும்பியபொழுது தாமாவை அங்கே காணோம். பக்கத்தில் எல்லாம் தேடிப் பார்த்தான். கூவிப்பார்த்தான். தாமாவைக் காணவில்லை. ஹயாஷிக்கு விஷயம் புரியவில்லை. எப்படி திடுதிப் பென்று தோன்றினளோ அதே மாதிரி தாமா மறைந்து விட்டாள்.

பொழுது விடிந்ததும் முதல் காரியமாக இது விஷயத்தை ஹயாஷீ தன் நண்பன் ஒருவனிடம் சொன்னான். தாமா இறந்து சில நாட்கள் ஆகிவிட்டனவே என்று தன் நண்பன் சொன்னபொழுது ஹயாஷீயினால் துக்கம் தாளவில்லை.

"நீ என்னை நினைத்து உருகி இறந்தாய் என்று தெரியாமல் போய்விட்டதே! தெரிந்திருந்தால் நான் ஓடி வந்திருப்பேனே. ஆவி ரூபத்தில் அல்லவா நேற்று எனக்கு நீ காட்சியளித்திருக்கிறாய்? ஓ தாமா, ஓ தாமா! நான் உன்னை எப்பொழுது பார்க்கப் போகிறேன்" என்று புலம்பினான்.

சில நாட்களில் ஹயாஷீ உலகை வெறுத்து ஒரு சந்நியாசிக் கூட்டத்தில் சேர்ந்து விட்டான். ஒவ்வொரு வருஷமும் அவள் இறந்த தினம் வந்ததும் அவளை நினைத்து மனம் உருகி ல்லாங்குழல் வாசிப்பான். இம்மாதிரி சில வருஷங்கள் சென்றன.

ஒரு நாள் ஒரு மலைப்பிரதேசத்தின் வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் இருட்டிவிட்டது. ஹயாஷீ வழி தவறி

விட்டான். இராப்பொழுதை எங்கே கழிப்பது என்று கவலைப்பட்டு நாலாபக்கமும் நோக்குகையில் தூரத்தில் ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தது. வெளிச்சத்தை நோக்கி நடந்து ஒரு குடிசையை அடைந்தான். கதவைத் தட்டியதும் ஒரு முரடன் கதவைத் திறந்தான். அன்றிரவு மாத்திரம் தனக்கு அங்கு தங்க இடம் கொடுக்கவேண்டும் என்று ஹயாஷீ கேட்டுக்கொண்டதும் முரடன் தன் கைகளைத் தட்டினான். அந்த சத்தம் கேட்டு பதினைந்து வயது பெண் ஒருத்தி உள்ளே யிருந்து வெளியே வந்தாள். ஹயாஷீக்கு உணவு கொடுக்கும்படி கட்டளை யிட்டுவிட்டு முரடன் மூலையிலிருந்த துப்பாக்கியையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு வெளியே சென்றுவிட்டான்.

முரடன் அப்பால் சென்றதும் அந்தப் பெண் கண்ணீரும் கம்பலையுமாக ஹயாஷீயின் முன்னால் வந்தாள்.

"இந்த இடத்தை விட்டு ஓடிப்போய் விடுங்கள். இவன் பெரிய கொள்ளைக்காரன். உங்களைக் கொன்றாலும் கொன்று விடுவான்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

ஹயாஷீ அவள் மீது இரக்கப்பட்டு அவள் விருத்தாந்தத்தை விசாரித்தான். அவளுக்குத் தகப்பனார் இல்லை என்றும் ஒரு மாதத்திற்கு முன்பு அந்த முரடன் அவளைத் திருடிக்கொண்டு வந்துவிட்டான் என்றும் தெரிந்தது. உடனேயே அவளை அழைத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டுத் தப்பித்துக்கொண்டு அவள் தாயார் வீட்டை அடைந்தான்.

பெண்ணைக் கண்டதும் தாயாருக்கு ஏற்பட்ட சந்தோஷம் சொல்லி முடியாது. பெண் உள்ளே போய் தன் அழுக்கடைந்த ஆடைகளைக் களைந்துவிட்டு உடம்பையும் சுத்தப்படுத்திக்கொண்டு புது உடைகள் அணிந்து வெளியே வந்தாள்.

அவளைக் கண்டதும் ஹயாஷீ ஆச்சர்யத்தினால் துள்ளிக் குதித்தான். பதினைந்து வருடங்களுக்கு முன்னர்

இறந்த தாமா எப்படி இருந்தாளோ அதே மாதிரி அவள் தோற்றமளித்தாள். இவள் கழுத்திலும் தாமாவின் கழுத்தில் காணப்பட்டது போலவே ஒரு மச்சம் காணப்பட்டது.

பெண்ணின் தாயாரைப் பார்த்து "உங்களுக்கு டோக்கியோவில் யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா? பதினைந்து வருஷங்களுக்கு முன்னர் இறந்து போன எனக்குத் தெரிந்த பெண்ணைப்போலவே இவள் இருக்கிறாளே" என்று கேட்டான்.

பெண்ணின் தாயார் ஹயாஷீயைக் கூர்ந்து கவனித்தாள். "நீ ஹயாஷீ அல்லவா" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியைக் கேட்டதும் அந்தத் தாயார் யார் என்பதும் ஹயாஷீக்கு நினைவு வந்து விட்டது. தாமாவும் தானும் தனித்துச் சந்திப்பதற்கு உதவிபுரிந்த தாதிதான் அவள்!

தாதி தன் கதையைச் சொன்னாள். ஹயாஷீ ஓடிப் போனதும் தன்னை வேலையைவிட்டு விரட்டி விட்டார்கள் என்றும் தான் உடனே கல்யாணம் பண்ணிக்கொண்டாள் என்றும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இப்பெண் பிறந்தது என்றும் சொன்னாள்.

அவள் பிறந்த தேதி மணி முதலியவற்றை ஹயாஷீ விசாரித்தான். அன்று நதிக்கரையில் தான் தாமாவின் ஆவியை சந்தித்தானே அதே சமயம்தான் அவள் பிறந்திருக்கிறாள் என்று தெரிந்தது. "நான் தாதியைத் தேடிப் போகிறேன்" என்று அந்த ஆவி சொன்ன வார்த்தைகளும் இவனுக்கு ஞாபகம் வந்தது. நிச்சயம் தாமாதான் தன் மேல் உள்ள அன்பினால் மீண்டும் இந்தப் பெண்ணாக ஜன்மம் எடுத்திருக்கிறாள் என்று தேர்ந்தான்.

ஒரு நல்ல நாளில் ஹயாஷீக்கும் இந்தப் பெண்ணுக்கும் கல்யாணம் நடந்தது. இரண்டுபேரும் குழந்தை குட்டிகளுடன் சௌக்கியமாக வாழ்க்கையை நடத்தினார்கள்.

கிருஷ்ணவேணி

புதிய சட்டப்படி!

[பெயரைப் பார்த்துவிட்டு, ஏதோ சட்ட விஷயம் என்று முகத்தைச் சுளிக்க வேண்டாம்!

புதிதாய் வந்த வீட்டு வாடகை சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் பொழுது எப்படி இருக்குமென்பதைப் பற்றி ஒரு ஹாஸ்ய நாடகந்தான். பயப்படாமல் மேலே படியுங்கள்!]

காட்சி 1.

குடியிருப்பவரின் மனைவி (முனகிக் கொண்டே) :—"உம்! இந்தக் கஷ்டம் எப்போ விடியப் போறதோ தெரியல்லே......எங்கே பார்த்தாலும் ஒழுகல்......குழாயிலேயோ தண்ணி வரதில்லே.....லைட் "ஸ்விட்ச்" சுலே கையை வெச்சா "ஷாக்" அடிக்கிறது!......உம்......

[புருஷன் வருகிருன்]

புருஷன் :—அடியே! என்னடி அங்கே?

மனைவி :—ஆமாம்! உங்களுக்கென்ன? நான்னா கஷ்டப்படறவ"........நானும் ஒருமாசமா அந்த வீட்டுக்காரனிட்டே சொல்லி, வீட்டெ ரிப்பேர் பண்ணச் சொல்லுங்கோ, சொல்லுங்கோன்னு அடிச்சுக்கறேன், ஏதானும் காதிலே போட்டுண்டாத் தானே? இந்தப் பாழுங் கொகேலெ இருந்து திண்டாடறவ நான் தானே? உங்களுக்கென்ன?

புருஷன் :—எல்லாம் காரணமாத்தான் சொல்லாதெ இருக்கேன்.

மனைவி :—அதென்ன காரணம்? அதையாவது சொல்லுங்கோ, கேக்கலாம்!

புருஷன் :—அதுதாண்டி! இப்பொ புதுசா சட்டம் வந்திருக்கே தெரியுமோன்னோ? 1940க்கப்பறம் கட்டின வீடா இருந்தா, வீட்டுக்காரரா அதிகமா வாடகை

கேக்கலாம். தவிர, ஏதாவது ரிப்பேர் பண்ணிஞலும் வாடகையை ஒசத்தலாம். தெரிஞ்சுதா?.........என்னமோ பாழுங் கொகைன்னு சொன்னியே, இந்தப் பாழுங் கொகைகூட கிடைக்காமெ எத்தனைபேர் திண்டாடரு தெரியுமா?.........

மனைவி :—அதிருக்கட்டும்!.........அப்பொ வீட்டுக்காரா நாம் வரத்துக்கு முன்னலேயே வீட்டை ரிப்பேர் செய்யாமலே வெச்சிருந்தா கூட, நாம் இப்பொ ரிப்பேர் செய்யச் சொல்லக் கூடாதுன்னு சொல்லுங்கோ!...

புருஷன் :—ஆமாண்டி! ஆமாம்! இனிமே வீடு ஒழுகறது, அப்படி இப்படின்னு இறைஞ்சு சொல்லாதே. எங்கேயாவது வீட்டுக்காரன் காதிலே பட்டு, ரிப்பேர் பண்ண வந்துடப் போருன்! அப்புறம் நாம்தான் மாஸா மாஸம், சொளையா எண்ணி வெச்சாகணும்......

மனைவி :—உம்!......நன்னுத்தானிருக்கு......நல்ல சட்டம்!

காட்சி 2.

[டக்!......டக்!......டக்......டக்......ஆணியடிக்கும் சப்தம்]

புருஷன் :—(உரத்த குரலில்) யாரது? என்ன சத்தம்?

மனைவி :—ஒண்ணுமில்லே நான்தான், நம்ப கொழந்தெ ராமுவோடெ போட்டோவை மாட்டுவோம்னு ஒரு ஆணி அடிச்சேன். அதுக்கு என்னமோ இப்படிக் கூச்சல் போடறேளே?

புருஷன் :—ஐயையோ! ஒனக்குப் புதுசா வந்திருக்கிற சட்டம் தெரியாமெ இப்படிப் பண்றே.

மனைவி :—ஆணி அடிக்கக்கூட சட்டம் வந்திருக்கா என்ன?

புருஷன் :—அதில்லேடி! நாம்ப வீட்டைக் கொஞ்சங்கூட பாழா அடிக்காமல் வெச்சுக்கணும். நீ பாட்டுக்கு சுவர் நெறைய, ஆணியை அடிச்சுப் பேத்து வெச்சியோ, அவ்வளவுதான், வீட்டைப் பாழாய் அடிப்ப

தாய், நம்பளை வீட்டுக்காரன் கிளப்பிவிடலாம், தெரிஞ்சுதா?

மனைவி :—ரொம்ப நன்னாருக்கு........இன்னும் என்ன பண்ணனும் சொல்லிடுங்கோ.

புருஷன் :—அதுதாண்டி! இனிமே கொழந்தைகள் கூட எறைஞ்சு பேசாமல் பாத்துக்கோ!... ..இல்லாட்டா, பிறத்தியாருக்குத் தொந்திரவு பண்ணினதாக நம்மைப் போகச் சொல்லிடுவான் வீட்டுக்காரன்!

மனைவி :—உம்!.........அட! ஈச்வரா! எப்படித்தான் குடித்தனம் பண்ணப் போறேனோ, தெரியவில்லை!...

காட்சி 3.

வீட்டுக்காரர் மனைவி (வீட்டுக்காரரைப் பார்த்து):—என்ன, இந்த மாஸமாவது அவாளை வீட்டைவிட்டுக் கௌப்பப் போறேளா, இல்லையா சொல்லிடுங்கோ!

வீட்டுக்காரர் :—ஒனக்கு மட்டுந்தான் அந்தக் கவலையா என்ன? நான் மட்டும் பிரயத்தனம் பண்ணுமலா இருக்கேன்? ....(பேப்பரைப் பார்த்து) அச்சா! சபாஷ்!

வீ. மனைவி :—என்னது? என்ன அப்படி பேப்பர்லே விசேஷம்?

வீட்டுக்காரர் (தனக்குள்):—குடியிருப்பவனை கௌப்ப நல்ல யுக்திதான்! பலே!

வீ. மனைவி :—என்னமோ! கேட்டா சொல்ல மாட்டேங்கறேளே? சொல்லாட்டா போங்களேன்......

[உள்ளே போகிருள்]

காட்சி 4.

குடியிருப்பவர் :—உஸ்! அப்பாடா! யாரது? ஒரு டம்ளர் தீர்த்தம் கொண்டா!

கு. மனைவி :—ஏன்னா! எங்கே போயிருந்தேள்? இத்தனை நாழியா?

கு. புருஷன் :—எங்கேயா? அதுதான் இந்த வீட்டுக்காரனைக் கண்டுபிடிச்சு வாடகையைக் கொடுக்கிறதுக்குத்தான்!

கு. மனைவி :—என்னமோன்னு பார்த்தேன்! இதுக்குத்தானா? இதுக்காக யாராவது இப்படி அலைவாளா? அவாளவாதானே வந்து வாங்கிண்டு போரா. நீங்க என்னடான்னா இதுக்காக இந்த வேகாத வெய்யல்லே அலைஞ்சுட்டு வரேள்! இப்படிப்பட்ட தர்மபுத்திரரை வைச்சுக்கறத்துக்கு அவனுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்காம்! தேவலையோன்னோ?

கு. புருஷன் :—தர்மபுத்திரராவது, மண்ணாங்கட்டியாவது? புதுசா வந்திருக்கிற ரூல் தெரியுமோல்லியோ? மாஸம் பொறந்த ஒடனே 15 தேதிக்குள்ளே "டாண்"ணு வாடகையை எண்ணி வச்சுடணும். வீட்டுக்காரா வாடகையை வாங்கிக்காமலே, மூணு மாசத்துக்கு நமக்கு டிமிக்கி கொடுத்துட்டு, நாலாம் மாஸம், "மூணுமாஸமாய் வாடகையே கொடுக்கல்லே"ன்னு நம்பளைக் காலி செய்ய "நோட்டீஸ்" கொடுத்துடலாம். நாமும் காலி செஞ்சுண்டு போக வேண்டியதுதான். தெரியுமா?

கு. மனைவி :—அட ராமா! அப்படியானா இப்போ மறுபடியும் போங்கோன்னா! சாப்பிடற வேளையிலாவது வீட்டுக்கு வராமலா இருப்பான்?

கு. புருஷன் :—சரி! அதுவும் நல்ல யோசனைதான். போய்ப் பாக்கறேன்.

காட்சி 5.

(லொட்!...லொட்!... லொட்!...கதவிடிக்கும் சப்தம்)

கு. புருஷன் :—அம்மா!...... அம்மா!...... வீட்டுக்காரர் இருக்காரா?

வீட்டுக்காரி (உள்ளே):—ஏன்னு! உங்களை யாரோ கூப்பட்டுருப்பலே இருக்கே?

வீட்டுக்காரர் (மெதுவான குரலில்):—ஐயையோ! அந்தப் பாவி குடியிருப்பவன்தான் வாடகையை எடுத்துண்டு வந்திருப்பான். நான் வீட்டிலில்லேன்னு சொல்லி விடு!......

வீட்டுக்காரி:—இதென்ன கூத்து? வாடகையைக் கொண்டு வந்தா நீங்க ஏன் இப்படிப் பயப்படறேள்? ஒரு நாளும் இல்லாத திருநாளா அவனே வந்திருக்கான். ஒவ்வொரு மாசமும் நீங்கள் வாடகைக்கு நடந்தது போதாதா?

வீட்டுக்காரர்:—எல்லாம் உனக்காகத்தான்; அதிருக் கட்டும்; அவனை முதல்லே போகச் சொல்லு. பின்னுல் சொல்றேன்.

வீட்டுக்காரி (தனக்குள்):—வேடிக்கைதான்!......இந்தப் பிராமணனுக்குப் பித்துத்தான் பிடிச்சிருக்கு. (வெளிப் படையாக) யாரது அங்கே! இங்கே வீட்டுக்காரரும் இல்லே, ஒருத்தரும் இல்லே. போய் வாரும்!

கு. புருஷன்:—அட கடவுளே!......

வீ. மனைவி (திரும்பி வந்து):—ஏன்னு! அவன் போய் விட்டான். இன்னமேயாவது வெளியிலே வரலா மோன்னே?

வீட்டுக்காரர்:—போயிட்டானு?...... அப்பாடா!...... பொழைச்சேன்!

வீட்டுக்காரி:—ஏன்? என்ன சமாசாரம்? அவனை ஏன் போகச்சொன்னேள்?

வீட்டுக்காரர்:—அதுவா? நீ, முன்னே குடியிருப்ப வனைப் போகச்சொல்லணும்னு ஒத்தைக்கால்லே நின்னியோன்னே?......

வீ. மனைவி—ஐயையோ! நானுசொன்னேன்?......இப்படி அபாண்டமா சொல்றேளே?......இது அடுக்குமா?...

இப்படியெல்லாம் சொல்லுவேள்னு தெரியாமெ..... எங்கப்பா என்னை இப்படி......பாழுங்கெணத்துலே ......(அழுகிருள்)

வீட்டுக்காரர் :—இதென்னடா கிரகசாரம்? ஐயையோ! ஒன்னைச் சொல்லலேடி! அந்தப் பிராமணன் வாடகை கொடுக்காமல் என்னைக் கழுத்தறுக்கலியா? நான் கூட, அவனை வீட்டைக்காலி செய்யச் சொல்லணும்னு சொல்லலியா?

வீ. மனைவி (முகமலர்ந்து) :—ஆமாம்! அதுக்கென்ன?

வீட்டுக்காரர் :—அதுக்குத்தான் நான் இப்போ வாடகை வாங்கிக்கலலே. தெரிஞ்சுதா?

வீ. மனைவி :—அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?

வீட்டுக்காரர் :—சம்பந்தம் இருந்துதான் சொல்றேன்.

வீ. மனைவி :—சொல்லுங்கோன்னுக்கே? என்னமோ பிரமாதம் பண்ணிக்கறேளே?

வீட்டுக்காரர் :—அதுதாண்டி! இப்போ சட்டம் வந்திருக்கு. குடியிருப்பவன் மூணுமாஸம் வாடகை கொடுக்கலேன்னு நாம் "நோட்டீஸ்" கொடுத்து அவாளைக் கௌப்பி விடலாம்.

வீ. மனைவி :—அதுக்காக?

வீட்டுக்காரர் :—அதுக்காகத்தான் நான் அவனைக்கண்டு ஒளியறேன், வீட்டுவாடகையை வாங்கிக்காமல். தெரிஞ்சுதா?

வீ. மனைவி (சிரித்து) :—அப்படியா சமாசாரம்?...... என்ன இருந்தாலும் ஓங்க மூளையே அலாதிதான்!

காட்சி 6.

குடியிருப்பவர் :—உம்......அப்பாடா!......காலெல்லாம் வலிக்கிறது நடந்து நடந்து......காரியமோ முடிஞ்சபாடில்லே......அலைஞ்சதுதான் மிச்சம்.

கு. மனைவி :—ஏன்னு! போன சமாசாரம் என்ன ஆச்சு? வீட்டுக்காரன் இருந்தானு?......

குடியிருப்பவர் :—அவன் ஏன் இருக்கப்போருன்?...... மறுபடியும் ஒன் பேச்சைக்கேட்டு போய்ட்டு வந்தது தான் மிச்சம்......ஹூம்......என்ன செய்யப்போறேனே தெரியல்லே......(சற்றுப்பொறுத்துத் தனக்குள்)......அப்படிச் செய்தாலென்ன?......அதுதான் சரி! அடியே! இதோ கொஞ்சம் வெளிலே போய்ட்டு வரேன். கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ.

(குடியிருப்பவர் சற்றுக் கழித்துத் திரும்பிவந்து......தானன தானன தானு என்று பாடுகிருர்.)

கு. மனைவி :—என்ன சமாசாரம்? ரொம்ப சந்தோஷமாய் இருக்காப்பலே இருக்கே?......வாடகைப் பணம் கொடுத்துட்டேளா?......அவன் ஆப்புட்டானு?......

குடியிருப்பவர் :—அவன் ஆப்படறதேது? அடியே! ஒரு காரியம்னு செஞ்சேன். எப்படிப்பட்ட காரியம் தெரியுமா?.........எனக்கு சந்தோஷமாயிராமல் பின்னே எப்படி இருக்கும்!

கு. மனைவி :—சொல்லுங்கோன்னுக்கே...என்னமோ......

குடியிருப்பவர் :—வீட்டுக்காரனைத் தேடித் தேடி அலேஞ்சேனு? சடார்னு ஒருயோசனைதோணித்து பார்! விறுப்விறுன்னு போஸ்டாபீஸுக்குப் போய் பணத்தை மணியார்டர் பண்ணிப்பிட்டு வந்துட்டேன். மணியார்டரை வாங்கிண்டாலும் நல்லது; வாங்கிக்காட்டாலும் நம்ம பேர்லே குத்தமில்லாமெ சாக்ஷிக்கு ரசீது இருக்கவே இருக்கு. எப்படி என் யோசனை?......

கு. மனைவி:—ஒங்க யோசனைக்குச் சொல்லவும் வேணுமா?

காட்சி 7.

[வீட்டுக்காரர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர், வாசலில் தபால்காரன் " ஸார் போஸ்ட் " என்று கத்துகிருன்.]

வீட்டுக்காரர் :—அடியே! என்ன தபால் வந்திருக்கிறதென்று பார்!

வீ. மனைவி:—ஏதோ "மணியார்டர்" வந்திருப்பதாய் சொல்லுகிறான்.

வீட்டுக்காரர் :—மணியார்டரா? இதோ வந்துவிட்டேன்!

தபால்காரன் :—இங்கே கையெழுத்து போடுங்க சாமி.

வீட்டுக்காரர் (வாங்கிப் பார்த்து) :—அடபாவி! குடியைக் கெடுத்தானே?

வீ. மனைவி :—என்ன அது? என்ன சமாசாரம்?

வீட்டுக்காரர் :—ஹூம்!.........குடியிருப்பவன் நம்மையே மடக்கி விட்டான். மணியார்டரா அனுப்பித் தொலைச்சிருக்கான்.

வீ. மனைவி :—நீங்க ஏன் வாங்கிண்டேள்? பேசாத திருப்பி யனுப்பிடறதுதானே?

வீட்டுக்காரர் :—வாங்கிக்காட்டாலும் அவன் தன் மேலே குத்தமில்லேன்னு ரசீதைக் காண்பிப்பான். இனிமே என்ன செய்யறது?

வீ. மனைவி :—எனக்கு ஒரு யோசனை தோண்றது. "எனக்கு குடியிருக்க வேணுமின்னு" எல்லாரையும் போல நீங்களும் "நோட்டீஸ்" கொடுக்கலாமே?

வீட்டுக்காரர் :—உம்!.. ...அடி பைத்தியமே! வீட்டுக்காரனுக்கு வேறே சொந்த வீடு இல்லாட்டாதான் அப்படி "நோட்டீஸ்" கொடுக்க முடியும்!

வீ. மனைவி :—அட பாபமே! நல்ல சட்டம்!...நல்லகூத்து!

ஒரு சீனக்கதை

டாக்டர் வெல்லிங்டன் கூ லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் கீழ்ககண்ட அழகிய கதை ஒன்றைச் சொன்னாராம்.

சீனாவில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு தடிக்கழி இருக்குமாம். குடும்பத்தில் உள்ள யாரையாவது தண்டிக்க வேண்டுமானால் குடும்பத் தலைவர் அந்தக் கழியைக் கொண்டு அவர்களை அடிப்பார். ஒரு சமயம் ஒரு நூறு வயதுத் தகப்பனார் தம் எழுபத்தைந்து வயது பிள்ளையின் மீது அக்கழியை பிரயோகித்து விட்டார். அடி பட்டதும் பிள்ளை அழத்தொடங்கினார். இதைக் கண்டதும் தகப்பனாருக்கு ஆச்சர்யமாகப் போய்விட்டது. இதுவரையில் தகப்பனார் எத்தனையோ தடவை பிள்ளையை அடித்திருக்கிறார். பிள்ளை அழுதது கிடையாது. ஆகவே என்ன காரணம் என்று விசாரித்தார். அதற்கு பிள்ளை "நீங்கள் அடித்ததற்காக அழவில்லை, ஆனால் அடி வழக்கம் போல் வலுவாக விழவில்லை. உங்கள் வலு குறைந்து விட்டதே என்று வருத்தப்பட்டு அழுதேன்" என்று சொன்னாராம்

—ஹரிஜன்.

வீடு திரும்பிய வீரன்

தேச பக்தி உண்டாவதற்காக உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் எழுதுவதில் ரஷ்ய எழுத்தாளர்கள் கைதேர்ந்தவர்கள். சமீபத்தில் நடந்து முடிந்த மகா கோரமான போரில் தந்திரத்திலும் பலத்திலும் வல்லவர்களான ஜெர்மானியரை ரஷ்யர்கள் முறியடித்ததற்கு முக்ய காரணம் அவர்கள் ஆயுத பலத்தைவிட பேனு பலம்தான் என்று சொல்ல வேண்டும். ஒன்றுமில்லாத சாதாரண குடியானவர்களையெல்லாம் தேச வீரர்களாக்கி நாட்டுக்காகத் தியாகம் பண்ணச்செய்தது ரஷ்ய எழுத்தாளர்கள் தான். அப்படிப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவராகிய கான்ஸ்டைன் ட்ரெனியாவ் எழுதிய கதை ஒன்றைத்தான் தமிழர்கள் படித்து மகிழ்வதற்காக இங்கே கொடுத்திருக்கிறேன்.

அந்தப் பசுமையான வயல்கள் சாலையின் இருபக்கங்களிலும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வந்துகொண்டே இருந்தன. டாங்கி வீரன் அலக்ஸி வயல்களைப் பார்த்துக்கொண்டே வந்தான். கடைசியில் அவன் கிராமம் தென்பட்டதும் சந்தோஷத்தினுல் ஸ்தம்பித்து அப்படியே ஒரு கணம் நின்றான்.

வழியில் பார்த்த எத்தனையோ கிராமங்களைப் போலவே அந்தக் கிராமும் நாஸிகளின் கொடுமைகளுக்கு உட்பட்டு அழிந்து கிடந்தது. அங்கங்கே வீடுகளை புதுப்பித்திருந்த சின்னங்களும் காணப்பட்டன. தன் வீடு எங்கே என்று அலக்ஸி வெகு ஆவலாய்ப் பார்த்தான். ஆ! அதோ இருக்கிறது! அலக்ஸியின் கண்களில் கண்ணீர் மல்கியது. தன் கைச் சட்டையினுல் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொண்டான். எதிரி தன் முகத்தைக் கோரமாக்கியது போலவே கிராமத்தையும் அழித்து கோரமாக்கி விட்டிருந்

தான். கிராமத்தைப் புதுப்பிக்க முடியும். ஆனால் அவன் முகம் அப்படியே இருக்கவேண்டியது தான்.

அலக்ஸி ஆஸ்பத்திரியிலிருந்து தான் நேரே வந்து கொண்டிருந்தான். நதியைத் தாண்டி ஜெர்மானியப் படை மீது டாங்கியைச் செலுத்தியதுமே திடீரென்று பெரிய ஜ்வாலை தன்னைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டதுதான் அவனுக்குத் தெரியும். தான் ஆஸ்பத்திரிக்கு வந்ததோ, அடையாளம் தெரியாதபடி பற்றி எரிந்துபோன தன் முகத்தை புதுச்சதை கொண்டு டாக்டர்கள் புதுப்பித்ததோ, அவனுடைய கண்களில் ஒன்று எரிந்துபோய் அதற்குப் பதில் கண்ணாடிக் கண் வைக்கப்பட்டதோ, அவன் தொண்டை கெட்டுப்போய் அதற்குப் பதில் இரும்புத்தொண்டை பொருத்தப்பட்டதோ அவனுக்குத் தெரியாது.

இதே மாதிரி இன்னொரு வீரனுக்கு ஆப்பரேஷன் நடந்த பிறகுதான் அலக்ஸி தன் நிலையை உணர்ந்தான். அன்று காலை அவன் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்ட பொழுது அவனுக்கே தன்னை அடையாளம் புரியவில்லை.

அலக்ஸி மெள்ள நடந்து தன் வீட்டை அடைந்தான். அவனுக்கு அறிமுகமான யாரையும் வழியில் காணவில்லை. வழியில் இவனைப் பார்த்தவர்கள் எல்லாம் மிகவும் பச்சாதாபத்துடன் இவனைப் பார்த்தார்கள். அவன் முகம் அவ்வளவு கோரமாக மாறியிருந்தது. வழியில் அவன் மனைவி நாஸ்டியாவைப்பற்றி சிலர் பெருமையாகப் பேசிக் கொள்வதும் காதில் விழுந்தது. அவள் இப்பொழுது கூட்டுப் பண்ணைத் தலைவியாக ஊழியம் புரிகிறாள் என்றும் தெரிந்தது.

அலக்ஸி தன் வீட்டை அடைந்து கதவைத் தட்டினான். உள்ளே இருந்து அவனுடைய தாயார் வெளியே வந்தாள். ஆனால் அவள் அவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

"யாரைத் தேடுகிறீர்கள்? நாஸ்டியாவையா?" என்று கேட்டாள் கிழவி.

"உங்கள் இருவரையும் தான். நான் உங்கள் பிள்ளை அலக்ஸியிடமிருந்து ஒரு செய்தி கொண்டு வந்திருக்கிறேன்."

அலக்ஸி என்றதுமே கிழவியின் கண்கள் சந்தோஷத்தினால் ஜ்வலித்தன. அடுத்த கணமே அவள் கண்களில் கண்ணீர் காணப்பட்டது.

"என் அலக்ஸி சௌக்கியமாய் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்? ஏன் இன்னும் வரவில்லை?" என்று கேட்டாள்.

"கவலைப்படாதீர்கள். அலக்ஸி சௌக்கியமாகத்தான் இருக்கிறான். நாங்கள் இருவரும் சேர்ந்தே போர் புரிந்தோம். அவனுக்குச் சிறு காயம் பட்டது. சீக்கிரம் குணமாகி வந்து விடுவான். கவலைப்படாதீர்கள்."

"என் மாட்டுப் பெண் நாஸ்டியாவுக்கு ஓய்ச்சல் ஒழிவில்லாமல அவள் கூட்டுப் பண்ணைவேலைதான் சரியாக இருக்கிறது. என்னுடைய பேரனும் அவள் கூடவே இருக்கிறான். என் பேத்தி மாத்திரம் உள்ளே இருக்கிறாள். வாருங்கள் கொஞ்சம் இருந்துவிட்டுப் போகலாம்" என்று கிழவி அலக்ஸியை உள்ளே அழைத்துக்கொண்டு போனாள்.

உள்ளே அவனுடைய சின்னஞ்சிறு பெண் விளையாடிக்கொண்டிருந்தாள். அலக்ஸி தன்னை மறந்து குழந்தையை வாரி அணைத்துக் கட்டிக்கொள்வதற்காகக் கைகளை நீட்டினான். அவனுடைய கோரமான முகத்தைக்கண்டு குழந்தை பயந்து ஒதுங்கி நின்றாள். குழந்தைக்கென்று தான் கொண்டுவந்திருந்த பொம்மைகளை அலக்ஸி அவள் முன்னால் வைத்தான். ஆனால் குழந்தை அவற்றை எடுத்துக் கொள்ளவில்லை.

இதைப்பார்த்த கிழவி "இந்த மாமா அப்பா கிட்டேந்து வந்திருக்கிறார் அம்மா! எப்பப் பார்த்தாலும், அப்பா அப்பான்னு சொல்லிக்கொண்டிருப்பாயே? ஏன் அப்பா அனுப்பின பொம்மைகளை வாங்கிக்கொள்ள மாட்டேன் என்

கிருய்'' என்று சொல்லிவிட்டு அலக்ஸியைப் பார்த்து "இவ ளுக்கு எப்பொழுதி பார்த்தாலும் அப்பா ஞாபகம்தான். அதோ பாருங்கள், அப்பா போட்டோவுக்கு பூமாலே போட்டு வைத்திருக்கிருள்'' என்று அந்த அறையில் மாட் டப்பட்டிருந்த அலக்ஸியின் போட்டோவை காண்பித் தாள்.

"என் பிள்ளை அந்த போட்டோவில் உள்ளபடியே இருக்கிருனு'' என்றும் கேட்டாள்.

அதற்கு அலக்ஸி பதில் சொல்லவில்லை. "தங்கள் மாட்டுப்பெண் நாஸ்டியாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று அலக்ஸி வெளியில் போனுன்.

2

தன் மனேவியும் கூட்டுப்பண்ணைத் தலேவியுமான நாஸ்டியாவைக் கண்டு பிடிப்பதற்குள் அலக்ஸிக்கு போதும் போதும் என்ருகிவிட்டது. கூட்டுப்பண்ணையில் அவள் அத்தனே மும்மரமாக ஈடுபட்டிருந்தாள். கடைசி யில் அவளை ஓரிடத்தில் கண்டு பிடித்தான். தன் பழைய நண்பன் பேவலுடன் அவள் சிரித்துப் பேசிக்கொண் டிருந்தாள். இவனைக் கண்டதும் அவளுடைய சிரிப்பு நின்று முகத்தில் பரிதாபக்குறி தோன்றியது.

"என்ன'' என்று கேட்டாள் நாஸ்டியா.

"நான் தங்கள் புருஷனிடமிருந்து கடிதம் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று தான் ரயில்வே ஸ்டேஷனில் இதற்காகவே தயாராய் எழுதி வைத்திருந்த கடிதத்தைக் கொடுத்தான்.

நாஸ்டியா கடிதத்தை வாங்கிப் படித்தாள். "இதென்ன ஆச்சர்யமாயிருக்கிறதே' போன கடிதத்தில் லீவ் வாங்கிக் கொண்டு வீடு திரும்புவதாக எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தில் திரும்பவும் போர் முனேக்குப் போவதாக எழுதி யிருக்கிருரே? நீங்கள் யார்? அவரை எங்கே பார்த் தீர்கள்?'' என்று கேட்டாள்.

"நான் அவர்கூட பக்கத்து டாங்கியில் இருந்து போர் புரிந்தேன். அவருக்குச் சற்று காயம் பட்டது."

"உங்களுக்கு?"

"என் முகம் சற்று எரிந்து போய்விட்டது. சரி, நான் வரலாமா" என்று அலக்ஸி கேட்டான்.

"இல்லை, நான் உங்களிடம் பேசவேண்டிய விஷயம் எவ்வளவோ இருக்கிறது. நீங்கள் கட்டாயம் ஒரு நாள் எங்களுடன் தங்கிவிட்டுத்தான் போகவேண்டும்" என்று நாஸ்டியா மிகவும் கேட்டுக்கொண்டாள்.

இரண்டு பேரும் பேசிக்கொண்டே கூட்டுப்பண்ணை காரியாலயத்தை யடைந்தார்கள். அங்கே போரில் வீரா வேசமாய் போர் புரிந்து வெற்றிமாலை சூடினன் என்பதற்காக அலக்ஸியின் போட்டோ மாட்டப்பட்டு அதற்கு பூமாலைகள் போடப்பட்டிருந்தன. அலக்ஸியை எல்லாரும் சூழ்ந்து கொண்டார்கள். அங்கே பழைய நண்பன் பேவலும் இருந்தான்.

"எங்கள் கிராமத்து அலக்ஸியுடன் தாங்கள் கூட இருந்ததாகச் சொல்லுகிறீர்களே, அந்தப் போர் விபரங்களைச் சற்று சொல்லுங்கள்" என்று கேட்டார்கள்.

அலக்ஸி தனக்குத் தெரிந்ததைச் சொன்னன். ஆனல் அது அவர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. அந்தப் போரைப் பற்றி இவனுக்கு மேல் அவர்கள் தெரிந்து வைத் திருந்தார்கள். அந்தப் போரில் அலக்ஸி காட்டிய சூரத் தனத்தை பேவல் பிரமாதமாக வர்ணித்து "அப்படியாக்கும் நடந்தது" என்று பெருமையுடன் தன் போர் வர்ணனையை முடித்தான்.

தன்னைப்பற்றி பேவல் பெருமை கொண்டது அலக்ஸிக்கு சந்தோஷமாகவே இருந்தது. ஒரு சமயம் அவனும் பேவலும் நாஸ்டியாவைச் சேர்ந்து காதலித்தார்கள். ஆனல் நாஸ்டியா அலக்ஸியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதும் பேவல் வேறு கல்யாணமும் பண்ணிக் கொள்ளவில்லை, அலக்ஸியின் மீது கோபமும் காட்டவில்லை.

அதற்கு மாருக இவர்கள் இருவருடைய சிநேகமும் அதிகரித்தே வந்தது.

அலக்ஸியிடம் பேவல் சற்றுக் கடுமையாக பேசியது நாஸ்டியாவுக்குப் பிடிக்கவில்லை. "அடக்கத்தினுல் இவர் போரை பிரமாதமாக வர்ணிக்காமல் இருந்திருக்கலாம். அந்தப் போரில் இவரும் சிரமப்பட்டிருக்கிருர் என்பது இவர் முகத்திலிருந்தே தெரிகிறதே" என்ருள்.

இதற்குள் அநேக கூட்டுப்பண்ணைக் குடியானவர்கள் நாஸ்டியாவை சூழ்ந்து கொள்ளவே அலக்ஸி அங்கிருந்து நழுவினுன்.

3

'நம்மை யாரும் அடையாளம் புரிந்துகொள்ளவில்லை. நாம் யாரென்று தெரிவித்தால் அவர்களுக்கு மனக்கஷ்டம் தான் ஏற்படும். இன்னும் இத்தனை விகார முகத்தையுடைய நம்முடன் நம் மனைவி வாழச்சம்மதிக்கிருளோ என்னவோ? ஆகவே ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் இந்த ஊரை விட்டுப் போய்விடுவதுதான் நல்லது" என்று சிந்தித்தவாறே அலக்ஸி தெருவழியாக நடந்துகொண்டிருந்தான்.

வழியில் ஒரு ஆறுவயதுப் பையன் இவனைப் பார்த்து "எங்கப்பாவிடம் இருந்து வந்த போர்வீரன் நீங்கள் தானு?" என்று கேட்டான்.

"ஆ, நம் மகன் ஸ்டோயோபா அல்லவா" என்று அலக்ஸியின் மனம் துணுக்குற்றது.

"நான் தான் என்று எப்படித் தெரிந்துகொண்டாய்?" என்று அலக்ஸி கேட்டான்.

"விகாரமான முகத்தையுடைய ஒரு ஆள் என்று என் பாட்டி சொன்னுள்."

"நான் விகாரமாய் இருக்கிறேனு?"

"இல்லை. இந்த நாஸிகள்தான் விகாரமானவர்கள். ஆமாம், நீங்கள் எங்கள் அப்பாவைப் பார்த்தீர்களா? அவர் வாங்கின மெடல்களைப் பார்த்தீர்களா?"

"ஊம், பார்த்தேன்."

"நீங்கள் ஒன்றும் மெடல் வாங்கவில்லையா? ஆமாம், எங்கள் அப்பா எப்பொழுது வருவார்?"

"உன் அப்பாவை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"ஏன் ஞாபகம் இல்லை? நன்றாக ஞாபகம இருக்கிறது. போருக்குப் புறப்படும்பொழுது ரயில்வே ஸ்டேஷனில் அவர் என்னை இரு கைகளாலும் தூக்கி ஆட்டினார். நான் கூட அழுதேன். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது" என்றான் பையன்.

பையனுடன் பேசிக்கொண்டே அலக்ஸி வீட்டையடைந்தான். உடனே மூலையில் இருந்த மண்வெட்டியை எடுத்து தோட்டத்தில் கொத்த ஆரமபித்தான். அதை தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அவன் தாயார் பக்கத்தில் வந்தாள்.

"பின்னால் இருந்து உன்னைப் பார்க்கும்பொழுது என் பிள்ளையாட்டமே தோன்றியது ஆமாம் உனக்கு மனைவி குழந்தைகள் இருக்கிறார்களா?"

"இருக்கிறார்கள். எனக்கொரு தாயாரும் இருக்கிறாள்."

"ஐயோ பாவம், உன்னைப்பார்க்க உன தாயார் வெகு ஆவலாக இருப்பாள். சரி சாப்பிட வா, அப்பா."

"இதோ என் ஞாபகத்திற்காக இந்த ஆப்பிள் செடியை இங்கே நட்டுவிட்டு வருகிறேன்."

4

சாயந்திரமானதும் நாஸ்டியா பேவலுடன் வீடு திரும்பினாள். பேவல் அவளுடன் கொஞ்சநேரம் பேசி முடித்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டான்.

அவன் போனதும் நாஸ்டியா தன் புருஷனைப் பற்றி அலக்ஸியிடம் கேட்க ஆரம்பித்தாள்.

"நீங்கள் ஏன் உங்கள் புருஷனுக்கு அதிகமாகக் கடிதங்கள் எழுதுவதில்லை" என்று கேட்டான் அலக்ஸி.

"நீங்கள்தான் பார்க்கிறீர்களே. பொழுது முடிந்து பொழுது அஸ்தமிக்கும் வரை இந்தக் கூட்டுப்பண்ணை வேலைதான் சரியாய் இருக்கிறது. கடிதம் எழுத ஒழிவு கிடைத்தால் தானே?" என்றாள் நாஸ்டியா.

"சரி எனக்கு நாழியாகிறது. எனக்குப் போக விடை கொடுக்க வேண்டும்" என்றான் அலக்ஸி.

"இவ்வளவு இருட்டாகி விட்டதே? இனி எங்கே போவது? ராத்திரி இங்கே தங்கிவிட்டு நாளைக் காலை போகலாம்" என்று நாஸ்டியா பிடிவாதம் பிடிக்கவே அலக்ஸி அதற்கு இணங்கினான்.

அந்த அறையில் ஒரு மரத் தடுக்கிற்கு பின்னால் இவனுக்கு படுக்கை போடப்பட்டது. அந்தத் தடுக்கிற்கு மறுபுறம் நாஸ்டியாவின் படுக்கை இருந்தது.

அந்த இரவு முழுவதும் அலக்ஸி தூங்கவே யில்லை. என்னென்னவோ எண்ணங்கள் வந்து அலைமோதின. அதே மாதிரி நாஸ்டியாவும் அன்று தூங்கவில்லை.

பொழுது விடிந்ததும், அலக்ஸியும் நாஸ்டியாவும் சேர்ந்து உணவு அருந்தினார்கள். அலக்ஸி தன் மூட்டையைக் கட்டிக்கொண்டு புறப்படுவதற்குத் தயாராக ஆனான். இதற்குள் ஸ்டோயோபா விழித்துக்கொண்டு விட்டான்.

"என்ன ஊருக்குப் போகப் போகிறீர்களா?" என்று வருத்தத்துடன் கேட்டான்.

"என்ன, இங்கேயே இருக்கப்போகிறார் என்று நினைத்தாயா" என்று கேட்டாள் நாஸ்டியா.

தன் தாயாரிடமும், மனைவியிடமும் அலக்ஸி விடை பெற்றுக் கொண்டான். தூங்கிக்கொண்டிருந்த தன்

பெண்ணுக்கு ஒரு முத்தம் கொடுத்தான். பிறகு ஸ்டோயோபாவை இரு கைகளாலும் தூக்கி முன்பு ரயில்வே ஸ்டேஷனில் ஆட்டியதுபோல் ஒரு ஆட்டம் ஆட்டினான்.

இதைப் பார்த்ததும் "ஐயோ அலக்ஸி? நீங்கள் தானா? இதுவரை தெரியாமல் போய்விட்டதே" என்று நாஸ்டியா அவனைக் கட்டிக்கொண்டு கதறினாள்.

இதைக்கேட்டு உள்ளே இருந்த அவன் தாயார் ஓடி வந்தாள். "ஐயோ என் மகனே நீயா? நான் அப்பொழுதே சந்தேகப்பட்டேன்" என்று அவளும் அவனைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

"இப்படி எங்களை விட்டுவிட்டுப்போவதற்கு யத்தனப்பட்டீர்களே! நல்ல வேளை, நீங்கள் நம் பையனை இரு கைகளாலும் தூக்கி ஆட்டியதிலிருந்து நான் கண்டு கொண்டேன்" என்று நாஸ்டியா அவனைத் திரும்பவும் கட்டிக்கொண்டு அழுதாள்.

டன்னலில் நடந்தது

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ருமேனியா வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு ரயில் வண்டியில் ஒரு ஜெர்மானியன், ஒரு ருமேனியன், ஒரு கிழவி, ஒரு குமரி ஆக நால்வர் இருந்தனர். ரயில் வண்டி ஒரு டன்னலில் நுழைந்ததும் கும்மிருட்டாகி விட்டது. அப்பொழுது யாரோ யாரையோ முத்தமிடும் சப்தமும் அதற்கு பிறகு யாரோ யாரையோ கன்னத்தில் அறைந்த சப்தமும் கேட்டது. டன்னலை விட்டு வண்டி வெளிச்சத்திற்கு வந்தது ஜெர்மானியனின் கன்னம் சிவந்து காணப்பட்டது. வண்டியில் இருந்த நால்வரும், பின்வருமாறு தங்களுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

கிழவி:—இந்தக்குமரி மிகவும் நல்ல பெண்போல் இருக்கிறது. அது தான் தன்னை முத்தமிட்ட ஜெர்மானியனை கன்னத்தில் அறைந்து விட்டாள்,

குமரி:—எதற்காக அந்த ஜெர்மானியன் போயும் போயும் அந்தக் கிழவியை முத்தமிட்டான் என்று தெரிய வில்லையே?

ஜெர்மானியன்:—இந்த ருமேனியன் பலே சாமர்த்திய சாலிதான். அந்தக் குமரியை இவன் முத்தமிட்டுவிட்டு எனக்கு அறை வாங்கிக் கொடுத்து விட்டானே!

ருமேனியன்:—ஏது, நாம் பண்ணின தந்திரத்தில் இந்த மூன்று பேரும் ஏமாந்து விட்டார்கள் போல் இருக்கிறதே. நான் மாட்டில் என் கையை முத்தமிட்டுவிட்டு ஜெர்மானியனை அறையப்போக இவர்கள் மூவரும் என்னென்னவோ நினைக்க ஆரம்பித்துவிட்டார்களே!

ஸ்திரீகளுக்கு மட்டும்

புருஷன் சந்தோஷமாக இருக்கிறானா இல்லையா என்பதைப் பற்றி மனைவி கவலை கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்னும் நிலைக்கு நம் நாட்டில் இன்னும் நாகரீகம் பரவவில்லை. ஆகவே இச்சிறு கட்டுரையில் புருஷனை சந்தோஷமாக வைத்துக்கொள்வது எப்படி என்பதைப்பற்றி சில யோசனைகள் கூறலாம் என்று பார்க்கிறேன்.

காலையில் சுமுகமாக காரியாலயம் செல்லும் புருஷன் மாலையில் வீடு திரும்பியதும் கடுகடு, சிடுசிடு வென்று விழுவது அநேக ஸ்திரீகளின் அனுபவமாக இருக்கலாம். புருஷன் வேட்டைநாய் போல விழவே மனைவி பாம்பு போல் சீறுகிறாள். அவ்வளவுதான். அன்று இரவு முழுவதும் ஒருவரோடு ஒருவர் பேசமாட்டார்கள். போயும் போயும் இந்தப் பெண்ணை நம் கழுத்தில் கட்டினார்களே என்று புருஷன் அலுத்துக்கொள்வான். இங்கே நம்மைக் கொண்டு வந்து தள்ளினார்களே என்று மனைவி அலுத்துக் கொள்ளுவாள்.

அநேக குடும்பங்களில் மாலை வீடு திரும்பியதும் புருஷனும் மனைவியும் சண்டை போட்டுக்கொள்வது சகஜமாகி புருஷன் மனைவி என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்று எண்ணத் தொடங்கி விட்டார்கள்.

இது மிகவும் தவறான அபிப்பிராயம். வாழ்க்கையை குதூகலமாக வைத்துக்கொள்வது பெண்களாகிய நம் கையில்தான் இருக்கிறது. இங்கே நான் கூறியுள்ள ஒன்றிரண்டு யோசனைகளைப் பின்பற்றினால் உங்கள் வாழ்க்கை எவ்வளவோ குதூகலமாக மாறும்.

வெளியில் டிராமாவிற்கோ, சினிமாவிற்கோ செல்ல வேண்டுமானால் நாம் என்ன செய்கிறோம்? உடனேயே நம்மை அழகுபடுத்திக்கொள்ள ஆரம்பிக்கிறோம் அல்லவா? அதைப்போலவே தினம் புருஷன் காரியாலயத்தி

விருந்து வரும் ஒவ்வொரு சமயமும் நாம் டிராமாவிற்கோ சினிமாவிற்கோ போவதாக நினைத்துக்கொண்டு நம்மை அழகு படுத்திக்கொள்ள வேண்டும்.

அழுக்குப் புடவையை களைந்துவிட்டு நல்ல புடவையைக் கட்டிக்கொள்ளவேண்டும். தலையையும் அழகாக வாரிக்கட்டிக்கொண்டு சிரித்தமுகத்துடன் காட்சியளிக்கவேண்டும்.

புருஷனுக்கு காரியாலயத்தில் எவ்வளவோ தொல்லைகள், எவ்வளவோ கஷ்டங்கள். இத்தனை கஷ்டங்களையும் மறப்பதற்காகத்தான் அவன் வீடு வருகிறான். ஆகவே வீட்டில் அவன் நுழைந்ததும் வீடும் அதில் உள்ளவர்களும் அவன் மனதிற்கு குஷி ஏற்படும் வகையில் இருந்தால்தான் அவனுக்குத் திருப்தியாக இருக்கும்.

புருஷர்கள் நாள் முழுவதும் மனைவியை நல்ல புடவை கட்டிக்கொண்டிருக்கும்படி கேட்பதில்லை. அவன் வந்த ஒரு பத்து நிமிஷங்களுக்காவது மனைவி நல்ல புடவையுடன் காட்சி யளித்தால் அவன மனதிற்கு எவ்வளவோ திருப்தி ஏற்படுகிறது. அந்த பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவன் மனைவி என்ன அழுக்கைக் கட்டிக்கொண்டாலும் அவன் கவனிக்கப் போவதில்லை.

அடுத்தபடியாக புருஷர்கள் குழந்தைகள் மீது எவ்வளவோ அன்புடையவர்களாக இருக்கலாம். இருந்தாலும் அநேக புருஷர்கள் எத்தனையோ தொல்லைகள், கவலைகள் காரணமாக சிடுசிடு, கடுகடு என்று வீடு திரும்புவதால் வந்ததும் வராததுமாக குழந்தைகள் மீது தங்கள் அன்பைக் காட்டுவார்கள் என்று நீங்கள் நினைப்பது பிசகு. கூடியவரையில் குழந்தைகளை வேறு எங்காவது ஓர் அறையில் வைத்து சத்தம் போடாதபடி பார்த்துக் கொண்டீர்களானால் அவனே ஐந்து நிமிஷத்தில் குழந்தைகள் எங்கே என்று கேட்பான். அதற்குப் பிறகு குழந்தைகள் என்ன இரைச்சல் போட்டாலும் அவனுக்கு தலை வேதனையாகவே படாது.

அநேக ஸ்திரீகள் புருஷன் வீட்டிற்கு வந்ததும் அவனை எதிர்கொண்டு அழைப்பதில்லை. யாராவது புது மனிதர்கள் வந்தால் நாம் ஓடோடியும் வந்து "வாங்கோ வாங்கோ" என்று அழைப்பதில்லையா? அப்படியே புருஷனையும் தினம் சாயந்திரம் அழைத்தால் என்ன? தன் வரவுக்காக மனைவி காத்துக்கொண்டிருக்கிறாள் என்ற எண்ணம் புருஷர்களுக்கு நாம் ஏற்படும்படி செய்ய வேண்டும். இதனால் அவர்கள் அடையும் ஆனந்தம் சொல்லி முடியாது. இது தெரியாமல் அநேக ஸ்திரீகள் புருஷன் வந்ததும வராததுமாக சமையற்கட்டில் போய் ஒளிந்துகொள்வார்கள். ஒரு அரை மணி நேரம் முகத்தை வெளியிலேயே காட்டமாட்டார்கள். அவனுக்குக்காப்பியும் டிபனும், அப்படி விழுந்து விழுந்து பண்ணுகிறார்களாம்!



"பிரிட்டனால் செய்ய முடியும்" என்ற கண் காட்சியில் வைக்கப்பட்டிருந்த சில பீங்கான் தட்டுகள்.

அதற்குப் பதில் ஒரு இரண்டு நிமிஷநேரம் நீங்கள் அவனுடன் அன்போடு பேசிக்கொண்டிருந்துவிட்டு பிறகு சமையலறைக்குள் நுழைந்தீர்களானால் காப்பி போடுவதற்கு எவ்வளவு மணிநேரமானாலும் அவன் கவலைப்படமாட்டான். கூடமாட உங்களுக்கு ஒத்தாசை செய்வதற்கு அவன் சமையலறைக்குள் நுழைந்தாலும் நீங்கள் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

தங்கள் வீட்டுக் கஷ்டங்களையெல்லாம் புருஷனிடம் வந்ததும் வராததுமாக சொல்வதென்று அநேக ஸ்திரீகள் வைத்திருக்கிறார்கள். வீட்டுக்காரன் வாடகைக்காக வந்து கூச்சல் போட்டுவிட்டுப் போயிருக்கலாம் அல்லது பால்காரன் பணத்திற்காகக் கூச்சல் போட்டிருக்கலாம். இதையெல்லாம் சாவதானமாக, புருஷன் காப்பியோ, டிபனோ சாப்பிட்டதற்கு பிறகு சொல்வதென்று வைத்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவனுக்கு வீட்டைக் கண்டாலே வெறுப்பு ஏற்பட்டுவிடும். பிறகு அவனுக்கு மணவாழ்க்கையும் கசந்துவிடும்.

ஆக உங்கள் மணவாழ்க்கை சந்தோஷகரமாக இருப்பதோ அல்லது துக்ககரமாக இருப்பதோ தினம் மாலை புருஷன் திரும்பிவந்த 10 நிமிஷங்கள் நீங்கள் நடந்து கொள்ளுவதை பெரும்பாலும் பொருத்திருக்கிறது.

ஜில்லா ஏஜண்டுகள் தேவை
ஜில்லா ஏஜண்டுகள் தேவை

நாடோடி எழுதிய புத்தகங்களை விற்பதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஸோல் ஏஜண்டு தேவை.

30% கமிஷன் தரப்படும்

10-12-46க்குள் எழுதவும்

நாடோடி

தியாகராயநகர் ★ சென்னை 17.

ஜப்பானிய வர்ணப் படங்கள்





ஜப்பான் வெண்கல, தந்த வேலைப்பாடுகள்









ஜப்பான் 'பிரின்டுகள்'

ஜப்பானிய ஸ்திரீகளின் 'பேஷன்'

★ குடும்ப வாழ்க்கை ★

எங்கள் பக்கத்து வீட்டிலுள்ள மாமியாருக்கும் மாட்டுப் பெண்ணுக்கும் உள்ள ஒற்றுமை சொல்லி முடியாது. கீரிப்பிள்ளையும் பாம்புங்கூட அத்தனை ஒற்றுமையாய் இருக்காதென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! இவர்களிருவரும் ஒருவர் மீது ஒருவர் காட்டிய வெறுப்பைப் பார்த்துவிட்டு கீரிப்பிள்ளைகளும் பாம்புகளும் ஒன்று சேர்ந்து ஒரு மகாநாடு கூட்டி "இனிமேல் கீரிப்பிள்ளையும் பாம்பும் போல் என்று உதாரணம் சொல்லி எங்களை அவமதிப்பது பிசகு. அதற்குப் பதில் மாமியாரும் மாட்டுப் பெண்ணும் போல் என்று சொல்ல வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினதாகக் கூடக் கேள்வி.

இந்த மாமியாரும் மாட்டுப்பெண்ணும் ஒரு நாள் தனித்தனியே மௌண்டு ரோட்டு எஸ்.வி.எஸ். நியூ தியேட்டரில் நடக்கும். குடும்ப வாழ்க்கை என்னும் நாடகத்தைப் பார்க்கச் சென்றார்கள். ஒருவர் சென்றது ஒருவருக்குத் தெரியாது. குடும்ப வாழ்க்கை நாடகத்தில் ஒரு மாமியார் தன் மாட்டுப் பெண்ணை பாடாய்ப் படுத்தி பம்பரமாய் ஆட்டி வைக்கிறாள் என்று கேள்விப்பட்டு "மாமியார்களாகிய எங்களை இப்படியும் பழிக்கலாச்சா" என்று அந்த மாமியார் அந்த நாடகம் பார்க்கச் சென்றாள். அதே நாடகத்தில் ஒரு மாட்டுப்பெண் தன் மாமியாரை இல்லாத ஆட்டமெல்லாம் ஆட்டி வைக்கிறாள் என்று அந்த மாட்டுப் பெண் கேள்விப்பட்டு "மாட்டுப் பெண்களாகிய எங்களை இப்படிப் பழிக்கலாச்சா" என்று அவளும் அந்நாடகம் பார்க்கச் சென்றாள்.

நாடகத்தில் அவர்கள் கண்ட காட்சிகள் அவர்கள் மனதை அப்படியே உருக்கின. அவ்வளவுதான். நாடகம் முடிந்ததும் அவ்விருவரும் ஒன்றுபட்டு மாமியார் மாட்டுப்பெண் என்பதை மறந்து ஒருவர் தோள்மீது ஒருவர் கை போட்டுக்கொண்டு வீடு திரும்பினார்கள்.

இதுவரை தாயாருக்கும் மனைவிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு இரு தலைக்கொள்ளி எறும்புபோல்

தவித்துக்கொண்டிருந்த வீட்டுப்புருஷன் இவர்கள் ஒற்றுமையைப் பார்த்துவிட்டு பரம சந்தோஷ மடைந்தான்.

ஆக குடும்ப வாழ்க்கை என்னும் இந்தநாடகத்தினுல் இத்தகைய மகத்தான சமூகத் தொண்டு ஒன்று நடந்து கொண்டிருக்கிறது.

நம் நாட்டில் மாமியார் மாட்டுப்பெண் சச்சரவு இல்லாத வீடே இல்லை என்று சொல்லலாம். இந்த சச்சரவைத் தீர்த்து வைப்பதற்கு, இது வரை வகை தெரியாது தவித்த வீட்டுப் புருஷர்கள் ஒரு நடை இந்த நாடகத்துக்கு அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு போவார்களானுல் தங்கள் கவலை தீர்ந்து விட்டதைக் காண்பார்கள்.

உணர்ச்சி ததும்பும் இந்நாடகத்தில் அப்படியே நாம் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கிவிடாதபடி காப்பாற்றுகிருர்கள் பல வேடங்களில் வந்து நம்மை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் ஸ்ரீ சாயிராமனும் ஸ்ரீ வேங்கடராமனும். இவர்களைவிடச் சிறந்த ஹாஸ்ய நடிகர்களை நான் சமீபத்தில் பார்த்ததாக ஞாபகமில்லை.

தத்ரூபமான காட்சிகளைக் கையாளுவதில் ஸ்ரீ வைரம் அருணுசலம் செட்டியார் மிகவும் சமர்த்தர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த நாடக ஆரம்பத்தில் காந்திஜி கொடி யேற்றுவது போலவும் அதற்கு ஒரு பக்கத்தில் நேருஜி வணக்கம் செய்வது போலவும் இன்னொரு பக்கத்திலிருக்கும நேதாஜி சடாரென்று திரும்பி மிலிடரி சல்யூட் அடிப்பது போலவும் ஒரு காட்சி வருகிறது. இவ்வளவு தத்ரூபமான காட்சியை ஸ்ரீவைரம் அருணுசலம் செட்டியார் எப்படித் தயாரித்தாரோ தெரியவில்லை. தத்ரூபம் நம் தலைவர்களை நேரில் பார்ப்பது போலவே இருக்கிறது. இத்தனை அழகிய காட்சி நாடகத்தின் ஆரம்பத்திலேயே வருவதால் எல்லாரும் குறித்த காலத்துக்கு பத்து நிமிஷம் முன்னதாகவே கொட்டகைக்குள் நுழைந்து விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனிட் ஸீட்லின்

எம். பி.

நம் நாட்டில் சட்டசபைக்கு நிற்கும் அபேட்சகர்களை தேர்தலுக்கு முன்னர் ஒரு நாளைக்கு நூறு தடவை பார்க்கலாம். நம் ஓட்டுக்காக அவர்கள் நம்மைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். ஆனால் தேர்தல் முடிந்த பிறகு அங்கத்தினர்களைப் பார்ப்பதென்றால் குதிரைக் கொம்புதான். திரும்பவும் இவர்கள் தரிசனம் கிடைக்க வேண்டுமானால் அடுத்த தேர்தல் வரை காத்திருக்க வேண்டியதுதான். ஆனால் சீமையிலோ! அங்கு நிலைமை எப்படித்தான் இருக்கிறது என்பதை எனிட் ஸீட்லின் எழுதியுள்ள இக் கட்டுரையைப் படித்து தெரிந்து கொள்ளுங்களேன். எம். பி. என்றால் மெம்பர் ஆப் பார்லிமெண்ட் அதாவது பார்லிமெண்ட் அங்கத்தினர் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இவ்வருஷம் ஏப்ரல் முதல் தேதி பார்லிமெண்ட் அங்கத்தினர் சம்பளம் உயர்த்தப்பட்டது. 1937ல் அறுநூறு பவுனாக இருந்த சம்பளம் ஆயிரம் பவுனாக உயர்த்தப்பட்டது. இதுமாதிரியே, மந்திரிகளின் சம்பளமும், எதிர்க்கட்சி தலைவரின் சம்பளமும் உயர்த்தப்பட்டது.

பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு முன்னைவிட வேலை அதிகமாகி விட்டதே சம்பள உயர்வுக்குக் காரணம். சட்டசபையில் உள்ளவேலையை விட பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு தன்னுடைய தொகுதியில்தான் வேலை அதிகம். ஜனங்களுக்கும் பார்லிமெண்டுக்கும் சரியான தொடர்பை ஏற்படுத்தாவிடில் ஜனநாயகம் நிலைத்து நிற்காது.

பார்லிமெண்டு அங்கத்தினர்கள் எவ்வளவு கடுமையாக வேலை செய்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக 34 வயதுள்ள ஆர்தர் பாமர் என்னும், "எம். பி"யைப் பற்றி சில விவரங்கள் இங்கே கொடுக்கிறேன்.

லண்டன் நகருக்குப் பக்கத்தில் உள்ளதும் 90,000 ஜனங்கள் கொண்டதுமான, விம்பிள்டன் என்னும் தொகு

ASSOCIATED CORPORATION OF

9/30, MOUNT ROAD,

A PRIDE TO US

It may be a long list although not exhaustive
And for all these well-known American lines,

BEAUTY PRODUCTS AND PERFUMERY
KATHLEEN MARY QUINLAN Inc. OF FIFTH AVENUE
Lipsticks, Rouges, Face Powders, Lotions, Creams, Cosmetics, Bath Oils, Perfumes in varieties to cultivate precious gift of beauty.

FOOD AND BISCUITS—National Biscuit Co.
(World's largest Biscuit Factory)
Nabisco Biscuits and Shredded Wheat.
BEECH-NUT JUNIOR and Strained Foods.

FLASHLIGHTS AND FANS
W. W. WELSH COMPANY—Air Flight Circular Fans.
USONA MANUFACTURING CO—Flashlights.
STARLITE BATTERY CO., INC—Flashlight Batteries.

HOUSEHOLD POLISHES—Simoniz Company.
Simoniz Household Polishes for floors and modern furniture in all shades.

HOUSEHOLD COOKING RANGES—Round Oak Coy.
Heaters and stoves, Gas, Oil and Electric, Combination, Ranges, Coal, and Gas or Coal and Electric or Coal and Wood, Water, Heaters, Gas, Oil and Electric.

MACHINERY—DIESEL ENGINES—MACHINE-TOOLS

COOPER-BESSEMER CORPORATION—Diesel Engines 100-1,500 B.H.P. and Air Compressors.

AMERICAN PRECISION PRODUCTS—Diesel Engines 7 & 15 B.H.P.

IDEAL ELECTRIC & MFG. Co.—Motors, Generators, Electrical Gear, Electroplating Generators.

THE SEBASTIAN LATHE COMPANY—Sebastian Precision Lathes.

WE SOLICIT YOUR ENQUIRIES AND WE

INDUSTRIES (AGENCIES), LTD.

MADRAS.

A SERVICE TO YOU

but it WILL be worth your reading through—

we are the Sole Representatives for South India:

CLEVELAND AUTOMATIC MACHINE CO.—Automatic Turret Machines, Hydraulic Die Casting Machines.

J. L. LUCAS AND SON INC.—Milling Machines

MAHR MANUFACTURING CO.—Industrial Furnaces, Burners, Blowers, Auxiliary Equipment, Rivet Heaters for use with Furnaces and other industrial heating equipment.

CENTURY AIRCRAFT CO.—Precision Aircraft instruments.

W. M. MAC DONAGH & SONS—De Scalers

LEOMINSTER TOOL CO. Inc.—Plastic Moulding Machines

METALS AND HARDWARE

REYNOLDS METALS CO.—Aluminium in foils and other forms.

HARDWARE & MACHINERY EXPORT CORP.—Hardware of all kinds.

HACKENSACK CABLE CORPORATION—Wire Ropes for all purposes.

PABST BLUE RIBBON BEER—CUBAN RUM

PABST SALES CO.—Pabst Beer, Tonic and Yeast.

ISIDORO JAUREGUIZAR—Cuban Rum and Liquors.

RADIO AND RADIO COMMUNICATION EQUIPMENT

LINK RADIO CORPORATION—Radio Communication Equipment.

JASON ELECTRONICS CORPORATION—Radios.

TRANSPORT

AMERICAN CAR & FOUNDRY EXPORT CO.—Railroad Cars, Carriages, Trolley Buses.

CORNFIELD MOTORS INC.—Delivery Trucks.

SPORT—Century Aircraft Co.

Deluxe and Standard Autocaddy for Golfers.

VITAMIN PRODUCTS—Walker Vitamin Products Inc.

HYVANOL—Vitamins and Selected Amino Acids in Synergistic Combination.

ASSURE YOU OF OUR PROMPT ATTENTION

திக்கு இவர் அங்கத்தினர். இவர் ஒரு மின்சார என்ஜினீர். பார்லிமெண்ட் அங்கத்தினர் ஆகியும் இவர் தம் மின்சார என்ஜினீர் வேலையை விடவில்லை. தம் தொகுதி வாசிகளை சந்திப்பதற்கு தம் தொழில் ஒரு நல்ல சாதனமாக இருக்கிறது என்று பாமர் கருதுகிறார்.

தம் தொகுதி வாசிகளைச் சந்திப்பதற்கு பாமர் மூன்று வழிகள் வைத்திருக்கிறார்.

முதல் வழி கடிதப் போக்குவரத்து மூலம். வாரத்திற்கு நூறு கடிதங்களுக்குக் குறையாமல் தொகுதி வாசிகளிட மிருந்து அவருக்கு வரும். ஒவ்வொரு கடிதத்திற்கும் இவரே நேரிடை பதில் போடுகிறார். ஒவ்வொரு வாரம் சுமார் 200 கடிதங்கள் பாமர் எழுதுகிறார். இவருக்குக் கிடைக்கும் ஒவ் வொரு கடிதத்திற்கும் இவர் இரண்டு கடிதங்கள் பதில் போடவேண்டி யிருக்கிறது—தொகுதி வாசிக்கு ஒரு கடித மும் அவர் குறையைப்பற்றி சம்பந்தப்பட்ட மந்திரிக்கு ஒரு கடிதமும் ஆக இரண்டு கடிதங்கள் எழுதுகிறார்.

தொகுதி வாசிகளில் மரியாதையாக எழுதுகிறவர் களும் உண்டு, மரியாதைக் குறைவாக எழுதுகிறவர்களும் உண்டு. இன்னும் தங்கள் சொந்தப் பிரச்னையைப் பற்றி எழுதுகிறவர்களும் உண்டு.

ஒரு சமயம் ஒருவர் இரண்டு மேஜோடு இரவலாக அனுப்பும்படி ஒரு பார்லிமென்டு அங்கத்தினருக்குக் கடிதம் எழுதினராம். இன்னொரு சமயம் ஒரு ஸ்திரீ "கிருஸ்துமஸ் சமயத்திற்குள் என் புருஷனை நீங்கள் சேனையை விட்டு அனுப்பாவிட்டால் நான் கெட்டுப்போய் விடுவேன்" என்று எழுதினளாம்.

பாமர் கையாளும் இரண்டாவது வழி ஒவ்வொரு வாரமும் ஒருநாள் சாயந்திரம் ஏழிலிருந்து ஒன்பது மணி வரை தொகுதி வாசிகளுக்காக அளிக்கும் பேட்டியாகும். அந்தசமயம் தொகுதிவாசிகள் தங்கள் குறைகளை இவரிடம் நேரேயே வந்து சொல்லிக் கொள்ளலாம். இந்த சமயத்தில் சட்டசம்பந்தமான குறைகளைத் தவிர அநேகர் தங்கள் வீட்டுக் குறைகளையும் சொல்லிக் கொள்வதும் உண்டு.

பரீட்சையில் தேருத பையனைப் பற்றியோ அல்லது தன் சம்மதமின்றி சாமான் வாங்கிய தன் மனைவியைப் பற்றியோ குறை சொல்ல வருபவர்களும் உண்டு.

பாமர், கையாளும் மூன்ருவது வழி பொதுக்கூட்டம் போடுவதாகும். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பாமர் அங்குள்ள டவுன் ஹாலில் கூட்டம் ஒன்று கூட்டுவார். தொகுதி வாசிகள் எல்லோரும் வருவார்கள். சர்க்கார் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று பாமர் விவரிப்பார். ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் அளிப்பார். இதைத் தவிர ஒவ்வொரு வாரமும் ஏதாவது பொதுக் கூட்டங்களில் பாமர் பேசிக்கொண்டிருப்பார்.

ஆக பார்லிமென்ட் அங்கத்தினர்களுக்கு அத்தனை வேலையிருக்கிறது. தங்கள் தொகுதி வாசிகளுடன் எவ்வளவுக் கெவ்வளவு அதிகத் தொடர்பு வைத்திருக்கிருேவோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது என்று பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள்.

நாடோடி

எழுதிய

அட பரமசிவா	...	ரூ.	3	0	0
படித்த பெண் வேண்டாம்	...	,,	3	0	0
ஹே, அனுராதா !	...	,,	3	0	0
ஒரு நாள் கூத்து	...	,,	3	0	0
என்னைக் கேளுங்கோன்னு	...	,,	3	0	0
எங்கள் குடும்பம் பெரிது	...	,,	2	8	0
பிழைக்கும் வழி (இரண்டாம் பதிப்பு)	...	,,	2	8	0
இதுவும் ஒரு பிரகிருதி (இரண்டாம் பதிப்பு)	...	,,	2	8	0
நாடகமே உலகம் (மூன்ரும் பதிப்பு)	...	,,	2	0	0
எல்லைப்புறத் தொல்லை	...	,,	2	0	0

நாடோடி

தியாகராயநகர் ★ சென்னை 17.

MANI'S TUTORIAL COLLEGE

LUZ, MYLAPORE, MADRAS

The Best of its kind in South India

Excellent Coaching for

Inter

B.A.,

B. Com.

B. Sc. &

B.A. (Hons.) Prely.

Ladies admitted

Hostel facilities for all

Classes have commenced

Join without delay

தீபாவளிப் புடவை

வழியில் வனஜா பேசினுல் கூட ராமச்சந்திரன் சரியாகப் பதில் சொல்லாமல் வள் வள் என்று விழுந்து கொண்டே வந்தான். அவன் ஆபீஸ் ஞாபகம் அவனுக்கு!

கடையில் இவர்களைக் கண்டதும் கடைக்காரன் இவர்களுக்காக என்று ரூ 150 இலிருந்து ரூ 300 வரையிலுள்ள புடவை ரகங்களை எல்லாம் எடுத்துப் போட்டான்.

ராமச்சந்திரன் வனஜாவுடன் ஆபீஸிலிருந்து வந்ததிலிருந்து கடு கடு என்றிருக்கவே அவளுக்கு புடவை எடுக்க வேண்டும் என்ற ஆவல் போய் விட்டது.

ஏதோ யோஜனையாய் உட்கார்ந்திருந்தராமச்சந்திரனை வனஜா "எந்த புடவை தேவலை என்று பாருங்கோளேன்" என்று கேட்டாள். உடனே சள் என்று ராமச்சந்திரன் "என்னை ஏன் தொந்தரவு படுத்துகிருய்? உனக்கு எந்தப் புடவை பிடித்தாலும் எடுத்துக் கோயேன்" என்ருன்.

"எனக்கு இங்கு ஒரு புடவையும் பிடிக்கலை"

"இன்னும் நாலு கடை போக நேரமில்லை, ஏதாவது நாலு புடவை எடுத்துக் கோ"

"எதை எடுக்க! இங்கிருக்கும் எல்லா கலர் புடவையும் என்னிடம் இருக்கு"

அதை ராமச்சந்திரன் காதில் வாங்காமல் இருக்கவே வனஜா ஏதேதோ தனக்குத் தோன்றிய நாலு புடவையை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினுள்.

மறுநாள் தீபாவளி. வீட்டில் உள்ள குஞ்சு குழந்தைகள் எல்லாரும் தீபாவளி ஸ்னனம் ஆகி புது உடை உடுத்திக்கொண்டாய்விட்டது.

இரவு வெகு நேரம் வேலை செய்த அலுப்பால் ராமச்சந்திரன் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வனஜா "எழுந்திருங்கோன்னு! விடிஞ்சால் அமாவாசை, நாளுங்கிழமையுமா இப்படி தூங்குவாளா?" என்று அவனை ஒருவாருக எழுப்பிவிட்டாள். ராமச்சந்திரன், "என்ன தீபாவளி நம்ம உசிரை வாங்க வருகிறது?" என்று கடிந்துக்கொண்டே எழுந்தான்.

அவன் தீபாவளி ஸ்னானம் எல்லாம் ஆனதும், திடீரென்று எதையோ நினைத்தவன்போல் "வனஜா! ட்ரைவர் வந்து விட்டானு பார்!" என்றுன்.

"ட்ரைவருக்குமட்டும் தீபாவளி இல்லையா? உங்களுக்கு $5\frac{1}{2}$ மணிக்குள் ட்ரைவர் வந்து விடுவானு என்ன?"

"ட்ரைவர் வந்து விடுவானேவா? டெர்பி கம்பெனி ப்ரொப்ரைட்டரை இன்று காலை 6 மணிக்கு பார்க்கரேன் என்று சொல்லியிருந்தேன். ட்ரைவரையும் சீக்கிரமே வாடா என்று சொல்லிருக்கேனே. முட்டாள் பயல்! ஒருவனும் நாம் சொல்வதைக் கேட்க மாட்டான்கள். நாம் ஒரு டயத்துக்கு வரச்சொன்னுல் அவன் ஒரு டயத்துக்குத்தான் வருவான். இவன்களை வைத்துக்கொண்டு என்ன பிஸினஸ் செய்கிறது" என்று தன் வேலை ஞாபகமாகவே அலுத்துக்கொண்டான்.

முதல் நாள் மாலை வாங்கிய நல்ல புடவையை கட்டிக்கொண்டு, அதைப்பற்றி ஏதாவது சொல்லுவார் என்று வெகு ஆவலுடன் இருந்த வனஜாவை ராமச்சந்திரன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

நேரே ஆபீஸறைக்குப் போய் தன் ஆபீஸ் வேலையை கவனிக்கலானுன். ட்ரைவர் வந்ததும் அவனுடன் வெளியில் கிளம்பிச் சென்றவன்தான். மத்தியானம் மணி 2 ஆகியும், ராமச்சந்திரன் வீட்டிற்கு வரவில்லை. சாப்பிட்டிற்காக வனஜா ராமச்சந்திரனின் வரவை எதிர்பார்த்தது தான் மிச்சம்.

இவர்கள் அனைவரும்

மனமுவந்து விரும்புவது



ஜாப்கோ
அழகு சாதனங்கள்

பாரதத்தின் உன்னத தயாரிப்பு

பிரில்லியன்டைன் • ஸ்னோ • ஹேர் குரோயர் • லைம் கிளிஸ் • சுகந்த காஸ்டர் ஆயில் • சுகந்த கோகோநட் ஆயில் • லிக்விட் பிரில்லியன்டைன் • சந்தண சோப் முதலியன

ஜயபாரதம் கோ,
பெங்களூர்.

ஆபீஸிலிருந்து ஆள் வந்து 'ஐயாவுக்கு சாப்பாட்டை ஆபீஸிற்கே கொணடுவரச் சொல்லிட்டாரம்மா? வீட்டுக்குவர நேரமில்லே?'' என்று சொல்லி எவர்ஹாட்டிபன் பாக்ஸில் ராமச்சந்திரனுக்கு சாப்பாட்டை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

இதைப் பார்த்த வனஜாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அந்த சமயம் என்று தான் பக்கத்து வீட்டு மாமி தன் புருஷனிடம் "அடுத்த வீட்டு வனஜாவுக்கு அவள் புருஷன் முந்நூறும், நானூறும் கொடுத்துப் புடவை வாங்கிக் கொடுத்திருக்கிறர். நீங்கள் என்னடான்னு முப்பது ரூபாய் புடவை வாங்கிக்கொடுத்துவிட்டு முந்நூறு தடவை எடுத்துக் கட்டிக்கச் சொல்லுகிறேளே'' என்று அலுத்துக்கொண்டது அவள் காதில் விழுந்தது.

இதைக்கேட்ட வனஜா "நம்மையும் ஒரு நாள் அவர் இப்படித்தானே நச்சரித்தார்! ஆனல் இன்று நம்மை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லே. இப்பொழுது அவர் ஆயிரக் கணக்கில் சம்பாதித்து என்ன பயன்! நம்முடன் குஷியாக ஒரு நாழிகூட இல்லேயே!'' என்று நினைத்த போது வனஜாவின் கண்ணிலிருந்து பல பல வென்று கண்ணீரே வந்துவிட்டது,

அப்பொழுது பக்கத்து வீட்டு மீனுமாமி தன் வீட்டில் பண்ணின பட்சணங்களே எடுத்துக்கொண்டு வனஜாவை "கங்கா ஸ்னனம் ஆச்சா'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள். அவளைக் கண்டதும் வனஜா கண்ணேத் துடைத்துக்கொண்டு "வாருங்கோ'' என்றுள்.

வனஜாவின் கண் கலங்கி இருப்பதைப் பார்த்த மீனு மாமி "என்னடி வனஜா உன் மூஞ்சியும் முகமும் நன்னுவே இல்லேயே! உடம்பு சரியா இல்லேயா? ஏன் கண் கலங்கி இருக்கு'' என்று கேட்டாள்.

"ஒண்ணும் இல்லேயே! மாமி!''

"என்னண்டை பொய் சொல்லறையே! உன்னேப் பாத்தால் நீ அழுதுண்டிருந்தே போல இருக்கே''.

"ஆமா! நாளும் கிழமையுமா நான் ஏன் அழறேன்?''

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

★

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80வரை நூல்கள்.

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்திபெற்றவை நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

★

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

தற்சமயம் நூல் கட்டுப்பாடு இருப்பதால் நூல் வேண்டுகிறவர்கள், அந்தந்த மாகாண அல்லது சமஸ்தான நூல் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

“ஆமா உன் வாய் அப்படி சொல்லறதே ஒழிய கண் அழுரு அழுரு என்றதே! உனக்கு என்ன குறைச்சல்? ஆத்துக்காரர் ஆயிரமாயிரமாய் சம்பாதிக்கிருர்! ஆமா நீ இப்ப கட்டிண்டிருக்கயே இந்த் புடவை என்ன விலே!”

“விலேக்கென்ன விலே? ரூ. 250. உங்க புடவை என்ன விலே.”

“ஆமா! என் புடவை என்ன அப்படி விலே இருக்கப் போறது. என் புடவை விலே 20 ரூபாய் தான். இந்த புடவையைக் கட்டிக்க எனக்கு ஆயிரமுபசாரம் செய்கிருர். மாமா அந்த நாளில் வேலேமும்மரத்தில் என்னேக் கவனிக்கக்கூட மாட்டார். இப்பொழுது தான் ரிடயர் ஆகி ஆத்தில் இருப்பதால்—”

“ஆசை திரும்பியிருக்கிறது போலிருக்கிறது!” என்று வனஜா வாக்கியத்தை முடித்தாள்.

நாடோடி

மாதப் புத்தகமும், மற்றும் நாடோடி எழுதிய எல்லாப் புத்தகங்களும், ஹிக்கின்பாதம்ஸ் புத்தகசாலேகளிலும். சுதேசமித்திரன் புத்தகசாலேகளிலும் இன்னும் எல்லா பிரபல புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

கும்பகோணம்

டி.எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை

கூந்தல் வளர்ச்சிக்கும்,

சந்தனாதி & அரக்கீரை விதைத் தைலங்களை

சிரசின் குளிர்ச்சிக்கும் உபயோகிங்கள்.

★

மதராஸ் ஸிடி ஏஜண்ட் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
திருவல்லிக்கேணி,
மதறாஸ்.

கோவை ஏஜண்ட் :—
B. பால பட்டாபி,
வைஸ்யாள் தெரு,
கோயம்புத்தூர்.

சோனல்
(SONAL)

படை, பரு, கரப்பான் சொறி, சிரங்கு முதலிய வற்றுக்குச் சிறந்தது.

டின் 1-க்கு அணு 6

பயோசரசா
(BIOSARASA)
(ரத்த சுத்தி மருந்து)

மேக ஊரல், சூலை நீர், பக்ஷவாதம் கை, கால் இடுப்பு வலிகள், சொறி சிரங்கு முதலிய வற்றுக்குக் கைகண்ட மருந்து,

பாட்டில் 1-க்கு 2—8—0

Manufactured by :—
BHARATH DRUG HOUSE, MADURA.

Sole Distributors :
T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்,
மருந்து ஷாப் : : மதுரை.

Madras City Agents:—A. S. NAYAGAR & CO,
2, Subramaniam Lane, Rattan Bazaar, Madras.

Andhra Dist. Agents:—GARISON COMMERCE,
Governorspet, Bezwada.

Coimbatore & Salem Agents :—K. VEERASWAMI
83-B-M.N.G. Street, Coimbatore.



தமிழர்கள் எதை மறந்தாலும் மறப்பார்கள், ஏதை வேண்டுமானாலும் தியாகம்செய்வார்கள். ஆனால் காப்பியை மாத்திரம் மறக்கவும் மாட்டார்கள்; விடவும்மாட்டார்கள். அதுவும் கணேஷ்காப்பியை நிச்சயம் மறக்கவே மாட்டார்கள். குடும்பங்கள் குதூகலமாக இருக்க உதவுவது கணேஷ் காப்பியே!

Retail Branches:

285, China Bazar Road, Madras.
71, Pondy Bazar, T'nagar.

இந்தியன்  பாங்க்

லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், முதல் லைன் பீச், சென்னை.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

மதருஸ்ஆபீஸ்கள்: எஸ்பிளனேட், மவுண்ட்ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 50,79,613
ரிஸர்வ் நிதி ...	ரூ. 56,87,200
டிபாஸிட் (30-6-46)	ரூ. 17 கோடிக்குமேல்

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்

N. கோபால அய்யர்
செக்ரெடரி

நாடோடி ஆவணக் காப்பக நூலகம்

Printed at Hindi Prachar Press, Madras P. I. Card 154—11—46.
Nadodi P.I. Card Q.H. No. Ms. 120 B.

198947



தக்ஷிண த்வாரகை என்று ப்ரஸித்தி பெற்றுள்ள
மன்னார்குடியில் கோயில்கொண்டுள்ள
ஸ்ரீ ராஜமன்னார்.

Photo By Sri. V. Narasimhan.,
1 Armenian St., Madras-1,



உடுப்பி க்ஷேத்திரத்தில்
மத்துக்கண்ணனாக நித்யஸேவை அளித்தருளும்
ஸ்ரீ க்ருஷ்ணன்.

ஸ்ரீ
ரேணுகாவின்

தியாகய்யா

(தெலுங்கு)

சினிமா சரித்திரத்திலேயே தனி இடம் பெற்றுவிட்ட இந்தப்படம்

ஆந்திரா
தமிழ்நாடு
மைசூர்
திருவாங்கூர்

ஆகிய எல்லா இடங்களிலும் வெகு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது

●

போட்டோகிராபி	கதை—சினேரியோ டைரக்ஷன்	வசனம்
எம். ஏ. ரஹ்மான்	நாகய்யா	சமுத்ராலா

ஸ்ரீ ரேணுகா பிலிம்ஸ் லிமிடெட்

தியாகராயநகர் — சென்னை-17

ஜாக்கிரதை!!!

"உங்கள் மனிதர்" உண்மையில் தரகரே!

- வெளுத்ததெல்லாம் பாலல்ல, கருத்ததெல்லாம் நீரல்ல. அதைப் போல கையில் கண்ணாடியும் சாவணமும் வைத்திருப்பவர்கள் எல்லோரும் வைரப் பரிட்சை நிபுணர்கள் இல்லை. உங்கள் சந்தேக கற்பனைக்காக இவர்கள் வைரப் பரிட்சை சம்பந்தமான இரண்டொரு வார்த்தைகள் அரையும் குறையுமாகக்கற்று வைத்திருப்பார்கள்.
- உங்களுக்கு நல்ல வைரம் கிடைக்கிறதா என்பதைப் பற்றி இந்த நிபுணர்களுக்கு கவலையில்லை. தங்களுக்கு எங்கே அதிகக்கமிஷன் கிடைக்கிறது என்பதுதான் இவர்களின் நோக்கம்.

நாணயமான வைர வியாபாரிகள்

- உங்களிடம் அக்கரை கொண்டுள்ளனர். உங்களுடைய நன்மதிப்பைப் பெற எல்லா வழிகளிலும் முயற்சி செய்கின்றனர். ஏனெனில் உங்களெல்லோருடைய நன்மதிப்பே இவர்களின் கீர்த்தி.
- நாணயமாகவும் நேர்மையாகவும் வியாபாரம் செய்வதினாலேயே இவ்வியாபாரிகள் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகிறார்கள்.
- நீங்கள் இக்கீர்த்தி வாய்ந்த வியாபாரிகளிடத்தில் நேரிடையிலேயே வியாபாரம் செய்யுங்கள். உங்களுக்கு நம்பிக்கையான பொருள் லாபகரத்துடன் கிடைக்கும்.

இவற்றைக் கையாளுகிறவர்கள் எல்லாரும் நிபுணர்களல்ல!

ஸூராஜ்மல்ஸ்

நம்பிக்கையான வைர வியாபாரிகள்

ஸ்தாபிதம்: 1895

313, எஸ்பிளனேட், சென்னை

Wrapper printed at P. A. S. Press, Post Box No. 349, Madras - 2